கல்கி

KALKI 12.12.2004 ரூ.6.00



Very
மியூசிக் / ஸ்பெஷல்



திறக்கப்பட்டுள்ளது!
கதீட்ரல் சாலையில் ப்ரின்ஸ் ஜுவல்லரி.
ஒரு தங்கமயமான ஷாப்பிங் அனுபவத்தை இங்கு உணர்வீர்கள். ஒவ்வொரு அலமாரியில் உள்ள ஜொலி ஜொலிப்பும், மினுமினுப்பும் ஒரு அழகிய கவிதையை சொல்லும். நிலமகள் தந்த செல்வத்தையெடுத்து உங்களுக்காக அழகிய ஒவியமாக வடிவமைத்துத் தருகிறோம்.
ப்ரத்யேக டைமண்ட் பிரிவு
தங்கம், ப்ளாட்டினம்களுக்கு தனி பிரிவு
விசாலமான கார் பார்க்கிங்
rubecon
PRINCE JEWELLERY
NOW AT CHENNAI: NO: 41, CATHEDRAL ROAD, Tel: 2811 7720/30/40
ALSO AT CHENNAI: PANAGAL PARK, Tel.: 2436 3137 • G-15A, SPENCER PLAZA, PHASE-I, Tel.: 2849 5817


வெல்கம் டு மியூசிக் ஸ்பெஷல்!




கல்கி 12.12.2004

மிக விரைவில்...


இளமை ததும்பும் கலர்ஃபுல் தொடர்!



சுஜாதா



பிராயச் சித்தம்



✉ அறநிலையத்துறையின் கட்டுப் பாட்டுக்குள் சென்றால் காஞ்சி மடத்தின் நியமங்களுக்கும் பூஜைக்கும் கேடு வரும் எனும் தங்களின் அனுமானம் வெற்று மாயை. தமிழகத்தின் பெருங் கோயில்கள் பலவற்றை அறநிலையத்துறை செவ்வனே நிர்வகிக்கவில்லையா? கலைஞரின் ஆலோசனை சிந்திக்கத்தக்கதே!

மணவாள நகர், பொன். இளவேற்கோ

✉ "கண்ணீரில் கரைந்த கலாம்...!" கட்டுரை படிக்கப் படிக்க, எங்கள் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர்! சாதாரண மக்களிடத்திலும் இவ்வளவு அன்னியோன்யம் காட்டும் கலாம், அரிய பொக்கிஷம்.

நெய்வேலி, எஸ். கண்ணன்

✉ 'ம.செ'யின் ஓவியத்தில் பாபாவைக் கண்டு உள்ளம் பூரித்தேன். 'நம்பிக்கை'க்காக பாபாவின் ஓவியக்கதை, ஸ்ரீ சாயி அமுதம், ஸ்ரீ சாயி அனுபவம், எல்லாமே கடைசிப் பக்கத்தில் நீங்கள் சொன்னதுபோலவே படு 'அட்டகாசம்' தான்.

வியாசர்பாடி, சிம்மவாஹினி

✉ காஞ்சி மடத்தை அரசு ஏற்க வேண்டும் என்ற கருத்து ஆபத்தானது. இஸ்லாமிய, கிறிஸ்தவ உடைமைகளை அரசு கவனமாகக் கை வைக்காமல் உள்ளது. இந்து உடைமைகளைக் கை வைக்க நினைப்பது பாவம்.

பொள்ளாச்சி, எம்.எஸ்.ஷர்மா

✉ தொடர்ந்து சில வாரங்களாக சினிமா நடிக நடிகைகளையே அட்டையில் போட்டு வந்த நீங்கள், இந்த வாரம் அதற்குப் பிராயச்சித்தம் தேடிக் கொண்டீர்கள்! ஓவியர் மணியம் செல்வத்தின் பாபா படம் சூப்பர் அழகு!

சென்னை - 30, கே. தெய்வசிகாமணி

✉ 'அண்ணலும் நோக்கியா? அவளும் நோக்கியா?' சிறப்புப் பார்வை சிறப்பாக இருந்தது!

சென்னை - 88, வே. முருகேசன்

✉ ஸ்ரீ சாயியின் அருளமுத வாக்கும், ஸ்ரீ சாயி அனுபவ விளைச்சல்களும் சோர்ந்து போயிருந்த உள்ளத்தைத் தொட்டெழுப்பும் மந்திரங்களாய் ஒலித்து ஒளிர்கின்றன!

குருமலை, சங்கர.கேசவன்

✉ ஸ்ரீ சாயி அபய ஹஸ்தம் கண்ணுக்கு விருந்து, ஸ்ரீ சாயி அமுதம் மனதுக்கு ஆறுதல், ஸ்ரீ சாயி அனுபவம் வாசகர்களுக்கு ஆனந்தம், ஆச்சர்யம்!

சென்னை -116, ஜே. துரைராஜ்

✉ கசிசிவகுமார் எழுதிய 'காதல் பேராறு' சிறுகதை படித்ததும், 'சொல்லத்தான் நினைக்கிறேன் சொல்லாமல் தவிக்கிறேன் - காதல் சுகமானது...'பாடல் வரிகள் ரீங்கரித்தன.

காமநாயக்கன் பாளையம்,
மா.மோகனராசன்

✉ லதா சேகர் போட்டுத் தந்த கணக்கினை (கார்க்கோடக மானேஜரும் பேக்கு மாணிக்கமும்!) நமது மாநில முதல்வியம்மா பார்க்க நேர்ந்தால், அரசு ஊழியர்கட்கு அறிவித்த சலுகைகளை



மீண்டும் பறித்து விடும் அபாயம் ஏற்பட்டாலும் ஏற்படலாம்!

கோயில்பட்டி, ச. ஆதிகேசவன்

✉ 'சங்கர மடத்தைக் காப்பாற்றுங்கள்' தலையங்கம், அந்தப் புனிதமான மடம் காப்பாற்றப்பட வேண்டும் என்ற எண்ணற்றவர்களின் மன ஆதங்கத்தைப் பிரதிபலித்தது. இளைய பீடாதிபதி விஜயேந்திரருக்கு நல்ல ஆலோசனை கூறியதுடன், போலியாக முதலைக் கண்ணீர் வடிப்பவர்களுக்கு இறுதியில் ஊசி குத்திய விதம் அபாரம்! சங்கர மடம் மீண்டும் பொலிவு பெற இறைவனைப் பிரார்த்திப்போம்!

அயன்புரம், த. சத்தியநாராயணன்

✉ 'மன்மதனை ரசிக்கலாம். குடும்பத்தோடு அல்ல' என்ற கடைசி வரிகள் மறுக்க முடியாத உண்மை.

திருவாரூர் - 1, டி. முருகேசன்

✉ 'பொம்மை'- போஸ்ட்கார்ட் சிறுகதையைப் படித்து அசந்து விட்டேன். பாராட்டு!

மும்பை-79, செந்தில்

✉ 'வழி என்ன?' சிறுகதையில் வாழ்க்கையில் வெற்றிபெற அதிர்ஷ்டமே தேவை என்பதை கதாசிரியர் விவரித்திருந்தார். ஜெயராஜின் ஓவியத்தில், கார் ஸ்டியரிங் அருகே இருக்கும் அண்ணன், தம்பியை விட இளமையாக இருக்கின்றாரே... கவனிக்கவில்லையோ?

நெய்வேலி, எஸ். சாந்தி

✉ எந்தச் சூழ்நிலையிலும் கல்கி தன் ஆன்மிகப் பணியைத் தொடரும் என்பதை நிரூபித்துக் கொண்டு வருகிறதே!

சென்னை - 91, அய்யாறு வாசுதேவன்

வட்டமேஜை

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இண்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் பேணலுக்கு

அரசே தப்பு செய்யத் தூண்டலாமா?



நாடு முழுவதும் அறுபத்தைந்து டாக்டர்கள் மாட்டிக் கொண்டு விழிக்கிறார்கள். அவர்களுள் பத்துப் பேர் தமிழர்கள்!

எந்தவொரு மருத்துவக் கல்லூரி துவங்கும் முன்பும் இந்திய மருத்துவ கவுன்ஸிலின் (எம்.சி.ஐ) நிபுணர் குழு, அந்த மருத்துவமனைக்கு வந்து, ஆய்வு நடத்தி, பின்னரே அனுமதி கொடுக்கும். அடிப்படைக் கட்டுமான வசதிகள் இருக்கின்றனவா, போதுமான, தகுதியான பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா, வேண்டிய உபகரணங்கள் உள்ளனவா என்று ஆராயப்படும். இப்போது நடந்திருக்கும் விஷயத்தில் கட்டுமானம், உபகரணத் தேவைகள் ஒரு பக்கம் இருக்க, பேராசிரியர்கள் நியமனத்தில்தான் 'அல்வா' கொடுக்கும் வேலை நடந்திருக்கிறதாம்.



• ரெட்டி



• தளவாய் சுந்தரம்

இந்த வருடம் தூத்துக்குடி, நெல்லை மற்றும் குமரியில் துவங்கி இருக்கும் அரசு மருத்துவக் கல்லூரிகளில், எம்.சி.ஐ.யின் நிபுணர் குழு ஆய்வு செய்ய வந்தபோது, சென்னை மற்றும் மதுரையில் பணிபுரியும் அரசு மருத்துவப் பேராசிரியர்கள், அந்த மூன்று கல்லூரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டார்களாம். நிபுணர் குழு விசாரித்தபோது "நாங்கள் இங்கேதான் பணிபுரிகிறோம்" என்று எழுத்து மூலமாக அவர்கள் சொன்னது மட்டுமல்லாமல், எம்.சி.ஐ.யை நம்ப வைக்க மாநில வருவாய்த் துறை மூலம் சில ஆதாரங்களையும் தாக்கல் செய்தார்களாம். ஆனால் எதிர்பாராத விதமாக உண்மை வெளிப்பட்டு, இப்போது மாட்டிக் கொண்டிருக்கிறார்கள் டாக்டர்கள்.

"புதிதாகத் தொடங்கப்படும் கல்லூரிகளுக்கு அனுமதியை வாங்க, இது போன்ற ஏற்பாடுகள் பல்லாண்டுகளாகவே நடக்கின்றன. ஆனால், இப்போது நாடு முழுவதும் பணியாற்றும் மருத்துவப் பேராசிரியர்களின் முழு விவரங்களை கம்ப்யூட்டரில் பதிவு செய்து வைத்திருக்கிறது எம்.சி.ஐ. எனவேதான் உண்மை வெளிப்பட்டு விட்டது.

மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்குவதில் கடுமையான விதிமுறைகளை அமல்படுத்தி வருகிறது எம்.சி.ஐ. சுப்ரீம் கோர்ட்டும் சில வழிமுறைகளைக் காட்டியிருக்கிறது. அரசுக் கல்லூரிகள் மாட்டிக் கொண்டு விடுகின்றன. ஆனால் தமிழக அரசு நினைத்தால், பதிவு ரத்து செய்யப்பட்ட டாக்டர்களின் பிரச்னையை எம்.சி.ஐ மற்றும் மத்திய சுகாதார இலாகாவுக்கு எடுத்துச் சொல்லி தீர்வு காண முடியும்" என்று சொல்கிறார், தமிழ்நாடு மெடிக்கல் பிராக்டீஷனர் சங்கத் தலைவரும் மாநில மெடிக்கல் கவுன்ஸில் உறுப்பினருமான டாக்டர் சி.எம்.கே. ரெட்டி.

இது பற்றி தமிழக அரசு என்ன சொல்கிறது?

"இப்போது நீக்கம் செய்யப்பட்டிருக்கும் டாக்டர்கள், ஓய்வு பெற்றவர்கள். தனியார் மருத்துவக் கல்லூரிகளில் நடந்த முறைகேடுகளால்தான் இவர்கள் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதில் அரசு ஒன்றும் செய்ய முடியாது. மேலும் அரசு மருத்துவக் கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியர்களை, புதிய கல்லூரிகளுக்குத் தேவைக்கு ஏற்றபடி மாற்ற அரசுக்கு முழு உரிமை உண்டு. ஒரு கல்லூரிக்கு அனுமதி கொடுக்கும் முன்பு அந்தக் கல்லூரிக்கு ஆசிரியர்களை நியமிக்கவும், சம்பளம் கொடுக்கவும் முடியாது. எனவே இதுபோன்ற மாற்று ஏற்பாடுகளை அரசு வழக்கமாகச் செய்யும். அதுவும் முறைப்படிதான் செய்வோம்" என்றார் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தளவாய் சுந்தரம்.

- ப்ரியன்

படங்கள்: **ராஜன்**

தம்புரு



சத்திய வழியைத் தேடிய சஞ்சய்!

சத்திய வழியில் உறுதியாக நிற்பது எத்தனை கஷ்டம் என்பதை, சஞ்சய் சுப்ரமண்யன் கச்சேரியில் தெரிந்துகொள்ள முடிந்தது!

நிறைந்து வழிந்த நாரத கான சபா அரங்கில், தமது இடக்கை வலக்கைகளுடன் பாடிக் கொண்டிருந்தார் சஞ்சய்! இடக்கை - மிருதங்கம் அருண்பிரகாஷ். வலக்கரம் வயலின் எஸ். வரதராஜன். இந்த ஆதரவுக் கரங்கள் போதாதென்று, சஞ்சயுடைய சொந்தக் கைகளும் இன்னும் சம்மணமிட்டு அமர்ந்த நிலையில் அசைக்கக்கூடிய உடலின் இதர பாகங்களும் சேர்ந்து அவரோடு பாடின. எல்லாவற்றையும் விட முக்கியமாக,



• சஞ்சய் சுப்ரமண்யன்

சஞ்சயின் அபாரமான மூளையும் பாடியது; இசையில் லயிப்பு கொண்ட அவரது இதயமும் பாடியது.

இந்தச் சேர்க்கையினால்தான் அம்புஜம் கிருஷ்ணாவுடைய பாடல்களால் மட்டுமே ஆன அன்றைய கச்சேரி (28.11.04), அவ்வளவு சிறப்பாக அமைந்தது.

டி.வி.எஸ். குடும்பத்தைச் சேர்ந்த டி.எஸ்.கிருஷ்ணாவின் மனைவி அம்புஜம் கிருஷ்ணா. இவர் பல்வேறு தெய்வங்கள் பேரில் நிறைய இன்னிசைப் பாக்கள் இயற்றினார். சுமார் அறுநூறு கிருதிகள் என்று அவரது குடும்பத்தார் கணக்குச் சொல்கின்றனர். அவற்றை முன்னணி வித்வான்கள் பலர் மெட்டமைத்துப் பாடி வருகின்றனர். ஒரு நூறு பாடல்களுக்கு, செம்மங்குடியின் சீடரான கே.ஆர்.கேதாரநாதன் இசை வடிவம் தர, நூல் வடிவமும் உருவாகியிருக்கிறது.

'கோலம் காண வாரீர்' என்று ஸ்ரீராமனின் மணக் கோலத்தை வர்ணிக்கும் நாட்டைக்குறிஞ்சி ராக கீர்த்தனையுடன் விறுவிறுப்பாகத் தொடங்கினார் சஞ்சய்.

'இனியாகிலும் நினை மனமே' என்ற பூர்வி கல்யாணி கீர்த்தனையில், 'மின்னல் வாழ்வு முடியும் முன்னம் கர்ம வினைகள் கணத்தில் அகல... இனியாகிலும் நினை மனமே' என்ற வரியை நிரவலுக்கு எடுத்துக்





கொண்டு, 'மின்னல்' வாழ்வின் மாயஜாலங்களைப் பாடகர் வெளிப்படுத்திக் கொண்டே வர, ஒரு கட்டத்தில் அருண்பிரகாஷ் 'ஏ மனமே! இப்போது நீ நினைக்கப் போகிறாயா இல்லையா!' என்று அதட்டுவதுபோல் ஒரு போடு போட... வரதராஜன் 'மின்னலாவது இடியாவது' என்று தமது சாத்வீக வாசிப்பைப் பிறழாமல் தொடர... இவ்வளவு சுவாரஸ்யத்துக்கிடையே நாம் பட்ட அவஸ்தை மறந்தே போயிற்று.

அவஸ்தை...? பாடலின் வார்த்தைகள் என்ன என்று உற்று உற்றுக் கேட்டுப் புரிந்து கொள்ளும் அவஸ்தை தான்!

அடாணாவில் கம்பீரமும் குழைவும் சேர, சஞ்சய் பாடிய 'தியாக ராஜஸ்வாமி பதாம்புஜம்' என்ற பாடல், 'யாக யோக சாதனை இன்றி' வெறும் சங்கீத உபாஸனையால் தியாக பிரும்மம் ஸ்ரீராமனை அறிந்து கொண்ட உயர்வைச் சொல்லிற்று.



• அம்புஜம் கிருஷ்ணா

ஆனால் நாமோ, யாக யோக ஸாதனைகளுக்கு ஒப்பான அகடிதகடினா முயற்சிகளைச் செய்தால் தான் சஞ்சயின் உச்சரிப்பைப் புரிந்து கொள்ளலாம்.

நம்முடைய அவஸ்தைகளைப் பற்றி துளியும் கவலையின்றித் தொடர்ந்தாலும், சஞ்சய், ஹமீர் கல்யாணி ஆலாபனையில் புதுப்புது கற்பனைகளைப் பூக்கச் செய்து பிரமிப்பூட்டினார். நிதானமான காலப் பிரமாணத்தில் (நினைந்துருகுவாய் நெஞ்சே என்ற கீர்த்தனை) கற்பனை ஸ்வரங்கள் பாட, வயலின், மிருதங்கக் கலைஞர்கள் இழைந்தும் மாறுபட்டும் ஜாலம் காட்டி கொள்ளை கொண்டனர்.

ஹமீர் கல்யாணியை அடுத்து கன்னட ராகத்தை எடுத்தாள்வது சரியா? என்று நாம் யோசிப்பதற்குள், சடபடவென்று அந்தக் குட்டிக் கீர்த்தனை (மரியேனி காவலனு-தெலுங்குப் பாடல்) முடிந்தே விட்டது!

சஞ்சயின் பைரவி ஆலாபனை, சாஸ்திரீய வார்ப்பில் கனமாக, நிறைவாக வெளிப்பட்டது.

மீண்டும் ஒரு சொல் நயம் மிக்க பாடல்... 'அஞ்சேல் என்று நீ அருளுடன் தந்த வேல்' என இம்முறை முருகன் பேரில். பாடிக் கொண்டே வந்த சஞ்சய், கீர்த்தனையை முடிக்காமலேயே 'சத்திய வழி தன்னில் சார்ந்து நான் நின்றிட....' என்று முற்றுப் பெறாத வாக்கியத்தை நிரவலில் (கஷ்டமான தாள அமைப்பு வேறு) கையாள, நாம் அந்த அழகிய வரியின் மறு பாதி என்னவாக இருக்கும் என்று விழிக்க... இதற்கிடையே பைரவி தனது விதவிதமான அழகுகளை நிரவல், கற்பனை ஸ்வரங்களில் அங்கே கொடி நாட்டிவிட்டுப் போய்விட்டது! அருண்பிரகாஷ் அட்டகாசமாய்த் தனியாவர்த்தனம் எடுத்தார்... சஞ்சயின் லய வித்தைகளுக்குச் சரிநிகர்ச் சமானமாய் வாசித்து முடித்தார்... அப்புறம்... அப்பாடா, இதோ அந்த வாக்கியத்தின் மறுபாதி:


'சக்தி வேல் எனக்கு சக்தி
அளித்திடும்!'

**'சத்திய வழி தன்னில் சார்ந்துநான்
நின்றிட
சக்திவேல் எனக்குச் சக்தி
அளித்திடும்'**

- சொல்லிப் பார்ப்பதற்கே சவாலாக அமைந்த இந்த அடியை, முழுசாய் நிரவலுக்கு எடுத்துக் கொண்டு மீண்டும் மீண்டும் பாடுவது இலேசுபட்ட காரியமா...? சத்திய வழியென்றால் சோதனைகள் நிரம்பித்தானே இருக்கும்! ○




Angels®
Advanced Clinic
hair, skin & body care
Since 1991
Website: www.angelsadvancedclinic.com



Dr. Radhika Reddy M.A., Ph.D.,
Doctor of Philosophy in Cosmetology
Recipient of Indira Gandhi Priyadarshini Award, Member of International Aestheticians, ENGLAND (1997)
Member of British Association of Beauty Therapy & Cosmetology, UK.

தேவையற்ற ரோமங்களுக்கான சிகிச்சை




முகத்திலுள்ள தேவையற்ற ரோமங்களை நீக்குவதற்கு பலரும் எலக்ட்ராலிசிஸிஸ் போன்ற சிகிச்சைகளையே நாடுகின்றனர். இவை, தற்காலிகமான தீர்வையே தருகின்றன என்பதோடு, பக்கவிளைவுகளையும் ஏற்படுத்தக்கூடும். ஆனால் ஏஞ்சல்சின் அட்வான்ஸ்டு லேசர் சிகிச்சை, ரோமங்களை வேர்களிலிருந்தே நீக்குவதால் அவை மீண்டும் வளர வாய்ப்பில்லாமல் போகிறது. இதில் லேசர் கதிர்களின் உதவியுடன் ரோமக்கால்களை வலுவிழக்கச் செய்வதன் மூலம் அனாவசிய ரோமங்கள் அறவே நீங்குகின்றன. இது பெண்களுக்கு மேல் தாடை - கீழ் தாடை - அக்குள் - வயிறு - மார்பகம் போன்ற பகுதிகளிலும் மற்றும் ஆண்களுக்கு தாடி, அக்குள் போன்ற பகுதிகளிலும் தேவையற்ற ரோமங்களை நீக்கி விடலாம்.

சிகப்பழகு பெற வேண்டுமா ?



சூரியக் கதிர்களால், தோலின் மெலனின் பிக்மென்ட் ஓவர் ஆக்டிவேட் ஆகி தோல் கறுப்பாகலாம். ஏஞ்சல்ஸின், Imported Inhibitors சிகிச்சையை உபயோகிப்பதன் மூலம் உங்கள் சருமத்தில் ஓவர் ஆக்டிவேட் ஆன மெலனின் பிக்மென்டுகளை லைட்டக்கலாம். இதன் மூலம் நிறத்தை மேம்படுத்தலாம். இவ்வாறு ஏற்படும் முன்னேற்றம் நிரந்தரமானதென்பது எங்களின் சிறப்பம்சமாகும்.

தலைமுடி வளர்ச்சி வேண்டுமா



பெரும்பாலன பெண்களுக்கு அடர்த்திதன்மையற்ற தலைமுடிக்கு HAIR REGROWTH சிகிச்சையில் வளர செய்யலாம். இச்சிகிச்சை முதல் முறையாக FDA (USA) - வால் அங்கீகரிக்கப்பட்டது. இது 100% பாதுகாப்பான சிகிச்சை.

ஏஞ்சல்ஸின் அட்வான்ஸ்ட் சிகிச்சைகள்

- பருக்களை நீக்க SKIN CARE THERAPY
- BREAST DEVELOPMENT & LIFTING THROUGH MICRO LIFTING TREATMENT
- பிரசவ கோடுகளை நீக்க COLLAGEN THERAPY
- தலைமுடி உதிர்தலை தடுக்க HAIR CARE THERAPY

- Hyderabad - (040)23222111, 55368999
- Vijayawada - (0866)2477149
- Vizag - (0891)2598697
- Rajahmundry - (0883)2461007
- Bangalore - (080)51153995

28, 3rd Avenue, T-53/98, (Opp. 14 Shops),
Rajeshwari Mansion, Anna Nagar, Chennai - 40.
Cell: 98400 46599.
Ph: 044 - 52176679 /26212547 / 26213468

“ஜெயந்தி வந்தா





தமிழக காங்கிரஸின் தலைமை மாற்றம் எந்த நேரமும் அரங்கேறலாம் என்ற பரபரப்பான சூழ்நிலையில், இப்பதவிக்கு உரியவராக மீடியாவால் சுட்டிக்காட்டப்படும் காங்கிரஸ் தேசியச் செயலாளர் சுதர்சன நாச்சியப்பனுடன் கொஞ்சம் ஸ்வீட் - கொஞ்சம் காரம் கலந்த சந்திப்பு:

செல்வாக்குமிக்க அரசியல் தலைவரின் வாரிசாக நீங்கள் இல்லாததை ஒரு குறையாக உணர்கிறீர்களா?

பெரிய அளவுல செல்வாக்கு இல்லைன்னாலும்கூட, எங்க குடும்பமும் காங்கிரஸ் பாரம்பரியக் குடும்பம் தான். ஆனா இதைக்கூட நான் ஒரு பலமாகத்தான் நினைக்கிறேன். வாரிசுக்கே தராம, புதியவர்களுக்கு வாய்ப்புத் தருவது, தொண்டர்களுக்கும் தலைமைக்கும் எம் மேல நம்பிக்கை ஏற்பட வழி செய்யும்.

ப. சிதம்பரத்துக்கு சிவகங்கையை விட்டுக் கொடுத்து, தலைமையின் அன்பை சம்பாதிச்சீங்க... அந்த அன்புக்குப் பரிசா என்ன எதிர்பார்க்கறீங்க?

விட்டுக் கொடுத்தேன்னெல்லாம் சொல்ல முடியாது. எங்க தலைவியோட சூழ்நிலையைப் புரிஞ்சு நடந்துக்கிட்டேன். அவ்வளவுதான். இதுக்காக நான் எதையும் எதிர்பார்க்கல.

இப்போது ப. சிதம்பரத்துக்கும் உங்களுக்கும் உறவு எப்படி இருக்கிறது?

ரொம்பத் திருப்தியா இருக்கு. கலைஞர் பாணியில சொல்லணும்னா, நானும் சிதம்பரமும் சிவகங்கைத் தொகுதிக்கு ரெட்டைக் குழல் துப்பாக்கி மாதிரி இருந்து சேவை செய்துக்கிட்டு இருக்கோம். எங்களைப் பிரிக்க முடியாது.

டெல்லியில் குறைந்த பட்சம் எத்தனை காங்கிரஸ் தலைவர்களைத் தெரிந்திருந்தால் பதவி கிடைக்கும்?

(சற்று உஷ்ணமாகி) "நீங்க சொல்றது மாதிரி நிலைமை இருக்கறது உண்மைதான். ஆனா, அது எல்லா சமயத்துக்கும் உதவாது. ஒருத்தரைப் பத்தி தெரிஞ்சுக்க, தலைமை நிறையப் பேர் கிட்ட அபிப்பிராயம் கேட்கறதுண்டு. அதுக்காக அவங்க சொல்ற எல்லோருக்கும் பதவி கிடைச்சுடாது. இறுதி முடிவை எடுக்கறது தலைமைதான்."

இரண்டு மாதங்களுக்கு முன்பு பேட்டியளித்த வாசன், 'வெற்றியை நிர்ணயிக்கும் கட்சி காங்கிரஸ்' என்று சொன்னார். இந்தியாவை ஆண்டு வரும் காங்கிரஸுக்கு இந்தப் பட்டம் பெருமை தரக் கூடியதா?

அவர் தலைமைப் பொறுப்பில் இருக்கிறார். அதனால் அவரால் அப்படித்தான் பேச முடியும். மாறாக 'ஆட்சியமைக்கும் கட்சி' என்றெல்லாம் கூறி



சந்தோஷம்தான்”

- சுதர்சன நாச்சியப்பன்

னால், கூட்டணிக்குப் பங்கம் வந்துடும் என பயந்தும் இப்படிக் கூறியிருக்கலாம். ஆனால் இதையும்கூட பாஸிட்டிவாக எடுத்துக் கொண்டு பார்த்தால் பெருமைதான்.

காங்கிரஸில் நீண்ட நாட்களாகவே தேசியச் செயலாளர்களாக இருந்தவர்களையெல்லாம் மாநிலத் தலைவராக்கி பதவியிறக்கம் செய்யும் போக்கு நீடித்து வருகிறது. (லேட்டஸ்ட்டாக வாசன்) இது கட்சியைப் பலவீனப்படுத்தாதா?

உண்மையைச் சொல்லணும்னா, தேசியச் செயலாளர் பதவிங்கறது ஒண்ணும் பெரிய பிரமோஷன்னு எடுத்துக்க முடியாது. திரும்ப மாநிலத் தலைவராகப் போட்டால் டி-பிரமோஷன்னும் சொல்ல முடியாது. காங்கிரஸ்ல பெரும்பாலான பதவிகள் நியமனப் பதவிகள்தானே? அதனால இதையெல்லாம் ஏத்துக்கிட்டுத்தான் ஆகணும்.

தேசிய அளவில் இருக்கிற மாதிரி தமிழக காங்கிரசுக்கும் பெண் தலைவரை நியமிக்கப் போகிறார்களாமே...?

(சட்டென்று சிரித்து விட்டு) அப்படியா... நேரடியாவே சொல்றேன். ஜெயந்தி தலைவராக வந்தா எனக்குச் சந்தோஷந்தான். அவங்க தாத்தா காலத்துல விழுந்த காங்கிரஸ், பேத்தி காலத்துல தலை நிமிர்ந்துச்சுன்னா, அதைவிடப் பெருமை என்ன இருக்கு?

உங்களுக்குக் கொடுத்தால் வேண்டாம் என்று கூறிவிடுவீர்களா என்ன?

எதையுமே கேட்க மாட்டேன். வேண்டாம் என்றெல்லாம் சொல்றதுக்கு நான் ஒண்ணும் துறவி இல்ல. ஒரு காலத்துல கேட்டிருக்கேன். ஆனா இப்போ சமீப காலமா, எந்தப் பதவியையும் நானா கேட்கல. கொடுத்த பதவிக்கு வேலை பார்த்துக்கிட்டு இருக்கேன். வேற எது கொடுத்தாலும், அதுக்குத் தகுந்த மாதிரி ஒர்க் பண்ண வேண்டியதுதான்.”

ஆக, தமிழகத் தலைமையை மாற்றும் சூழ்நிலை வந்துவிட்டதென்று கூறுகிறீர்களா?

அப்படிச் சொல்ல முடியாது. காங்கிரஸைப் பொறுத்தமட்டில் எந்தப் பதவியுமே அகில இந்தியத் தலைமை விரும்பற வரைக்கும்தான். அவங்கதான் சுப்ரீம் அத்தாரிட்டி. இப்போதைய நிலைமை என்னன்னா, கட்சிக்கு உறுப்பினர் சேர்க்கை நடந்துட்டிருக்கு. அதற்கப்புறம்தான் எதையுமே சொல்ல முடியும். ஆனா ஒண்ணு, காங்கிரஸ்ல இந்த மாதிரி விஷயத்துல சொல்ல மாட்டாங்க, செய்வாங்க.

கோஷ்டியை ஒழிக்க சோனியா காந்தி உங்களிடம் யோசனை கேட்டால் என்ன சொல்வீர்கள்?

ஆளுக்கொரு வேலையைக் கொடுங்கன்னு சொல்லுவேன். அப்பத்தான் ஒவ்வொருத்தரும் அவங்க அவங்க வேலைல பிஸியா இருப்பாங்க. கோஷ்டிச் சண்டையே வராம இருக்க இதைவிடப் பெரிய யோசனை எதுவும் சொல்ல முடியாது. *(சிரிக்கிறார்).* கோஷ்டியை ஒழிக்க முடியாது. வேணும்னா சண்டையைக் குறைக்கலாம்.

ஜயேந்திரர் கைது தொடர்பாக பா.ஜ.க.வின் போராட்டத்தைக் கண்டு காங்கிரஸ் மிரண்டு போயுள்ளதுதானே?

எதற்கு மிரள வேண்டும்? சென்ற தேர்தலில் தோற்று ஊனமுற்ற கட்சியாக மாறிவிட்ட பா.ஜ.கவுக்கு, இந்த விஷயம் ஊன்றுகோல் மாதிரி கிடைச்சிருக்கு. அவ்வளவுதான். இதை வைத்து அவர்களால் ஒன்றும் பெரிய அளவில் சாதிக்க முடியாது. பா.ஜ.கவின் கதை முடிந்த கதை.

- இரா. முத்துக்குமார்

படம்: **ராஜன்**

குறட்டைக்கு குட்பை!



'கல்கி 29.11.2004 இதழில் நாம் வெளியிட்டிருந்த 'குறட்டை' குறித்த மருத்துவக் கட்டுரைக்கு வாசகர்களிடையே நல்ல வரவேற்பு. பலரும் தங்கள் குறட்டைப் பிரச்னை குறித்து மருத்துவர்களை நாடியதும், நலம் பெற்றதும் நமக்கு வந்த கடிதங்களின் மூலம் தெரிகிறது. அவர்களுள் ஒருவர்தான் தொழிலதிபர் அகர்வால். முப்பத்து நான்கு வயதாகும் இவரது சொந்த ஊர் கொல்கத்தா. நன்றாக சுறுசுறுப்புடன் தொழில் செய்து வந்த அகர்வாலால், சில மாதங்களாக நிம்மதியாகத் தூங்க முடியவில்லை. குறட்டையால்தான் பிரச்னை!



'தூங்கும்போது நான் பலமான குறட்டைச் சத்தத்தை எழுப்புவதால், இரவு நேரத்தில் என் மனைவி, மகன் ஆகியோர் வேறு அறைக்குச் சென்று படுத்துக் கொள்வார்கள். விமானத்திலோ, ரயிலிலோ செல்ல முடிவதில்லை. பயணத்தில் நான் தூங்கினால், பிற பயணிகள் தூங்க முடியாத அளவுக்குக் குறட்டைச் சத்தம். ஆத்திரமடையும் பிற பயணிகள் என்னை எழுப்பி உட்கார வைத்து விடுவர்.

நிம்மதியாகத் தூங்க முடியாததால், அடிக்கடி சோர்ந்து போனேன். தொழிலில் கவனம் செலுத்த முடியவில்லை. பல மருத்துவர்களைச் சந்தித்தேன். 'கோவையில் உள்ள விக்ரம் மருத்துவமனைக்குச் சென்று பாருங்களேன்' என்று ஒரு மருத்துவர் வழி காட்டினார்.

அங்கு எனக்கு நேசல் எண்டாஸ்கோப்பி சோதனை மேற்கொள்ளப்பட்டது. மூக்கின் விட்டம் வளைந்திருந்தது, சதை அதிகமாக வளர்ந்திருந்தது. சிறு நாக்கின் அடர்த்தியும் அதிகமாக இருந்தது.

'ஸ்லீப் - லேப்' சோதனையும் செய்தார்கள். இதயத் துடிப்பு, மூளையின் செயல்பாடு, மூக்கு மற்றும் வாய்க்குள் காற்று செல்லும் போக்கு, நாடித் துடிப்பு, ரத்தத்தில் கலக்கும் ஆக்ஸிஜனின் அளவு, ரத்த அழுத்தம் ஆகியவை கணக்கிடப்பட்டு, பாதிப்புக்கள் அடையாளம் காணப்பட்டன.

LAVP என்னும் சிறப்பு லேசர் சிகிச்சை மூலம் சிறுநாக்கின் அடர்த்தி குறைக்கப்பட்டது. 'செப்டோபிளாஸ்டி' மூலம் மூக்கு சீரமைக்கப்பட்டது. 'டர்பினோபிளாஸ்டி' மூலம், மூக்கின் சதை சுருக்கப்பட்டது.

அப்புறமென்ன? என் வாழ் நாளில் வசந்தம் வீசும் நாள் வந்தது. நிம்மதியான தூக்கத்தை மீண்டும் அனுபவிக்கத் தொடங்கி விட்டேன். என் குடும்பத்தினருக்கும் உற்சாகம்" என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்திருக்கிறார் அகர்வால்.

குறட்டைப் பிரச்னைக்குத் தற்போது KTP லேசர் மற்றும் சென்சரா மைக்ரோஸ்டேட் உதவியுடன் சிகிச்சைகள் துல்லியமாக வழங்கப்படுவதால், ஒரே நாளில் பிரச்னை தீர்ந்து விடுகிறது. காது, கழுத்துப் பகுதியைக் கிழித்து, அறுவை சிகிச்சை செய்யும் முறை இதனால் தவிர்க்கப்படுகிறது.




* KTP லேசர் கருவி

"விக்ரம் மருத்துவமனை இதில் நிபுணத்துவம் பெற்று விளங்குகிறது" என்கிறார் அகர்வால்.

- தெனாலி




Starting Price
Rs. 9,999/-
More than 50 Models









மீண்டும் சிபு ஸோரன்!

'போன மச்சான் திரும்பி வந்தான்' கதையாக, சிபு ஸோரன் மீண்டும் அமைச்சரவைக்குள் ஏற்கப்பட்டிருக்கிறார்!

"தீரத்துடன் போராடித் திரும்பியிருக்கிறேன்" என்கிறார் ஸோரன்! தரகு செய்வதற்குப் பெயர்தான் தீரம் என்றால், நன்றாகவே பேரம் பேசக்கூடிய தரகரான சிபு ஸோரனும் ஒரு தீரரே!

பேரம் என்ன...?

மக்களவையில் சிபு ஸோரனின் ஜே.எம்.எம். கட்சி பெற்றிருப்பது ஐந்து இடங்களே. அந்தக் கட்சியின் ஆதரவு இல்லாவிட்டால் மத்திய அரசு கவிழ்ந்து விடாது.

ஆனால், ஜார்கண்ட் மாநிலத்தில் தேர்தல் வருகிறது. அங்கு தற்போது பா.ஜ.க. ஆட்சியில் இருக்கிறது. ஜார்கண்ட் மாநிலத்தை காங்கிரஸ் கைப்பற்றி, பா.ஜ.கவைத் தோற்கடிக்க வேண்டும். ஆனால், தனித்து அதைச் செய்வது காங்கிரஸுக்கு இயலாத காரியம். லோக்கல் கட்சியான ஜார்கண்ட் முக்தி மோர்ச்சாவுடன் கூட்டணி வைத்துக் கொண்டால்தான் அது கைகூடும். ஜே.எம்.எம்.மின் முக்கியத் தலைவர் சிபு ஸோரன். கல்தா கொடுக்கப்பட்ட அவரை மீண்டும் அமைச்சரவையில் ஏற்று மகிழ்வித்தால்தான் கூட்டணிக்குச் சம்மதிப்பார். அந்தச் சம்மதத்துக்கு விலையாகத்தான் நிலக்கரி அமைச்சகத்தை சிபு ஸோரனுக்குப் பழையபடி தூக்கிக் கொடுத்திருக்கிறது




கல்கி



2004 டிசம்பர் 12
தாரண கார்த்திகை 27
மலர் : 63
இதழ் : 20

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



காங்கிரஸ். தீரர் ஸோரனின் 'சத்தியாக்கிரஹ' போராட்டம் வெற்றி!


மன்மோகன்சிங் இதற்கு மனமொப்பிச் சம்மதம் அளித்தாரா என்பது நமக்குத் தெரியாது. ஆனால், குறைந்தபட்சம் இந்த 'நல்ல காரியம்' குறித்து சப்பைக்கட்டு கட்டாமலாவது அவர் இருந்திருக்கலாம்!

'இந்த முடிவை பா.ஜ.க. ஒரு பெரிய பிரச்னையாக எழுப்ப முடியாது!' என்று அவர் சொல்லி முடிப்பதற்குள், அக்கட்சியினர் ஸோரன் விஷயத்தை நாடாளுமன்றத்தில் எழுப்பப் போவதாக உறுதி கூறிவிட்டனர்! போதாக்குறைக்கு, "எந்த அடிப்படையில் சிபு ஸோரன் பதவி விலகினாரோ, அந்த அடிப்படையே தற்போது அற்றுப் போய்விட்டது" என்று பிரதமர் சொல்வது, பெருத்த அதிர்ச்சியும் ஏமாற்றமும் அளிக்கிறது.

கொலை வழக்கில் ஜாமீனற்ற கைது வாரண்ட் சிபு ஸோரனுக்கு எதிராகப் பிறப்பிக் கப்பட்டது. இதையொட்டி அவர் தலைமறைவானதும், வேறு வழியின்றி அமைச்சரவை யிலிருந்து நீக்கப்பட்டதும், பின்னர் அவர் சரணடைந்து ஒரு மாதம் நீதிமன்றக் காவலில் இருந்துவிட்டு ஜாமீனில் வெளியேறியிருப்பதும் பழைய வரலாறுகள் அல்ல. கடந்த சில மாதங்களுக்குள்தான் இத்தனையும் நடந்துள்ளன. ஜாமீனில் வெளியேறியிருக்கும் ஒரு கைதிக்கு, அமைச்சர் பொறுப்பைத் தருவது என்பது எந்த வகையில் ஏற்கக் கூடியது?

'குற்றம் நிரூபணமாகிறவரை யாருமே குற்றவாளி அல்ல' என்பது நிரபராதிகளுக்குச் சட்டம் வழங்கும் பாதுகாப்பேயொழிய, குற்றம் சாட்டப்பெற்றவர்களுக்கு அளிக்கிற கூடுதல் உரிமை அல்ல. குற்றம் சாட்டப்பட்டுக் கைதாகி, விசாரணையைச் சந்தித்துக் கொண்டிருப்பவர்களை அமைச்சரவையில் ஏற்பது மோசமான முன்னுதாரணம். 'லல்லு பிரசாத் யாதவ் அமைச்சராக இருக்கிறபோது நான் ஏன் இருக்கக் கூடாது' என்று சிபு ஸோரன் வாதாடியிருக்கக் கூடும். இரண்டு தேர்வுகளுமே மாபெரும் தவறுகள் தானேயொழிய ஒன்றினால் மற்றொன்றை நியாயப்படுத்த முடியாது.

இந்தச் சூழ்நிலையில், ஒரு பொதுநல மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம், மத்திய



அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. வி.வி.ஐ.பிக்கள் பேரிலான வழக்குகளை விரைந்து நடத்தும்படி கோருகிறது இந்தப் பொதுநல மனு. செல்வாக்கு மிகுந்தவர்களோ அரசியல்வாதிகளோ சம்பந்தப்பட்டுள்ள வழக்குகள், அவர்களுடைய செல்வாக்கினால் திசை திருப்பப்படுகின்றன; வலுவிழந்து போகுமாறு செய்யப்படுகின்றன; காலவரையறையின்றி ஒத்திப் போடப்படுகின்றன என்பதையெல்லாம் சுட்டிக் காட்டுகிறது இப்பொதுநல மனு. குறிப்பாக, சிபு ஸோரன் பேரிலான வழக்கு இருபத்தைந்து ஆண்டுகளாக நடைபெறாமலிருப்பதைத்தான் மனுதாரர் உதாரணமாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார். நாடு முழுவதும் இத்தகைய பல வழக்குகள் நிலுவையில் இருப்பதையும், நீதியமைப்பு முற்றிலுமாகச் செயலற்றுப் போயிருப்பதையும் வலுவாக எடுத்துரைக்கிறது வி.கே.ஓரி தொடுத்துள்ள பொதுநல வழக்கு.

இந்தப் பொதுநல வழக்கைச் சந்தித்து, உச்சநீதிமன்றத்தின் நோட்டீஸுக்குப் பதில் சொல்ல வேண்டிய மத்திய அரசுதான், சிபு ஸோரனை இரு கரம் நீட்டி வரவேற்று மீண்டும் அமைச்சராக்கியிருக்கிறது!

பதவியைத் திரும்பப் பெற்றுள்ள ஸோரன், "சிபு ஸோரனானால் என்ன, சங்கராச்சார்யாரானால் என்ன... சட்டம் தன் பணியைத் தடையின்றி ஆற்றும்" என்று பரமசிவன் கழுத்துப் பாம்பாகப் பேசியிருப்பதுதான் இந்த நாடகத்தின் கிளைமேக்ஸ்!

'இருபத்தைந்து ஆண்டுகளாகப் பாயாத சட்டம், இன்று பாய்ந்துவிடப் போகிறதா - அதுவும் ஒரு மத்திய அமைச்சர் பேரில்...?' என்ற அவநம்பிக்கை ஒரு புறமிருக்கட்டும். ஜாமீனில் உலவும் ஒருவரை அமைச்சரவையில் ஏற்கும் தவறான முன்னுதாரணம் இன்னும் என்னென்ன தீமைகளுக்கு வழி வகுக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே நெஞ்சு நடுங்குகிறது.

இத்தனைக்கும் பிறகு ஜார்கண்ட் மாநிலத்தில் ஜெயித்து ஆட்சி அமைத்தால், அது காங்கிரஸ்-ஜே.எம்.எம்.கூட்டணிக்குப் பெருமையல்ல; அம்மாநில மக்களுக்குப் பாதுகாப்பும் அல்ல!



மைக்ரோவேவ் மாமி

இந்த வாரம் நான் சொல்லித் தரப்போற ஐட்டம் பேரு 'மிர்ச்சி புலாவ்'. பேரே ஹாட்டா இருக்குல்ல! இதைச் செய்யறதுக்கு என்னென்ன தேவைங்கறத சொல்லிடறேன், கேட்டுக் கோங்கோ. அரை கிலோ பாஸ்மதி



மிர்ச்சி புலாவ்



ரைஸ், 100 கிராம் வெங்காயம், 50 கிராம் நெய் + 50 கிராம் ஆயில், 25 கிராம் இஞ்சி, 25 கிராம் பூண்டு, அரை டீஸ்பூன் மஞ்சன்தூள், ரெண்டு பட்டை, லவங்கம், ஏலக்காய், ரெண்டு பச்சை மிளகாய் எல்லாத்தையும் எடுத்துக்கோங்கோ. கூடவே ஒரு பிரிஞ்சி இலை இருந்துச்சுன்னா ஓ.கே.

முதல்ல அரிசியை ஜலம்விட்டு நன்னா களைஞ்சிட்டு, ஒரு பத்து நிமிஷம் ஊற வச்சிடுங்கோ. இந்த கேப்புல இஞ்சி, பூண்டை விழுதா அரைச்சி வச்சிட்டு, வெங்காயத்தை பொடியா நறுக்கிடுங்கோ. அப்படியே மிளகாயையும் கீறி வச்சுடணும். ஒரு தேங்காயை பால் பிழிஞ்சி வச்சிருங்கோ. எப்போ பயன்படுத்தறதுன்னு அப்புறமா சொல்றேன்.

இப்போ பிரஷர் பேனை அடுப்பில் வச்சி, அதுல நாம எடுத்துண்ட நெய் + ஆயிலை விட்டு, காய்ஞ்சிடுத்துன்னா ஏலக்காய், லவங்கம், பிரிஞ்சி இலை மூணுத்தையும் போட்டு வதக்கணும். நன்னா சிவந்துடுத்தான்னு பார்த்து, மேல இஞ்சி, பூண்டு விழுதையும், மஞ்சன் துண்டையும் சேர்த்து இன்னொரு முறை வதக்குங்கோ.

நான் ஏற்கெனவே சொன்னபடி தயார் பண்ணின தேங்காய்ப் பாலை ஜலத்துக்குப் பதிலா (1:2) வதக்கின ஐட்டத்தோட கலந்து, லேசா உப்புப் போட்டு கொதிக்க விடணும். கொதிச்சு வந்ததும், ஊற வச்சிருந்தோமோன்னோ, அந்த அரிசியைக் கொட்டி ரெண்டு விசில் வர்ற வரைக்கும் அடுப்புல வச்சி இறக்கினா, 'மிர்ச்சி புலாவ்' ரெடி.

இதுக்கு சைடு டிஷ்ஷா வெஜிடபிள் குருமா சூப்பர் காம்பினேஷன். ஆனா 'அதைச் செய்யறதுக்கு டயமுமில்ல - அலுப்பாவும் இருக்கு மாமி'ன்னா, கடைல போயி சிப்ஸ் வாங்கி வச்சிக்கலாம். இதன் பேர்லயே 'ஹாட்' இருக்கறதால, ஆறின பின்னால மாமா வந்து சாப்பிட்டாக் கூட இட்டாம சாப்பிட்டுட்டுப் பாராட்டுவார். அந்த அளவுக்கு சூப்பரான ஐட்டம் தான் இது, தெரியுமோ!

படம் : முத்து



Built to Last
Butterfly
Stainless Steel Vacuum Flask
KAILASH
அதிக நேரம் சூடு இருக்கக் கூடியது
கண்ணாடி ரீஃபில் இல்லாதது
அதிக நாட்கள் உழைக்கக்கூடியது
உடையாதது
துர்நாற்றம் வீசாதது
பட்டர்ஃபிளை®
Good for a lifetime
கங்காதரம் அப்ளையன்சஸ் லிமிடெட் & பட்டர்ஃபிளை ஹோம் அப்ளையன்சஸ்
377, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
Tel: 24345199, 24364449, 24345313, Fax:24343522 Website:www.buterflyindia.com
பட்டர்ஃபிளை
ஸ்டெயின் லெஸ் ஸ்டீல்
வேக்கும் பிளாஸ்க்
With 'Space-Age Technology'



''தலைவர் ஓவரா டீவி பார்க்கிறாரா... எப்படிச் சொல்றே?''

''அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்ல ஜெயிச்சது யாருன்னு கேட்டா, 'புஷ்ஷு கண்ணா புஷ்ஷு'ன்னு சொல்றார்...!''

- நாமக்கல் பாலு

''வீட்ல மூத்தவங்க இருக்கறப்ப உங்க கடைசி மகன் ஏன் கல்யாணத்துக்குத் துடிக்கறான்?''

''அவன் தனுஷ் ரசிகனாச்சே!''

- அம்பை தேவா





''மனசே சரியில்ல. இன்னைக்கு எனக்கு சாப்பாடு எதுவும் வேணாம்னு பாட்டிகிட்ட சொல்லிடு!''

''சந்திரமுகியிலிருந்து சிம்ரனை நீக்கினதுக்கு ரொம்பத்தான் அலட்டிக்காதே தாத்தா!''


- உ. ராஜாஜி

''ஏன் அழறே! என்னைப் பிடிக்கலையா?''

''ஊஹூம். மெகா தொடர் பார்க்க வேண்டிய நேரத்தில் இங்கே வந்து மாட்டிக்கிட்டேனேங்கிற சோகம்...''

- உ. ரா





அருள்வாக்கு



லோகத்தில் மனசுக்கு ரொம்பவும் ஆனந்தமாகவும் சாந்தமாகவும் இருக்கப்பட்ட பல விஷயங்களுக்கு அப்பர் ஸ்வாமிகள் ஒரு 'லிஸ்ட்' கொடுக்கிறார். இந்திரியங்களுக்கு அகப்படுகிற சுகங்கள் போல இருந்தாலும் நிரந்தரமான, தெய்விகமான ஆனந்தத்தைத் தருகிற வஸ்துக்களைச் சொல்கிறார். அந்த வஸ்துக்கள் என்ன? முதலில் துளிக்கூட தோஷமே இல்லாத வீணா கானம்; அப்புறம் பூரண சந்திரனின் பால் போன்ற நிலா; தென்றல் காற்று; வசந்த காலத்தின் மலர்ச்சி; வண்டுகள் ரீங்காரம் செய்து கொண்டிருக்கிற தாமரைத் தாடகம்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

இந்திரியங்களால் பெறுகிற இன்பங்களை ஈசுவர சரணார விந்த இன்பத்துக்கு உபமானமாக அடுக்கும்போது "மாசில் வீணை" என்று சங்கீதத்துக்கே முதலிடம் தருகிறார்.

நல்ல சங்கீதம் - அதுவும் குறிப்பாக நம்முடைய சங்கீதத்துக்கே எடுத்த வீணையோடு கானம் - என்றால், அது ஈசுவரனின் பாதத்துக்குக் கொண்டு சேர்ப்பதாகவே இருக்கும். நம் பூர்வீகர்கள் இசையை ஈசுவரனின் சரணங்களிலேயே சமர்ப்பணம் பண்ணினார்கள். அந்த இசை அவர்களையும், அதைக் கேட்கிறவர்களையும் சேர்த்து, ஈசுவர சரணாரவிந்தங்களில் லயிக்கச் செய்தது. தர்ம சாஸ்திரம் தந்த மகரிஷி யாக்ஞவல்கியரும் "சுஸ்வரமாக வீணையை மீட்டிக்கொண்டு, சுருதி சுத்தத்தோடு லயம் தவறாமல் நாதோபாஸனை செய்துவிட்டால் போதும் - தியானம் வேண்டாம்; யோகம் வேண்டாம்; தபஸ் வேண்டாம்; பூஜை வேண்டாம்; கஷ்டமான சாதனைகளே வேண்டாம் - இதுவே மோக்ஷத்துக்கு வழி காட்டி விடும்" என்கிறார்.

இதிலே இன்னொரு விசேஷம், சங்கீத வித்வான் மட்டுமில்லாமல், அவன் கானம் செய்வதை வெறுமே கேட்டுக் கொண்டிருக்கிற அத்தனை பேருக்கும் அவன் ஒருத்தன் செய்கிற சாதனையின் பூரண பலனான நிறைந்த திவ்விய சுகம் கிட்டி விடுகிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்



காதல் கானடா

ஸ்ரீ வேணுகோபாலன்

சின்ன நகரத்து வெளி விளிம்பு. இரண்டொரு தெருக்களோடு இங்கே நகரம் தூர்ந்து விடுகிறது. இதற்குப் பிறகு வயல் வெளி, தோட்டங்கள், செடி கொடிகள்.

அந்த இளைஞன் தோப்புகளின் விளிம்பில் அமர்ந்தான்.

தனது தோள் பட்டையிலிருந்து சின்ன கீ போர்டை மெல்ல, மெல்ல வெளியே இழுத்தான். செல்லமாக குழந்தை போல் மடியில் வைத்துக் கொண்டான்.

மூன்று நான்கு கீக்களைத் தட்டினான். கானடா குழைந்து வந்தது.

அவனுக்கும் அதுதான் பிடிக்கும். இந்த ஊரில் அவள் இருப்பாளா? எத்தனை வருஷம் கழித்து அவன் வந்திருக்கிறான்!

எனினும் ஒரு சபலத்தின் அவசரமாக மிலிட்டெரியிலிருந்து டிமிக்கி கொடுத்து ஓடி வந்தது. அவளைப் பார்க்க வேண்டும் என்ற ஒரே ஆவலுடன்...

இருள் சூழ்ந்து விட்டது. அவனது நம்பிக்கை சிறிது சிறிதாகத் தளர்ந்தது. எனினும் ஒரு வெறியில் கானடாவை இழுத்துக் கொண்டு போனான். கானடாவில் ஒரு சோகம் உண்டு. ஏதோ ஒரு சோகம் நெஞ்சை அடைக்கும். அது மனசை எவ்வளவு சங்கடப்படுத்தும்! இதை அவளே சொல்லி இருக்கிறாள்.

"டேய் நிறுத்திக்க! எனக்கு மூச்சு அடைக்குது!" என்பாள்.

அவளும் அவனுக்கு மேல் அதே ராகத்தை வாசிப்பாள்.

இருவரும் சேர்ந்து கல்லூரி விழாவில் மாறி மாறி சுவாரஸ்யமாக வாசிக்க, எந்த நிகழ்ச்சி வந்தாலும் அதையேதான் சக மாணவர்களும் வாசிக்கச் சொல்லுவார்கள்.

அந்த ராகம்தான் இத்தனை வருஷம் கழித்து அவன் ஊருக்கு வந்தபோது பிரவாகமாகப் புறப்பட்டது.

அவள் இருந்தால், நிச்சயம் வந்திருப்பாள். ஆனால்...

கீ போர்டை நிறுத்திவிட்டு இருட்டை வெறித்துப் பார்த்தான். அப்போது சற்று தூரத்தில் ஒரு நிழல் மெல்ல நெருங்கியது.

சட்டென்று எழுந்தான். "தயா!" என்று கத்திக் கொண்டு ஓடினான்.

வயல்வெளி வரப்புகளில் தட்டுத் தடுமாறி தாவிக் குதித்து, "தயா! தயா" என்று கத்திக்கொண்டே பயிர்களை மிதித்து ஓடினான்.

இரைத்தது. அவன் திக்பிரமித்து நின்றான்! "தயா" என்றான்.

அவள் இளமை இப்போது பூரணித்து விட்டிருந்தது. அவள் பேசவில்லை. வாய் அடைத்து நின்றாள்.

"தயா! தயா! தயவு செய்து என்னோடு கொஞ்சம் நடந்து வருவியா?"

"எங்கே!"

"எங்கே எந்த நிர்பந்தமும், பயமும் இல்லாமல் மனம் பறக்கிறதோ... அங்கே..."

அது தாகூரின் வார்த்தைகள் என்று அவளுக்குத் தெரியும். மெல்ல நகர்ந்தாள்.

"நீ ஊருக்கு வந்திருக்கேன்னு தெரியாது" என்றாள்.

"இப்பத்தான் வந்தேன்! சில மில்லி விநாடிகள் இருக்கும்."



அவன் மிலிட்டரி யூனிஃபார்ம் கலைந்திருந்தது! உடம்பில் தூசு ஒட்டியிருந்தது! தலை பறந்து இழைகளாகச் சிதறி இருந்தன.

"எனக்குக் கல்யாணம் ஆகப் போறது, ராஜேஷ்!"

"தெரியும்!"

"எப்படி?"

"எங்க அம்மா எழுதி இருந்தாங்க."

"அடுத்த வாரம் கல்யாணம். நீ வருவியா ராஜேஷ்?"

அவர்கள் நடந்தது ஒரு சிறிய மணல் சாலை! கொடிக்கால்களை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

"பதில் இல்லையே ராஜேஷ்!"

"இருக்காது! நான் கல்யாணத்திற்கு வர மாட்டேன். ஊரிலே இருக்க மாட்டேன்."

"ஏன் அப்படி?"

"என் மனசு அப்படிச் செய்யச் சொல்லுது!"

"உன் மனசு உன்னைத் தனி வழி போகச் சொல்லுமா?"

மெல்லிய அரும்புகள் போல நீர் அவன் கண்ணில் வந்திருந்தது.

"நான் யாரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன், தெரியுமா ராஜேஷ்?"

"தெரியாது...! தெரிய வேண்டாம்."

"அம்மா எழுதலையா?"

"எழுதலை."

"இப்ப நீ இங்கே வந்திருக்கிறது அம்மாவுக்குத் தெரியுமா?"

"தெரியாது. நான் அவளைப் பார்க்க வரவில்லையே!"

தயா கீழே குனிந்தாள். முகத்தில் எதையும் அவள் காட்ட விரும்பவில்லை. அவளது சிறிய மௌனம் நிறைய சொல்லியது.

"அப்போ... யாரைப் பார்க்க வந்தே, ராஜேஷ்?"

"ஸ்டேஷன்லே இறங்கி நேரே இங்கேதான் வரேன். வீட்டுக்கே போகலே. அப்போ யாரைப் பார்க்க வந்தேன்னு தெரிஞ்சுக்க!"

"என்னையா பார்க்க வந்தே?"

"ஏன் கூடாதா?"

அவள், அவன் முகத்தைப் பார்த்தாள். 'அவனுக்கு வருவது அழுகையா? வந்தாயிற்றா? இனிமேல் வரப் போகிறதா?'

"டேராடூன்லே இருக்கேன்! இங்கே வர வேண்டி ரெண்டு நாள் முன்னாடியே புறப்பட்டாச்சு!"

"சேர்ந்து இரண்டு வருஷத்துக்குள்ளே லீவு கொடுப்பாங்களா?"

"கொடுக்க மாட்டாங்க. நான் பாட்டுக்கு வந்துட்டேன்."

அவள் மௌனமாயிருந்தாள்.





"திரும்பப் போனா ராணுவ விசாரணை நடக்கும். தண்டனை தருவாங்க."

"என்ன தண்டனை?"

"ஆறு மாதம் நைட் வாட்ச்சிலே தள்ளுவாங்க! கஷ்டமா இருக்கும். பரவாயில்லை."

"ஏன் அப்படி உன்னை வருத்திக்கிறே?"

"பின்னே? நான் இங்கே வர வேண்டாமா? உன்னைப் பார்க்க வேண்டாமா?"

"என்னை ஏன் பார்க்கணும்?"

கால் விரலைக் கீழே அழுத்தினான். மண் நிறையப் புதைந்தது.

"எங்கே என் மனசு ஆவலாக, சுதந்திரமாகப் பறந்து வருகிறதோ, அங்கே நான் வர வேண்டாமா?"

"தாகூர் எழுதற மாதிரிப் பேசாதே!"

"அவர் சொல்றது என் இதயத்துக்கு பொருந்தாது! எங்கே என் உணர்வுகள், எண்ணங்கள், நினைப்புகள் எல்லாம் ஒரு நிரந்தர இன்பத்தைக் காண்கிறதோ..."

"இன்னும் புதிர் போடறியா?"

"பதில் இல்லை. இது ஓர் அறிகுறி."

"எதுக்கு?"

"காதலுக்கு...!"

"மை காட்! நீ என்னை லவ் பண்றியா?"

விழிகளை அவன் மிருதுவாக மேலே தூக்கிப் பிறகு மெல்ல மெல்லச் சரித்தான்.

"ஸாரி ராஜேஷ்! இதுமாதிரி பேசறதா இருந்தா வந்திருக்க மாட்டேன்."

"ப்ளீஸ்! என் நெஞ்சைக் கிழிக்காதே! நான் உன்னைத் தொடக்கூட மாட்டேன். என் 'லவ்' அதற்கு அப்பாற்பட்டது. ஒரு பார்வை, ஒரே ஒரு பார்வையில் ஒரு யுகத்தின் சந்தோஷத்தைப் பெறுவது."

"சுத்த பைத்தியமா இருக்கே! இங்கே நான் உன்னோடு தனியா வந்து பேசறதைப் பார்த்தா, நாலு பேர் என்ன நினைப்பாங்க! அதுவும் கல்யாணத்திற்கு ஒரே ஒரு வாரம் இருக்கும்போது..."

"நாலு பேர் என்ன நினைப்பாங்க?"

"உனக்குப் பைத்தியம்னு நினைப்பாங்க!"

"ஏன்?"

ஒரு நீண்ட சுவாசம் எடுத்தான் அவன். "நீ சொல்றது எனக்குப் பெரிய மகத்துவம் கொடுக்கிறது போல இருக்கு! நீ என்னை 'லவ்' பண்றேன்னு தெரியாது."

"ஏன் தெரியாது? நீ காலேஜ் ஜன்னலேர்ந்து ஒரு பார்வை பார்ப்பியே! தெருத் திருப்பத்திலே எதேச்சையா திரும்புவது போல் திரும்பி ஒரு பார்வை பார்ப்பியே, பிள்ளையார் கோயில் தூண்லே விபூதியைத் தட்டறது போல ஒரு பார்வை பார்ப்பியே... அத்தனையும் என் மனசில் கோடி சுகங்கள்!"

"அதைத் தவறா எடுத்துக்கிட்டியா?"

"தவறு இல்லை! அது உண்மை."

"இல்லை ராஜேஷ். உன் மேலே எனக்கு ஒரு பாசம் உண்டு! ஒரு பிரியம் உண்டு! இதெல்லாம் நீயும் என் தெருவிலே இருக்கிறதினாலே..."

"அப்ப, உன் பார்வையிலே நான் நிறைய கற்பனை பண்ணிட்டேனா?"

"இருக்கலாம்."

"என்னாலே நம்ப முடியலை...!"

"நீ அப்பவே சொல்லியிருக்கலாமே! 'லவ்' பண்றேன்னு..."

"சொல்ல முடியலை! சொல்லத் தெரியலை! அப்ப நாம ரெண்டு பேரும் அதிகம் பேசினது கூட இல்லே! பேசிட்டா கூட நம்ம உறவு உதிர்ந்திடுமோன்னு அவ்வளவு மெல்லிசா, பூப்போல இருந்தது நம்ம உறவு!"

"இப்ப மட்டும் பேச தைரியம் வந்திச்சா?"

"வந்துட்டுது! மனசிலே என்னாலே கஷ்டத்தைப் பொறுத்துக்க முடியலை! சதா வெறுமையா இருக்கு! உட்கார முடியலை, படுக்க முடியலை. தூங்க முடியலை! உனக்குப் புரியுமோ என்னவோ சாப்பிடக் கூட முடியலை."


அவன் வார்த்தைகள் இடறின. தொடர்ச்சி இல்லாமல் 'பட்'டென்று அறுந்து விட்டன!

சிறு மௌனத்திற்குப் பிறகு அவள் திரும்பினாள். குரலில் ஒரு பனிச்

"ஹிந்தோளத்துல 'பஞ்சம்' கிடையாது தெரியுமா...?

"கேட்கவே நல்லா இருக்கே... ஆமா, அந்த ஊர் எந்த நாட்டுல இருக்கு...?"

- எம்.ஆர்.மூர்த்தி



வெளிச்சம் வந்திருந்தது.

"உன் மேலே 'லவ்' இருந்தா அப்போதே சொல்லியிருப்பேன் ராஜேஷ்!"

சுரீர் என்று அவனுக்கு எங்கேயோ வலித்தது.

"உண்மையா?"

"ஆமாம்! என் முகத்திலேயே 'லவ்' பண்ணுகிறேனா என்பதைப் பார்த்திருக்கலாம்! பெண்களுக்கு எதையும் மறைக்கத் தெரியாது."

அவன் சுவாசத்தில் உஷ்ணம் சுருண்டு வந்தது.

"அப்படித்தான் சொல்றியா?"

"ஆமாம்!"

அந்தக் கணத்தில்கூட, அவளது அத்தனை மறுப்புகளிலும் கூட அவளது காதல்தான் பூடகமாக வெளித் ததும்பி வருகிறது என்று நினைத்தான் அவன்! அது உண்மை! அது சத்தியம்! என்று அவனுக்குத் தெரியும்.

எனினும் அவன் மனசில் எங்கேயோ ஒரு பள்ளம் விழுந்து கொண்டிருந்தது. ஆழமான பூகம்பப் பள்ளம்.

"திரும்பலாம்! நேரம் ஆயிடுச்சு!" என்றான் அவன்.

"ஒரு வேண்டுகோள் தயா!"

"சொல்லு!"

"அடுத்த முப்பது நாளோ, அறுபது நாளோ, நான் மிலிட்டரி தண்டனை பெறுவேன். என்னை வதைச்சு எடுப்பாங்க! அப்ப மட்டும் உன்னை நினைக்க அனுமதி கொடு! அப்ப மட்டும் கொடுத்தா போதும்! தண்டனையைச் சகிக்க அது எனக்கு ரொம்ப உதவும். அதுக்கப்பறம் நான் உன் நினைவை அழிச்சுக்கப் பார்க்கிறேன்! மெல்ல மெல்ல... காலத்திலே... யுகத்திலே...." அவன் குரல் கம்மியது.

திரும்ப நடந்தார்கள்.

அந்த நிசப்தம் ஒரு கொடிய நோய் போல அவர்களிடம் ஒட்டியிருந்தது.

தெரு அருகே வரும்போது, மெல்லிய மிக மெல்லிய குரலில், "வரட்டுமா!" என்றான்.

"ஊம்..." என்றாள்.

இருட்டில் அவனை விட்டு அவள் விரைந்து போவது தெரிந்தது. கோயில் மணி ஒன்று 'குணாங் குணாங்' என்று அடித்தது! ஆகாயம் வெறும் இருட்டாகக் கிடந்தது. ஊருக்கு ஒதுக்கமாக உள்ள ஒற்றையடித் தடத்தில் அவன் நடந்தான். ஊரையே அவன் சீண்டாமல் போவது போலிருந்தது! விளிம்புகளைத் தொட முடிந்திருந்தது. உள்ளே போக முடியவில்லை. கால்களைச் சீராக வைக்கக் கூட அவனுக்குப் பிரியமில்லை. வைக்க முடியவும் இல்லை. வாழ்க்கை பூராவும் இதுபோல்தான் இனி நடக்க வேண்டுமோ? அப்படித்தான் நினைத்தான்!



"நல்லா உடைச்சுச் சொல்லிட்டியா தயா..."


"நல்லாச் சொல்லிட்டேம்மா! அடுத்த வாரம் கல்யாணம்னு நீங்க சொன்ன மாதிரி அடிச்சுச் சொல்லிட்டேன்."

"கேட்டுக்கிட்டானா?"

"ஓ! கேட்டுக்கிட்டார்!"

"ஒரே பையன் எனக்கு! எங்களை தவிக்க விட்டுட்டு அவர் போய்ச் சேர்ந்துட்டார். இவனுக்குக் கீழே அஞ்சு பெண்களைக் கரை ஏத்தணும். இவன் காதல் கீதல்னு திசை திரும்பிட்டா, குடும்பமே பாழாயிடுமே. வெறும் டிகிரிப் படிப்பு மட்டும் இருக்கு! ஆர்மி ஆர்டிலரியிலே இருக்கான்! வீடு, பங்களா, கார் எல்லாம் வச்சிருக்கிற உன் அப்பா இவனுக்குப் பொண்ணைக் கொடுப்பாரா! அப்படிக் கேட்கறதுதான் நியாயமா? உன் எலக்ட்ரானிக் படிப்பை நிறுத்தி, உன் அமெரிக்கப் பயணத்தையும் நிறுத்தி.... இதெல்லாம் ஆகக்கூடிய விஷயங்களா? உனக்கு ரொம்ப நன்றி தயா!"

தயா முகத்தை மறைத்துக் கொண்டிருந்தாள். ○



'உங்களுக்கு எத்தனையோ ரசிகர்கள் இருக்கலாம். ஆனால், மனத்தில் பதிந்த ரசிகர் யார்' என்று இரண்டு பேரைக் கேட்டோம்...

ரசிகா...!

டி.எம். கிருஷ்ணா:

"மும்பையில் ஒரு கச்சேரிக்குச் சென்றபோது, தம்மை ஓர் இசை ரசிகன் என அறிமுகப் படுத்திக் கொண்ட ஹரிஹரன் என்பவர், "உங்க வெப்ஸைட் ரொம்ப பழைய தகவல்களைக் கொண்டதாக இருக்கிறதே... புதிய தகவல்களைச் சேர்க்க நான் உதவட்டுமா?'' என்று கேட்டார்! இப்படி தொடங்கிய அறிமுகம் நாளடைவில் வலுப்பட்டு, இன்று அவர் என் நெருங்கிய நண்பராகி விட்டார். என் கச்சேரியைக் கேட்க சென்னைக்கு அடிக்கடி வந்துவிடுவார். ''மெட்ராஸுக்கு எப்ப வந்தாலும் உங்க கச்சேரி இருக்கே!" என்று ஜோக் அடிப்பார்! ஒரு முறை திருவனந்தபுரத்தில் நவராத்திரி மண்டபத்தில் என் இசை நிகழ்ச்சி நடந்தபோது, இத்தனை தூரம் எங்கே வரப் போகிறார் என்று நினைத்தேன். ஆனால் தம் மனைவியோடு அதற்கு வந்திருந்து என்னை வியக்கச் செய்தார்.''




• எங்கே வரப் போகிறார்!

லட்சுமி ரங்கராஜன்:

"சுப்ரமணியன் என்பவர் என் பரம ரசிகர். கூடவே நிறைய விமர்சனங்களும் செய்வார். நான் வராளி, கேதார, கௌளை போன்ற ராகங்களில் அமைந்தப் பாடல்களை என் நிகழ்ச்சியில் பாடுவேன். ஆனால் அவர் "இந்தோளம், ஹம்சானந்தி மாதிரி ஜனரஞ்சகமான ராகங்களில் அமைந்த பாடல்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாமே! ஜனங்களும் கூடவே சேர்ந்து முணுமுணுக்கும் பாடல்களை விடுத்து, எங்கிருந்தோ எதையோ ஏன் எடுத்துப் பாட வேண்டும்?'' என்பார். "இந்த ராகத்திலே காந்தாரத்துக்கு மேல் ஏன் பாடவில்லை?" என்று டெக்னிக்கலான கேள்விகளைக் கேட்பார். அவருக்கில்லாத உரிமையா? என் அப்பாவாச்சே!"



• கேதாரகௌளை...



• 'ஏன் பாடவில்லை?'

- ஜி.எஸ்.எஸ்

பிரெஸ்டீஜின் பரந்த குடும்பம்.

(உங்கள் உறவினர் எண்ணிக்கை அளவு இந்த குடும்பம் இல்லாவிட்டாலும், நிச்சயமாக உங்களுக்கு இன்னும் உதவிடும்)

பிரெஸ்டீஜ் பிரஷர் குக்கரைப் பற்றி உங்களுக்கு நன்றாகவே தெரியும். இப்பொழுது இந்த குடும்பத்திலிருந்து இன்னும் பல அங்கத்தினர்களை சந்தியுங்கள். மிக ஸ்மார்ட்டான சமையலறை சாதனங்களின் பல வகைகள், பல மாடல்களில் ஒவ்வொன்றும் பார்க்க அழகான ஸ்டைலுடன் இருப்பது மட்டுமல்ல, சிறந்த திறமைசாலியும் கூட! உங்களுக்கு அதிக செலவும் வைக்காத அங்கத்தினர்கள் இவர்கள். சரி, இனி இந்த பிரெஸ்டீஜ் குடும்பத்தை உங்கள் இல்லத்துக்கு சந்தோஷத்துடன் வரவேற்கலாமே!




ராயல் — 4 பர்னர்



ராயல் — 3 பர்னர்



ராயல் — 2 பர்னர்



பர்ஃபெக்ட்




பிரெஸ்டீஜ் பவர் 750 வாட்ஸ்



மாரத்தான் — 3 ஜார்



மாரத்தான் EX - 30



ஹீரோ — 3 ஜார்

Prestige™

நீங்க இன்னும்
ஸ்மார்ட்டான கிச்சனுக்கு தயாரா?

Prestige SMART KITCHEN
A World of Ideas

Prestige Smart Kitchen: Chennai: Mount Road: Ph: 52140254 / 55 / 28523039 Velachery: Ph: 22440705, Mylapore: Ph: 33667787 / 52031819, Anna Nagar: 223, 2nd Avenue 26209133 / 34, Y-220, II Avenue, Ph: 26267989 / 26266272 Vadapalani : Ph: 26267989 / 26266272. **Coimbatore:** D B Road Ph: 0422 — 2544554. **Tirunelveli:** Junction Bus Stand Ph: 0462 — 2333373. **Erode:** 761, Brough Road, Ph: 0424 — 2250615. **Madurai:** Near Chokkanathar Koil Ph: 0452 — 3092109 / 110. **Tuticorin:** 370/2A V E Road Ph: 0461 — 2323743. **Bangalore:** Malleshwaram: Sampige Road Ph: 51282050 Vijayanagar: II Stage RPC Layout Ph: 23119688 JPNagar II Phase: Near Foodworld Ph: 26492793 Indiranagar: CMH Road Ph: 25287831 Basavanagudi: Bull Temple Road, Ph: 26609012 Koramangala: C/O Fabmall, The Forum Ph: 22067650 KH Road: C/O BPL Gallery Ph: 22229160 Rajajinagar: Modi Hospital Road Ph: 23501069 R.T Nagar: I Block, Ph: 23335866

Mudra South Prestige 6885.04 TAM


சின்னான் செய்திகள்

"**சி**ன்னான்... பேரச் சொன்னாப் போதும், உதடு ரெண்டும் தானாச் சிரிக்கும்..." அப்படின்னு 'கன்னான்' ஸ்டைல்ல பாட்டு ஒலிக்குதா... சின்னான் வந்துட்டேன்.

"இசைச் சிறப்பிதழ்ல நீ இசையைப் பத்தி எதுவும் எழுதாம இருந்தாலே இதழ் ரொம்ப சிறப்பா இருக்கும்"னு ஆசிரியர் ஃபீல் பண்ணினதால ஓப்பனிங் சாங் மட்டும்தான்.







நோ மோர் மியூசிக் மேட்டர்ஸ்.


அஞ்சுக்கும் பத்துக்குமே சச்சின் அல்லாடிக்கிட்டு இருக்காரு... அட, நான் ரன்னைச் சொல்றேன். இந்த நேரத்தில் தானு 'சச்சின்'னு விஜய்யை வைச்சு படம் எடுக்கப்போறாராம். சச்சினோட சண்டைக் கோழி சவுரவ். விஜயோட சண்டைக்கோழி அஜித். தல, நீங்களும் 'சவுரவ்'னு ஒரு படத்தை ஆரம்பிங்க. அட்டகாசமா இருக்கும்.

ஒரு கல்லு நின்னாப் போதும். சிலைன்னு தொறந்து வைச்சிருவாங்க. ஒரு ஃபிரேமை சுவத்துல மாட்டினாப் போதும். உருவப்படம்னு தொறந்து வைச்சிருவாங்க. நம்ம அரசியல்வாதிகளைத்தான் சொல்றேன். விட்டா தனக்குத் தானே சிலை திறக்க ஆரம்பிச்சுடுவாங்க போல! ஆனா, "வளர்ச்சித்திட்டப் பணிகளை நிறைவேத்துறதுதான் தலைவர்களுக்குச் செலுத்துற உண்மையான அஞ்சலி. எனவே பாராளுமன்ற வளாகத்தில் சிலை, படங்களை நான் திறக்கப்போறதில்லை'ன்னு 'நச்'னு சொல்லியிருக்காரு கலாம். 'சூப்பரா சொல்லிட்டாரு தலைவரு'ன்னு கலாமுக்கே சிலை வைச்சிடாதிங்கப்பா!

டி.வி. நிகழ்ச்சி போட்டியில வின் பண்ணினா ஏதாவது கொடுப்பாங்க. குரோர்பதில நிறைய துட்டு கொடுத்தாங்க. சிலர் பம்பர் பிரைஸா கார் கொடுப்பாங்க. ஆனா இஸ்ரேல்ல ஒரு டி.வி. நிகழ்ச்சியில ஜெயிச்சா 'அம்பாஸிடர்' கொடுக்கறாங்களாம். கார் இல்ல! பதவி! ஜெயிக்கறவங்க ஒரு வருஷம் நியூயார்க்ல இஸ்ரேல் நாட்டு அம்பாசிடரா பதவி வகிக்கலாமாம். 'அடடா, ஐடியா சூப்பர்'னு நம்மூரு டி.வி போட்டியில ஜெயிக்கறவங்களுக்கு, அந்த டி.வி. சார்ந்த கட்சி சார்பா '99வது வட்டச் செயலாளர்' பதவி கொடுத்தாலும் கொடுப்பாங்க டோய்!

ஓ.கே. வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டை, காதித் துண்டு, டயர் செருப்பு, கொடுவா மீசை, வில்லு வண்டி - இப்படி 'நாட்டாமை' கெட்டப்புக்கு மாறப்போறேன். ஆலமரம், உடைஞ்ச திண்ணை, நசுங்கின சொம்பு, வெத்தலைப்பொட்டி ரெடியா? அனில் அம்பானி, முகேஷ் அம்பானி வந்தாச்சா... ம்... சொல்லுங்கப்பா! உங்க சொத்துப் பிரச்னையை நான் தீர்த்து வைக்கிறேன்! அத வுட்டுப்புட்டு, சின்னப்புள்ளத்தனமா சண்டை போடாதிங்க.... சரியா! ○

செயலருக்குச் செய்தித்தாள் விளம்பரம்!



சென்னை சபாக்களை இன்று நிர்வகிக்கும் செயலர்கள் அனைவருமே, அனேகமாக சீனியர் சிட்டிசன்ஸ் தான். தலைமை தொடர இவர்கள் செய்துள்ள ஏற்பாடு என்ன..? இருவரிடம் கேட்டோம்.

அடையாறு பகுதி ரசிகர்களுக்காகவே நடைபெறும் சங்கீத சபா 'ஹம்சத்வனி'. டிசம்பர் முதல் மார்ச் வரை தொடர்ந்து இசை நிகழ்ச்சிகள் இங்கே நடைபெறுகின்றன. இதன் செயலர் ஆர்.ராமச்சந்திரன். இவரின் சதாபிஷேகத்தை இச்சபா சென்ற ஆண்டு கொண்டாடியது!

''எப்படி இத்தனை பொறுப்புகளை இந்த வயதிலும் ஏற்றுக்கொண்டு நடத்துகிறீர்கள்? உங்களுக்கு உதவ யாராவது இருக்கிறார்களா? இளம் தலைமுறையைத் தயார் செய்யும் எண்ணம் இருக்கிறதா?''

"ஹம்சத்வனி மிகப் பெரிதாக வளர்ந்துவிட்டது என்பது உண்மைதான். ஆனால் நிர்வாகத்தில் எந்த கோஷ்டிகளும் கிடையாது. முழுக்க முழுக்க ஆதரவு தரும் அங்கத்தினர்களும், செயற்குழு உறுப்பினர்களும் இருப்பதால், நிர்வாக ரீதியாக சபா வெகு உறுதியாக இருக்கிறது.

யார் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு சுறுசுறுப்பாகச் செயல்படுவார்கள் என்று எனக்கும் கவலை இருக்கிறது. ஒரு செயலாளர் வெறும் நிகழ்ச்சிகளை மட்டும் நடத்திக்கொண்டிருக்க முடியாது. அது தொடர்பான பல வேலைகள், முன்னும் பின்னும் செய்ய வேண்டியிருக்கின்றன. இதற்குத் தயாராக இருக்கிற இளைஞர் யாராவது முன் வந்தால் நான் வரவேற்பேன். நானே பத்திரிகையில் இதற்காக ஒரு விளம்பரம் கொடுக்கலாமா என்றுகூட யோசித்துக் கொண்டிருக்கிறேன்!" என்றார் ராமச்சந்திரன்.

இதே கேள்வியை சென்னை சபாக்களின் செயலாளர்களில் மிக மூத்தவரான ஸ்ரீகிருஷ்ண கானசபாவின் யக்ஞராமனிடம் கேட்டோம்.

"எனக்கு உதவியாக கமிட்டி செயல்படுகிறது. இப்போது என் மகன் பிரபுவை கமிட்டியில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதில் எனக்குப் பங்கு ஏதுமில்லை. என்றாலும் அவனைத் தயார் செய்து வருகிறேன். கூடவே கடவுளின் உதவியும் இருக்கும் என்று நம்புகிறேன்!



• யக்ஞராமன்

பிரபுவுக்கு எல்லாக் கலைஞர்களிடமும் நல்ல தொடர்பும் உண்டு. என் கூடவே இருந்து செயல்பாடுகளைக் கவனித்திருப்பதால், ஓரளவு பிராக்டிகல் நாலெட்ஜ் உண்டு. அதனால் எளிதாகக் கையாள முடியும்.



• ராமச்சந்திரன்

சமீபத்தில் விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், ஜயேந்திரரின் நலனுக்காக இசைக் கலைஞர்களின் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்ச்சி ஒன்றை நடத்தச் சொன்னார். எங்கள் சபா, ஒரு பள்ளி நிகழ்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுவிட்டது! பல மண்டபங்களைத் தொடர்பு கொண்டோம். மீனாட்சி கல்யாண மண்டப உரிமையாளர், ஒரு பைசா கூட வாங்கிக் கொள்ளாமல் இடத்தைக் கொடுத்தார். குறைவான கால அவகாசத்திலும், அத்தனை இசைக் கலைஞர்களும் கலந்து கொண்டார்கள். இப்படி திடீர் என்று ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யவும், வெற்றிகரமாக நடத்தவும் சபா செயலர் தயாராக இருக்க வேண்டும். பிரபுவுக்கு அந்தப் பயிற்சி இருக்கிறது என்று நம்புகிறேன்.''

- சித்தார்த்

அந்த நாள் ஞாபகம் 6

திரையுலக நினைவுகள்

ஏவி.எம்.சரவணன்



அப்பச்சி எனக்கு சர்டிபிகேட் கொடுத்த மகிழ்ச்சியில் நான் இருந்தபோது, எஸ்.எஸ்.எல்.சி தேர்வு முடிவுகள் வெளியாயின. இரண்டாம் முறையும் ஃபெயிலாகியிருந்தேன். தீர்மானமாக ஒரு முடிவு செய்தேன். நேரே அப்பச்சியிடம் போனேன்.

“நான் இத்துடன் படிப்பை நிறுத்திக்கொள்கிறேன், அப்பச்சி.”

“ஏன்?”

“நான் மறுபடியும் படித்து எழுதினாலும் பாஸ் பண்ணுவேன் என்கிற உத்தரவாதமில்லை. எஸ்.எஸ்.எல்.சி முடித்தபின் பி.யு.சி இருக்கிறது. அப்புறம் டிகிரி. இதெல்லாம் முடித்தாலும் நான் ஸ்டுடியோவுக்குத்தானே வரப் போகிறேன்? நான் இப்பவே இப்படியே கன்டினியூ பண்றதுதான் ‘சரி’ன்னு தோணுது” என்றேன். எனது வாதத்தில் இருந்த நியாயத்தை உணர்ந்த என் தந்தை, கொஞ்சம்கூடத் தயங்காமல் ‘சரிப்பா... அப்படியே செய்’ என்று சொல்லிவிட்டார்.

தமிழில் மிகப்பெரிய வெற்றி பெற்ற படம் ‘தை பிறந்தால் வழி பிறக்கும்’. ஏ.கே.வேலன் எடுத்த அந்தப் படத்தைச் சின்ன ‘பட்ஜெட்’டில் ‘பர்க்கா’ என்ற பெயரில் ஹிந்தியில் எடுத்தோம்.

தமிழ்ப் படத்தில் இல்லாத ‘மாட்டுச் சண்டை’ காட்சி ஒன்றைப் ‘பர்க்கா’வில் சேர்த்தோம்.

காட்சி நன்றாக வர வேண்டும் என்பதற்காகப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டோம்.

அப்போதெல்லாம் இது போன்று மிருகங்களையும், விலங்குகளையும் வைத்து காட்சிகளை அமைப்பதில், சாண்டோ எம்.எம்.ஏ. சின்னப்ப தேவர்தான் சூரராக இருந்தார். தமது படங்களுக்கென்று அவர் இரண்டு மாடுகளை வளர்த்து வந்தார். ஒன்று சாது. இன்னொன்று முரடு. இரண்டும் பார்க்க ஒரே மாதிரியாக இருக்கும். உண்மையில் சாதுவான




மாட்டுக்கு கொம்பின் நீளம் சற்றுக் குறைவாக இருந்தது. அதற்காக அந்தக் கொம்பின் மீது அதே மாதிரி ஒரு உறை போட்டு இன்னொரு மாட்டின் கொம்பு போலவே ஆக்கி வைத்திருந்தார் தேவர். தமது மாடுகளைப் பொதுவாக அவர் வேறு யாருக்கும் தருவதில்லை. அது எனக்குத் தெரிந்திருந்தும், அந்த மாட்டுச் சண்டைக் காட்சிக்கு

அந்த மாடுகள் இருந்தால் நன்றாக இருக்கும் என்று கருதியதால், நான் தேவரிடம் போய்க் கேட்டேன். இரண்டு



மாடுகளையும் படப்பிடிப்புக்காக அவர் எனக்குத் தந்துதவினார். அந்தக் காட்சியின் மிகப்பெரிய ப்ளஸ் பாயிண்ட்



டாக அந்த மாடுகள் அமைந்தன. 'பர்க்கா'வில் ஹீரோ ஜெகதீப் என்பவர். அவருக்கு நாங்கள் கொடுத்த சம்பளம், மாதம் எழு நூற்று ஐம்பது ரூபாய். ஹீரோயின் நந்தா. அவருக்கு பதினையாயிரம் கொடுத்தோம். புகழ்பெற்ற சித்திரகுப்தா இசையமைத்தார். ராஜேந்திர கிஷன் வசனம்.

படம் வெற்றிகரமாக ஓடியது. அந்தப் படத்துக்காக நாங்கள் செய்த தயாரிப்புச் செலவு ஐந்து லட்சம் ரூபாய். ஆனால் எங்களுக்குக் கிடைத்த கலெக்ஷன் முப்பத்தைந்து லட்சம் ரூபாய்! 1960ல் அப்படி

வந்த கதை!

யொரு லாபம் எங்களுக்குக் கிடைத்தது. இப்போது அப்படிப்பட்ட மார்ஜினை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. அதன் பின் 'ஆகாஷ் பாதல்' என்று பெங்காலியில் ஒரு படம் எடுத்தோம். பிரபாத் முகர்ஜி டைரக்ட் செய்தார். ஆனால், அந்தப் படம் சுமாராகத்தான் போயிற்று.

1959ம் ஆண்டு டிசம்பர் மாதம் பதினோராம் தேதி எங்கள் தயாரிப்பில் - ஏவி.எம் அண்ட் கர்நாடகா ஃபிலிம்ஸ் என்ற பேனரில் - 'சகோதரி' படம் வெளியானது. இதில் குறிப்பிட வேண்டிய முக்கியமான தகவல், 'சகோதரி' படத்தில் முதலில் சந்திர பாபுவின் பாத்திரம் இல்லை என்பது தான்.

இந்தப் படத்தின் மூலம்தான் ஏ.பீம்சிங் எங்களுக்கு டைரக்டராக அறிமுகமானார். அதற்கு முன்பே அவரை எங்களுக்குத் தெரியும் என்றாலும் ஏவி.எம். நிறுவனத்

▪ முரசொலி மாறன்



தில், எங்கள் ஸ்டுடியோவில் பீம்சிங் முதன் முதலில் பணியாற்றியது 'சகோதரி'யில் தான்.

சுதர்ஸனம் மாஸ்டர் இசையமைத்தார். பாடல்கள் கண்ணதாசன். இந்தப்



படத்துக்கு வசனம் எழுதியவர் முரசொலி மாறன்.

மாறனுக்கு 'முரசொலி' என்ற அடைமொழி தந்து, முரசொலி மாறன் என்றாக்கியது அப்பச்சிதான் என்பது பலருக்குத் தெரியாத உண்மை.

1956 செப்டெம்பர் 29ஆம் தேதி ஏவி.எம். அண்ட் எஸ்.கே. பிக்சர்ஸ் கூட்டுத் தயாரிப்பில், 'குலதெய்வம்' படம் வெளியானது. வெளியானதும் படத்தின் வசனங்கள் ரசிகர்களைப் பெரிதும் கவர்ந்தன. வசனம் எழுதியது யார் என்று கேட்க ஆரம்பித்தார்கள். அடுத்த வாரம், விளம்பரங்களில் 'வசனம்: மாறன்' என்று சேர்த்து வெளியிட்டார் அப்பச்சி.

அப்போது நிறைய மாறன்கள் இருந்ததால் 'எந்த மாறன்?' என்ற கேள்வி வந்தது.



* 'சகோதரி' படத்தில்...

மூன்றாவது வாரத்தில் 'முரசொலி' என்ற அடைமொழி சேர்த்து 'முரசொலி மாறன்' என்று விளம்பரங்கள் வெளியாயின.

இந்த விவரங்களை முரசொலி மாறனே, நாங்கள் தயாரித்த 'என்றும் ஏவி.எம்' என்ற எங்கள் தொலைக்காட்சித் தொடருக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கிறார். அப்பச்சி அன்று சேர்த்த முரசொலி என்ற வார்த்தை, மாறன் பெயரோடு அவரது இறுதிக் காலம் வரை இணைந்தே இருந்தது. சகோதரி படத்துக்கு வசனம் எழுத மாறனை அணுகியபோது, அவர் மறுத்துவிட்டார்.

அதற்கு ஒரு காரணம் இருந்தது. அவரது சொந்தப் பட நிறுவனமான மேகலா பிக்சர்ஸ், 'குறவஞ்சி' என்ற படத்தைத் தயாரிப்பதாக இருந்தது. அதில் ராஜசுலோசனாவை ஒப்பந்தம் செய்தார்கள். ஆனால் ஏதோ ஒரு மனக்கசப்பால் ராஜசுலோசனா அதில் நடிக்கவில்லை.

அந்த நிலையில் 'சகோதரி'யில் ராஜசுலோசனா நடிக்கிறார் என்று அறிந்தபோது, 'நான் வசனம் எழுத மாட்டேன்' என்று மாறன் மறுத்தார். என்ன செய்வதென்று தெரியவில்லை. படத்தின் இயக்குநர் பீம்சிங், கிருஷ்ணன் - பஞ்சு இரட்டையரில் கிருஷ்ணனிடம் 'நீங்கள் போய் கலைஞர் கருணாநிதியைப் பார்த்து பேசுங்கள்' என்று அனுப்பி வைத்தார். கிருஷ்ணனின் தங்கையைத்தான் பீம்சிங் மணந்து கொண்டிருந்தார்.

கிருஷ்ணன் சென்று கலைஞரிடம் பேசினார். நிலைமையை விளக்கினார். பின்னர் கலைஞர் "பரவாயில்லை. நீ போய் வசனம் எழுது" என்று மாறனிடம் சொன்ன பிறகே, அவர் 'சகோதரி'க்கு வசனம் எழுதினார்.

பாலாஜி, பிரேம் நஸீர், முத்துராமன் ஆகியோருடன் மற்றும் பலர் நடித்து 'சகோதரி' படப்பிடிப்பு முடிந்துவிட்டது. முத்துராமனுக்கு அந்தப் படம் இரண்டாவது படம் என்று நினைக்கிறேன். தாடி வைத்துக் கொண்டு ஓவியராக நடித்திருப்பார். படப்பிடிப்பு முடிந்தபின் முழுப் படத்தையும் போட்டுப் பார்த்தோம். முழுக்க முழுக்க எமோஷனல் படமாக வந்திருந்தது. அதை 'பிரேக்' பண்ண என்ன செய்யலாம் என்று எண்ணிய போதுதான், அந்த ஐடியா உதித்தது.

(கூறுவேன்)

குழந்தை பெற புதிய முறையில் சிகிச்சை

இந்த உலகம் என்றென்றும் அழியாமல் நிலைத்திருக்க வேண்டுமானால் வாரிசுகள் பிறந்து கொண்டே இருக்க வேண்டும். ஆனால் திருமணமான சில தம்பதியரில் தனது ஆஸ்தியை ஆளவும், தனது பரம்பரை வம்சத்தை விருத்தி செய்யவும், பெற்றோரைக் காப்பாற்றவும், கடைசிக் காலத்தில் ஈமக் கிரியைகள் செய்யவும் தங்களுக்குக் குழந்தைகள் பிறக்க வில்லையே என்று கண்ணீரோடு கோயில் குளங்களை சுற்றிக் கொண்டும், மந்திர தந்திரங்களில் ஈடுபட்டும், தாயத்துக்களை கட்டிக் கொண்டும், அரச மரத்தையும் - வேப்ப மரத்தையும் சுற்றிக் கொண்டும் சிலர் நரபலி கொடுத்துக் கொண்டும், வயோதிக காலம்வரை தங்களது வாழ்நாளை வீணாக்கிக் கொள்ளுகிறார்கள். அதோடும் இல்லாமல் பெண்கள் மலடி என்ற பட்டத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். இதனால் கணவராலும், உறவினராலும் வெறுக்கப் பட்டு, ஒதுக்கப்படுகிறார்கள். சிலர் தற்கொலை முயற்சியிலும் ஈடுபடுகிறார்கள்.



* உயிரணு உற்பத்தி ஆகியும், கருக்குழாய் அடைப்பு நீங்கியும் ஆண் குழந்தை பெற்ற விழுப்புரம் மாவட்டம் செஞ்சியைச் சேர்ந்த முருகன் - தமிழரசி தம்பதியர்


இவர்களின் துன்பங்களைப் போக்க **மருத்துவ திலகம் டாக்டர் A. அர்ஜுனா, டாக்டர் V.A. ஆண்டாள் அர்ஜுனா, டாக்டர் M.A. சரவணன் ஆகிய மூவரும் ஓமியோ சித்த - ஆயுர்வேத முக்கூட்டு மருத்துவ சிகிச்சையில் குழந்தை பாக்கியம் உண்டாக்கித் தருகிறார்கள்.**

ஆண்களுக்கு 60 முதல் 70 சதவிகித குறைபாடும், பெண்களுக்கு 30 சதவிகித குறைபாடும் இருப்பது தெரிய வருகிறது. அதனால் குழந்தை பெறுவதில் கணவன் - மனைவி இருவருமே பொறுமையுடன் பொறுப்புடன் சிகிச்சை பெற முன் வர வேண்டும்.

சில ஆண்களுக்கு சிற்றின்பத்தில் நாட்டம் இல்லாமையாலும் உயிரணு உற்பத்தி அறவே இல்லாமையாலும் சிலருக்கு உயிரணுக்கள் உற்பத்தி குறைவாகவே இருக்கும். இதற்குண்டான காரணங்கள் - அம்மை நோயினாலும், புட்டாளம்மையினாலும், மஞ்சள் காமாலையாலும், டைபாய்டு ஜுரத்தாலும், முறையற்ற செக்ஸ் பழக்க வழக்கங்களாலும் உயிரணு உற்பத்தி பாதிக்கப்படுகிறது. இதை முக்கூட்டு மருத்துவத்தால் சிகிச்சையளித்து குழந்தை பிறக்கச் செய்கிறோம்.

பெண்களுக்கும் பல குறைபாடுகள் இருக்கிறது. மாதவிடாய் கோளாறுகள், கருப்பை ஓவரிகள் சிறுத்திருத்தல் (வளர்ச்சியின்மை). கருப்பை ஓவரிகளில் கட்டி, கருமுட்டை உண்டாகாதிருத்தல், கருக்குழாயில் சதை அடைப்பு ஏற்பட்டிருத்தல், கருமுட்டை வெடிக்காமலிருத்தல் - சிற்றின்பத்தில் சில பெண்களுக்கு நாட்டம் உண்டாகாமலிருத்தல் போன்ற காரணங்களை முக்கூட்டு மருத்துவ சிகிச்சை அளித்து குழந்தை பிறக்கச் செய்கிறோம்.

இந்த மாதம் - திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் அணையில் தோ - சுப்பிரமணி தம்பதியர் முக்கூட்டு சிகிச்சையால் ஆண் குழந்தை பெற்றுள்ளார்கள். இன்னும் ஒரு சில பெண்களுக்கு கர்ப்பம் தரித்துள்ளது.



டாக்டர் M.A. சரவணன்

மதுரையில் அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும் பாத்திமா-சம்சுதின் தம்பதியருக்கு 23 ஆண்டும் காலம் குழந்தை இல்லாதிருந்து, எங்களது இரண்டு மாத சிகிச்சையில் பெண் குழந்தை பெற்றுள்ளார்கள்.

துபாயில் முருகன் - வள்ளி தம்பதியருக்கு உயிரணு உற்பத்தி அதிகரித்தும், கருக்குழாய் அடைப்பு நீங்கியும் ஆண் குழந்தை பெற்றுள்ளார்கள்.

கோயம்புத்தூர் - பெரியநாயகன் பாளையத்தில் அறவே உயிரணு உற்பத்தி இல்லாத மாணிக்கம் என்பவருக்கு எங்கள் சிகிச்சையில் 110 மில்லியன் கவுண்ட்டும், 20% மொட்டிலிட்டியும் (உயிரணு) உற்பத்தி ஆகியுள்ளது. இது ஒரு பெரிய சாதனை.

சென்னை அண்ணாநகர் விஜயகுமாருக்கு எங்கள் சிகிச்சையால் தற்போது உயிரணு உற்பத்தி ஆகியுள்ளது.

தஞ்சாவூரில் ராமையா என்பவருக்கு உயிரணு உற்பத்தி அறவே இல்லாதிருந்து தற்போது (கவுண்ட்)110 மில்லியனும், 60% மொட்டிலிட்டியும் உற்பத்தி ஆகியுள்ளது.

மதுரையில் அரசாங்க பணியில் ஓய்வு பெற்ற 60 வயதுடைய அதிகாரி ஒருவருக்கு உயிரணு உற்பத்தி செய்தும், அவர் மனைவிக்கு கருக் குழாய் அடைப்பு நீக்கியும் பெண் குழந்தை பிறக்கச் செய்துள்ளோம்.

உலகின் பல நாடுகளிலிருந்தும் வந்தும், இந்தியாவில் பல மாநிலங்களிலிருந்து வந்தும் எங்கள் நவீன வைத்தியாலயாவில் ஓமியோ - சித்த ஆயுர்வேத முக்கூட்டு சிகிச்சை பெற்று குழந்தை பாக்கியத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். பலர் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்கள். நூற்றுக்குத் தொண்ணூறு சதவிகிதம் பேர் குழந்தை பெற்றுக் கொள்ளுகிறார்கள். நீங்களும் குறைந்த செலவில் குழந்தை பெற வேண்டுமானால் எங்களை உடனே சந்திக்கவும்" என்று அழைக்கிறார்கள் **டாக்டர் A. அர்ஜுனா, டாக்டர் V. A. ஆண்டாள் அர்ஜுனா, டாக்டர் M. A. சரவணன்** ஆகியோர்.



மருத்துவ திலகம்
டாக்டர் A. அர்ஜுனா,
டாக்டர் V. A. ஆண்டாள் அர்ஜுனா

நவீன வைத்தியாலயா


ஹோமியோபதி - சித்தா - ஆயுர்வேத மலடு நீக்கும் ஆஸ்பத்திரி

சென்னையில் சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களில் டாக்டரைச் சந்திக்கும் இடம் : எண் : 65, நெற்குன்றம் பாதை, 100 அடி ரிங் ரோடு, (டி.எஸ். கவுரிசங்கர் திருமண மண்டபம் எதிரில்), வடபழனி, சென்னை - 600 026. **போன் : 23623464 STD 044.**

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் டாக்டரை சந்திக்குமிடம் : நெ. 30, பிராமணர் தெரு, வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம் - 604 408. போன் : 225208, 228077, 226180 STD 04183. Cell:94430 36522

ADVT

வலைபாயுதே



சங்கீதத்துல 'கட்டை' கட்டி பாடுற கலைஞர்கள் யாரெல்லாம் வெப்சைட் கட்டி வைச்சிருக்காங்கன்னு எட்டிப் பார்த்தோம். நீங்களும் படிச்சிட்டு போய் தட்டிப் பாருங்க!

பயங்கர அப்டேட்டா செயல்படுது kjyesudas.com அவரோட படப் பாடல்கள் (சமீபத்தில் வெளிவந்தவை கூட, எல்லா



அலங்கார சுதா!







மொழிகளிலும்), கர்நாடக இசை, பக்திப்பாடல்கள் எல்லாம் ஈசியா கிடைக்குது, MP3 வடிவில். அவரோட புரோகிராம் ஷெட்யூல் தெளிவா கொடுத்திருக்காங்க. விஜய் யேசுதாஸோட பாடல்களும் கிடைக்குது. யேசுதாஸோட இந்த சைட், அவரை மாதிரியே எளிமையா வடிவமைக்கப் பட்டிருக்கு.

கொஞ்சம் அலங்காரத்தோடு 'வலை'ய வருது sudharagunathan.com. அவங்க இதுவரை வாங்கின அவார்டுங்க, அவரைப்பத்தி அவரே சொன்னது, புதுசா வெளியிட்ட கேசட், சிடி விவரங்கள், அவரோட 'சமுதாய ஃபவுண்டேஷன்' பத்தின விவரங்கள்னு, குறைவான பக்கங்களோடு நிறைவாக இருக்குது இந்தத்தளம்.

'Dance Like a man'ன்னு சொன்னால் ஞாபகத்து வர்றவங்க, வயலின் இரட்டையர் கணேஷ், குமரேஷ். அவங்களோட தளமான ganeshkumaresh.com மோட முதல் பக்கமே நெஞ்சை அள்ளுது. இதுவரை பத்திரிகைகள்ல வந்த தங்களைப் பத்தின விமர்சனங்களைக் கொடுத்து வித்தியாசப்படுத்தி இருக்காங்க. சிறுவயது தொடங்கி அவங்களோட ஆல்பமும் அசத்துது.

சௌம்யா தனக்கான வலைப்பக்கத்தை carnatica.net/sowmya.htm-ல அமைச்சிருக்காங்க. அவரைப்பத்தின தகவல்கள், வாங்கின பட்டங்கள்னு எளிமையா இருக்குது சைட்.

எஸ்.பி.பி.யோட தளம் spbala.com ஆனால், அவரோட பாட்டுங்க இதுல கிடைக்கறதில்ல. தேவைப்படறவங்க raaga.com போய், டௌன்லோட் செய்துக்கோங்க ஈஸியா!

- ப்ரேஸர்



மியூசிக் அகாடமி என்று இன்று அறியப்படும் சங்கீத வித்வத் சபையின் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்களின்போது அமரர் கல்கி எழுதிய கட்டுரையின் சில பகுதிகள்:



வாழ்க வித்வத் சபை!

சங்கீத வித்வத் சபையின் வெள்ளி விழாவை முன்னிட்டு ஏறக்குறைய ஐம்பது கச்சேரிகள் ஏற்பாடு செய்திருந்தார்கள். இரண்டொருவரைத் தவிர, குறிப்பிட்ட வித்வான்கள் அனைவரும் வந்திருந்து கச்சேரி செய்து வெள்ளி விழாவைச் சிறப்பித்தார்கள்.

கோலாகலமான வெள்ளி விழாக் கொண்டாட்டத்தில் கச்சேரிகளை விமரிசனம் செய்து தராதரங்களைச் சரியானபடி நிர்ணயிப்பது இயலாத காரியம். இரண்டாவது அணியில் வரக் கூடிய வித்வான்கள் 4.15 மணிக்கு ஆரம்பித்து நடத்திய கச்சேரிகள் எத்தகைய சூழ்நிலையில் நடைபெற்றன என்பதைப் பற்றி ரஸிகர்கள் இருவர் இந்தக் 'கல்கி' இதழில் எழுதியிருக்கிறார்கள். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் கச்சேரி செய்த வித்வான் எவரும் தம்முடைய பூரண ஆற்றலும் வெளியாகுமாறு கச்சேரி செய்திருக்க முடியாது. சங்கீதம் மிக மென்மையான கலை. (ஆங்கிலத்தில் அதை 'Fine Art' என்று சொல்கிறார்கள்.) 'தொட்டாற் சுருங்கும்' தாவர வர்க்கங்களின் மிருதுவான இயல்பை உடையது.

வாழ்நாள் முழுதும் பிரசங்கம் செய்து பழக்கப்பட்டவர்கள், கூட்டத்தில் நாலு பேர் எழுந்து செல்வதைப் பார்த்தால், மேலே பேசுவதற்குத் தடுமாறுவார்கள். பிரசங்கிகளின் பாடு அதுவென்றால், பாடகர்களின் நிலை எப்படியிருக்குமென்று சொல்ல வேண்டியதில்லை. சபையில் பாதிக்கு மேலே காலி நாற்காலிகளாயும், வருவோரும் போவோரும், தங்கள் தங்கள் இடம் எது என்று விசாரிப்போருமாயிருக்கும் சூழ்நிலையில், இளம் வித்வான்கள் பாடிச் சமாளித்தார்களே, அதற்காகவே அவர்களைப் பாராட்ட வேண்டும். ஏதோ வெள்ளி விழாவில் கலந்து கொண்டு கைங்கரியம் செய்தோம் என்பதுடன் அவர்கள் திருப்தி அடைந்தது போல், ரஸிகர்களும் திருப்தி அடைவது தான் முறை. 'அதை இப்படிப் பாடியிருக்கலாம்', 'இதை இப்படிப் பாடியிருக்கலாம்'

50 ஆண்டுகளுக்கு முன்...



என்று சொல்வதிலெல்லாம் பொருள் இல்லை.

இந்தக் கச்சேரி நிகழ்ச்சிகளை வேறு விதமாக, இதைவிட நல்ல முறையில் ஏற்பாடு செய்வதும் அவ்வளவு சுலபமான காரியம் அன்று. ஐம்பது கச்சேரிகளை ஏற்படுத்தி, அவ்வளவு பாட்டு வித்வான்களையும், பக்க வாத்ய வித்வான்களையும் சமாளித்து, அவர்களுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்து அனுப்பிய வித்வத்சபை நிர்வாகிகள், எவ்வளவு நாள் எப்படியெல்லாம் உழைத்திருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்த்தால், அவர்கள் மீது குறை எதுவும் சொல்லத் தோன்றாது. "இவ்வளவு பிரதமாதமான விழாவை இத்தனை சிறப்பாக நடத்தினார்களே!" என்று அவர்களைப் பாராட்டத்தான் தோன்றும்.

வெள்ளி விழாவில் நடந்த சுமார் ஐம்பது கச்சேரிகளுக்குள் இரண்டு கச்சேரிகள் மிகப் பிரசித்தி அடைந்தன. ஒன்று, ஸ்ரீ அரியக்குடி ராமானுஜய்யங்கார் அவர்களின் கச்சேரி.



* ஜி.என்.பி



* அரியக்குடி

விழாவில் நடந்த அத்தனை கச்சேரிகளிலும் அய்யங்காரின் கச்சேரி மேன்மையாக அமைந்தது. அது மட்டுமல்ல; அய்யங்கார் அவர்களின் சொந்தக் கச்சேரிகளையே எடுத்துக் கொண்டு பார்த்தாலும், இந்த வருஷத்து வெள்ளி விழாக் கச்சேரி மிகச் சிறந்து விளங்கிற்று. இப்படி நம் காலத்துச் சங்கீத வித்வான் ஒருவர் நீடித்த புகழை நிலை நாட்டிக் கொண்டு வருவது, சங்கீத உலகம் செய்த பாக்கியம் என்றே சொல்ல வேண்டும்.

இன்னொரு பிரசித்தி அடைந்த கச்சேரி மதுரைமணி ஐயரின் கச்சேரி. இது வேறொரு விதத்தில் பிரபலம் அடைந்தது. மறுநாள் சென்னை நகரில் சங்கீதம் தெரிந்தவர்கள் சந்தித்த இடங்களிலெல்லாம், மணி ஐயருடைய கச்சேரியைப் பற்றிப் பேசி வாதப் பிரதிவாதம் செய்யும் அளவுக்கு அது பிரபலம் அடைந்துவிட்டது.

அகாடமியில் கச்சேரி செய்யும் வித்வான்கள் அவர்களே மனமுவந்து இரண்டு நிர்பந்தங்களுக்கு உட்பட்டுக் கச்சேரி செய்கிறார்கள். ஒன்று நிகழ்ச்சி நிரல். இரண்டாவது கால நிர்ணயம்.

நிகழ்ச்சி நிரல் எழுதிக் கொடுக்கும் போது ஏதோ சில ராகங்களையும், உருப்படிகளையும் குறிப்பிட்டு விடுகிறார்கள். ஆனால் கச்சேரி செய்யும்போது ஒரு ராகம் அல்லது கீர்த்தனம் சோபிக்காது என்ற எண்ணம் உண்டாகி விடுகிறது. பெரிய வித்வான்களுக்கே இத்தகைய சந்தேகம் உண்டாகிச் சில சமயம் நிகழ்ச்சி நிரலில் மாறுதல் செய்து கொள்கிறார்கள். இம் முறை ஸ்ரீ அரியக்குடி ராமானுஜய்யங்காரும், ஸ்ரீ ஜி.என்.பி.யும் அவ்விதம் உருப்படிகளை மாற்றிக் கொண்டார்கள். சங்கீத உலகில் பழந்தின்று கொட்டை போட்டவர்களுக்கே இந்தக் கஷ்டம் என்றால், இளம் வித்வான்களைப் பற்றி என்ன சொல்லுவது? - அவர்கள் நிகழ்ச்சி நிரலை மாற்றுவதற்கும் தைரியம் இல்லாமல், எப்படியோ காமா சோமா என்று பாடி முடிக்க வேண்டியதுதான்.

மதுரை மணி ஐயரை நிகழ்ச்சி நிரல் அவ்வளவாகப் பாதிப்பதில்லை. ஆனால் கால நிர்ணயக் கட்டுப்பாடு அவரை ரொம்பவும் கஷ்டப்படுத்தி விடுகிறது. கற்பனை நிறைந்த சங்கீத பாணியாதலால் மனம் போனபடி விஸ்தாரமாக ஸ்வரப் பிரஸ்தாரம் செய்வதில் இறங்கி விடுகிறார். கடிகாரத்தின் முள்களுக்கு சங்கீத ஞானம் இல்லையாதலால், அவை பாட்டுக்கு ஓடிக் கொண்டேயிருக்கின்றன. கச்சேரியை முடிக்க வேண்டிய எட்டரை மணி நெருங்கிக் கொண்டிருந்தும், மணி ஐயர் கிருதிகளைக் கூட முடித்தபாடில்லை. அகாடமி நிர்வாகிகள் செய்த சமிக்ஞைகள் எல்லாம்

பயனற்றுப் போயின. கடைசியாக, மணி ஐயர் பாடிக் கொண்டிருக்கும்போதே அகாடமி நிர்வாகிகளில் ஒருவர் அடுத்த நிகழ்ச்சியைப் பற்றி ஒலி பெருக்கியில் அறிவிப்புச் செய்ய முன்வந்தார். இந்தக் காரியந்தான், மறுநாள் சங்கீதம் தெரிந்தவர்கள் இரண்டு பேர் சந்தித்த இடங்களிலெல்லாம் சர்ச்சைக்கு இடமாயிற்று. "கால நிர்ணயத்தைக் கவனியாமல் இவர் பாட்டுக்குப் பாடிக் கொண்டே போனால், நிர்வாகிகள் என்னதான் செய்வார்கள்?" என்பது ஒரு கட்சி. "அதற்காகப் பாடும்போதே ஒலிபெருக்கியில் அறிவிப்புச் செய்வதா? ஒரு பாட்டுக்கும் இன்னொரு பாட்டுக்கும் நடுவில் செய்யக்கூடாதா? 8.30 வரையில் பார்த்துவிட்டு, அப்புறம் கடையைக் கட்டச் சொல்வதுதானே! அகாடமி நிர்வாகிகள் சங்கீதக் கலையையே அவமதித்து விட்டார்கள்!" என்பது இன்னொரு கட்சி.



● மணி ஐயர்

இம் மாதிரி சர்ச்சை ஏற்படுவதற்குக் காரணமாயிருந்த நிகழ்ச்சியை, அகாடமி நிர்வாகிகளும் அவ்வளவாக விரும்பவில்லையென்பது மறுநாள் முதல் தெரிய வந்தது. ஒலிபெருக்கியில் அறிவிப்புச் செய்வதையே நிறுத்தித் தொலைத்துவிட்டார்கள்.

இந்தக் காரியத்தில் சிறிய பிழை நேர்ந்துவிட்டது என்பதை வெளிப்படையாக ஒப்புக் கொள்ளாவிட்டாலும், காரியத்தில் ஒப்புக்கொண்டு ரம்யமாக நடந்து கொண்டதற்காக, வித்வச் சபை நிர்வாகிகளைச் சங்கீத ரஸிகர்கள் பாராட்ட வேண்டும். 'தாம் செய்ததே சரி' என்று மரம் போல் வளைந்து கொடுக்காமல் நிற்பவர்கள், இந்த உலகில் எந்தப் பெரிய காரியத்தையும் சாதித்தது கிடையாது. இந்த விஷயத்தில் வித்வத் சபை நிர்வாகிகள் நடந்துகொண்டது வருங்காலத்திலும் அந்த சபை மேன்மை பெற்று விளங்கப் போகிறதென்பதற்கு அத்தாட்சியாயிருந்தது.

வாழ்க சங்கீத வித்வத் சபை!

- கல்கி, ஜனவரி 11, 1953



ஒரு வீடு இரு காட்சி...

ஆரணி யுவராஜ்

நான் சொல்லப் போகும் விஷயம் ரசனைக்குரியதா, புதிரா என்று என்னால் இனம் பிரிக்க முடியவில்லை. யோசித்துப் பார்த்தால், பலரது வாழ்க்கையிலும் இதுபோன்ற புதிர் சம்பவங்கள் இருக்கக்கூடுமென்று தெரிகிறது.

திருநாவுக்கரசு எனது திருநாமம். பத்மாவதி எனது மனைவி. அரசாங்கத்தின் வேண்டுகோளை நிராகரித்த குடும்பம் எங்களுடையது. எனக்கு மூன்று பெண்கள், ஒரு பையன் என நான்கு வாரிசுகள். பையன்தான் கடைசி. ஆண் வாரிசு வேண்டும் என்ற ஆசையில் வரிசையாகப் பெற்றுக் கொண்டேன்.

குடிசையாக இருந்தாலும் சரி, மாளிகையாக இருந்தாலும் சரி, அங்கே ஆணுக்கென சில சலுகைகள் வழங்கப்படுகின்றன. என் வீட்டிலும் அப்படித்தான். மகன் நரேந்திரனுக்கு சில சலுகைகள் இருந்தன. இதனால் அவனது சகோதரிகளுக்கும் அவனுக்கும் எப்போதும் வாக்குவாதங்கள்தான். பெண்களின் கோபம் புதைந்த வார்த்தைகளும், அவனது அலட்சியம் கலந்த பதில் வார்த்தைகளுமாக வீடே கலகலக்கும்.

அன்று ஞாயிற்றுக்கிழமை மத்தியான நேரம். நரேந்திரன் வெளியே போய் இருந்தான். மூன்று பெண்களும் வீட்டில் தொலைக்காட்சி முன்பு இருந்தார்கள்.

"சரோ, இன்னிக்கு இந்தியா மேட்ச் இருக்கில்லே? போச்சுடா. இன்னும் கொஞ்ச நேரத்துல கடோத்கஜன் வந்துடுவான். ரிமோட்டைப் பிடுங்கி வெச்சுப்பான்" என்றாள் இரண்டாமவள் கஸ்தூரி.

''சன்னிங் சன்ல 'ஜீன்ஸ்' படம் போடறான். பார்க்க முடியாது'' என்று கவலைப்பட்டாள் இளையவள் நிவேதா.

"ஏன் பார்க்க முடியாது?'' என்று கேட்டாள் மூத்தவள் சரோஜினி.

"அவன் மேட்ச் பார்ப்பானே."

''நாம படம் பார்க்கணும்னு சொல்வோம்.''

''அந்தச் சனியன்கிட்ட யாருடி மல்லுக் கட்டறது?''

"நான் பார்த்துக்கறேன். நீங்க பேசாம இருங்க" என்றாள் சரோஜினி.

போருக்குத் தயாராகும் மைதானமாக அந்த இடத்தை கற்பனை செய்து கொண்டேன். இந்த ஐ.நா. சபை தலைவரின் பேச்சு, எந்த அளவிற்கு எடுபடும் என்பதை, போரின் தீவிரத்தை வைத்துத்தான் சொல்ல முடியும்.

தொலைபேசி ஒலித்தது. பத்மாதான் எடுத்தாள்.

"ஹலோ? என்ன செல்வம்? இருக்காரே. என்ன விஷயம்? நரேன் எங்கே? சரி தரேன்" என்றாள்.


'என்ன?' என்பது போல் பார்த்தேன்.

"நரேன் ஃப்ரெண்ட் செல்வம் பேசறாங்க. உங்ககிட்டே என்னமோ பேசணுமாம்" என்றாள்.

"என்கிட்டே என்ன பேசணுமாம்?"

"வேற என்னப்பா? ரெண்டு பேருமாத்தான் கிரிக்கெட் விளையாடப் போனாங்க. எந்த கார் கண்ணாடியையாவது உடைச்சு இருப்பாங்க. போங்க, போய்ப் பணம் கொடுத்துட்டு வாங்க" என்றாள் சரோஜினி.

ரிசீவரை வாங்கியவன் செல்வம் சொன்ன செய்தியைக் கேட்டு அதிர்ந்து போனேன். குரல் தடுமாறியது. "எ... என்னங்கடா, பார்த்து விளையாடக் கூடாதா? எ... எந்த ஆஸ்பிடல்? சரி



வரேன்'' என்று கூறி வைத்தேன்.


"என்னங்க ஆச்சு?'' என்று பதற்றத்துடன் கேட்டாள் பத்மா.

''பந்தை எடுக்கறதுக்கு ரோட்டுல ஓடினப்ப, நரேன் மேல் ஸ்கூட்டர் மோதிட்டதாம்.''

பதறிய நான்கு பேரையும் சமாதானம் செய்துவிட்டு, வீட்டிலேயே

போட்டுக்கிட்டு இருக்காங்க. திடீர்னு குறுக்குல வந்துட்டான். நான் பிரேக் பிடிக்க எவ்வளவோ ட்ரை பண்ணேன். முடியலை'' என்று வருந்தினார் அவர்.

'தபதப' என பின்னால் காலடியோசை கேட்டது. திரும்பிப் பார்த்தேன். கலங்கிய கண்களுடன் சரோவும் கஸ்தூரியும் வந்து கொண்டிருந்தார்கள்.



இருக்குமாறு சொல்லிவிட்டுக் கிளம்ப, பத்மா தானும் வந்தே தீருவேன் என கிளம்பினாள்.

மருத்துவமனையில் நரேந்திரனின் நண்பர்கள் மூன்று பேர் சோகமாய் நின்றிருந்தார்கள். கூடவே இன்னொருவர்.

''என்னங்கடா ஆச்சு?'' என்று கேட்டேன்.

''பயப்படாதீங்க சார். தையல்

"உங்களை வீட்லதானே இருக்கச் சொன்னேன். ஏன் வந்தீங்க?''

"நிவேதா இருக்கா. நரேனுக்கு எப்படிப்பா இருக்கு?'' என்று அழுதாள் சரோஜினி.

"அழுவாதீங்க. ஒண்ணுமில்லே'' என்றான் செல்வம்.

டாக்டர் வந்தார், "தையல் போட்டாச்சு. டிஸ்டர்ப் பண்ணாம பாருங்க.''

உள்ளே ஓடினோம். கட்டிலில்



படுத்திருந்தான். நெற்றியில் கட்டு போடப்பட்டிருந்தது.

''நரேன்! நரேன், இங்கே பாருடா'' என்றாள் கஸ்தூரி.

தலையை மெல்லத் திருப்பினான். எங்களைத்தான் பார்த்தான். ஆனால் அந்தப் பார்வை பயம் அளிப்பதாக இருந்தது. முன்பின் தெரியாதவர்களைப் பார்ப்பது போல் இருந்தது.

''என்னடா அப்படிப் பார்க்கறே. நான்தான் சரோ. அம்மா, நீ கூப்பிடும்மா.''


''ப்ளீஸ். கொஞ்சம் சும்மா இருக்கீங்களா?'' என்றாள் நர்ஸ்.

''ஏன் சிஸ்டர் இப்படிப் பார்க்கறான்? தலையில அடிபட்டதுல ஏதாவது...''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. அரை மயக்கம். சரியாயிடும்''

அதற்குள் இன்னொரு நர்ஸ், ''ஃபோன் வந்திருக்கு. யாரோ நிவேதாவாம்'' என்றாள்.

இந்த மருத்துவமனை தொலைபேசி எப்படித் தெரிந்தது என ஆச்சர்யப்பட்டேன். சரோ ஓடினாள். பின்னாலேயே சென்றேன்.



''நேத்திக்கு சபா கான்டீன்ல சாப்பிட்டுட்டு பார்த்தா பையில காசே இல்லை...''

''மாவாட்டினீங்களா?''

''அப்படி சொல்லியிருந்தாத்தான் பரவாயில்லியே... கச்சேரிலயில்ல உக்கார வச்சுட்டாங்க...!''

- எம்.ஆர். மூர்த்தி

''ஆமாடி, தலையில பெரிய கட்டுப் போட்டிருக்காங்க. கூப்பிட்டா எங்கியோ பார்க்கறான்டி. பயமா இருக்குடி'' என்று அழுதாள்.

நான் அவளிடமிருந்து ரிசிவரைப் பிடுங்கினேன். ''நிவேதா, நான் அப்பா பேசறேன். நரேனுக்கு ஒண்ணுமில்லே. அழுவாதே. அவ சொல்வா. அதெல்லாம் ஒண்ணுமிலே. நீ வர வேண்டாம். நாங்களே கூட்டிட்டு வர்றோம்'' என்று சமாதானம் செய்து முடிப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது.

ஒருவழியாக அழுது கொண்டிருந்த இவர்களை சரிசெய்து, மயக்கம் தெளிந்த நரேனை ஆட்டோவில் அழைத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றோம்.

இது முடிந்த இரண்டு வாரங்கள் கழித்து இன்னொரு ஞாயிற்றுக் கிழமை.

''டேய் சேனலை மாத்துடா. கிரிக்கெட் ரொம்ப முக்கியமோ? அதை விளையாடப் போய்தானே அடிபட்டே. அப்பவும் புத்தி வரலியா?'' என்று கத்தினாள் சரோஜினி.

''ஏய் சும்மா கத்தாதே. மேட்ச் முடியட்டும். அப்புறம் எந்த சேனலாவது பாருங்க'' என்றான் நரேன்.

''திமிரு. நிவேதா அன்னிக்கு இவனை ஆஸ்பிட்டல்ல பார்த்து இருக்கணுமே... சேது விக்ரம் மாதிரி இருந்தான். போயிடுவான்னு நினைச்சேன். பாவி பிழைச்சுட்டான்.''

''அவ்வளவு சீக்கிரம் போவானா? நம்ம உயிரை எல்லாம் எடுத்துட்டுத் தானே போவான். எமன்.''

''நான் எமன். நீ எருமை. போடி.''

''உன் மேல் ஸ்கூட்டர் மோதி இருக்கக் கூடாதுடா. லாரி மோதி இருக்கணும்.''

''அப்பகூட லாரிதான் சரோ ரிப்பேர் ஆகி இருக்கும்.''

நான் திகைப்புடன் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அன்றைய ஞாயிறும் இன்றைய ஞாயிறும் மாறி மாறி என் மண்டைக்குள் ஃப்ளாஷ் ஆகின்றன. இவர்களின் பாசமும் சண்டையும் ரசனைக்குரியதா? புதிரா?

Rtn. J. SUDHANANDHEN

145, THIRUNAGAR, ERODE- 638 003
Ph : 0424 - 24 210796, 214779.
FAX : 0424 - 222379.

PRESIDENT : SOUTH INDIA SENGUNTHA MAHAJANA SANGAM, CHENNAI
VALLAL SABAPATHI MATRICULATION SCHOOL, CHENNAI

CHAIRMAN : RUAL SELF HELP PROJECT (2002 - 2003)
ROTARY DISTRICT CONFERENCE (2003 - 2004)
R.I.DIST, 3200.

CORRESPONDENT : ERDOE SENGUNTHA COLLEGE, Thudupathi.
M.P.NACHIMUTHU M.JAGANATHAN ENGINEERING COLLEGE, CHENNIMALAI
SENGUNTHAR HIGHER SECONDARY SCHOOL, ERODE..
SENGUNTHAR MATRICULATION HIGHER SECONDARY SCHOOL, ERODE..
SENGUNTHAR GIRLS HIGHER SECONDARY SCHOOL, ERODE..
MOTTAPPAR MIDDLE SCHOOL, Vallipurathampalayam
SENGUNTHAR KALVI NILAYAM, ERODE.



14.07.04

" DIAWIN " பிஸ்கட் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து தொடர்ந்து சாப்பிட்டு வருகின்றேன். நீரிழிவு நோயாளிகள் தொடர்ந்து மருந்து சாப்பிட்டு வருபவர்களுக்கு, இது ஒரு மாற்று மருந்தாக இல்லாமல் தினசரி சிற்றுண்டியாக பயன்படுகிறது. நீரிழிவு நோய் கட்டுப்படுவதுடன், உடம்புக்கு தெம்பும் நாள் முழுவதும் சோர்வின்றி உழைக்கவும் பயனுள்ளதாக உள்ளது.



அசத்தல் ஹீரோ

‘அட்டகாசம்’ படத்தின் மெகா வெற்றி, அஜித்தின் வேகத்தை மேலும் கூட்டியிருக்கிறது. அழகும்கூட ஒரு படி கூடியிருக்கிறது. அஜித்தின் அடுத்த அட்டகாசம் ‘ஜி’. பொங்கல் வெளியீடாக வரவிருக்கும் இந்தப் படத்தில் இடம்பெறும் ஒரு டான்ஸ் நம்பர் ‘வம்பை விலைக்கு வாங்கும் வயது’. பிரசாத் ஸ்டூடியோவில் இந்தப் பாடலுக்குக் குத்து நடனம் ஆடிக்கொண்டிருந்தார் அஜித். நடனத்தை அமைத்திருந்த டான்ஸ் மாஸ்டர் தினேஷை நெருங்கி, "அஜித் ஆட்டம் இப்போது எப்படி?" என்றோம். "ஆடுவது அஜித் தானா என்று அடிக்கடி சந்தேகம் வந்துவிடுகிறது. மனிதர் செம குத்து குத்துகிறார்" என்று ஒப்புக்கொண்டார். அந்நேரம் "என்னைப் பற்றி என்ன ரகசியம்?" என்றபடி வியர்வையில் குளித்திருந்த அஜித் அருகே வர, அதுதான் சாக்கென்று "அட்டகாசம் வெற்றி சந்தோஷமா? சங்கடமா?" என்ற ரெடிமேட் கேள்வியை அவரிடம் கேட்ட அடுத்த வினாடி, "எனக்குச் சந்தோஷம்! எதிரிகளுக்குச் சங்கடம்!" என்ற பட்டாசு ரக பதிலை வெடித்தார்.

"'அட்டகாசத்'தில் தூத்துக்குடி தாதா கேரக்டருக்கு டூப் போடாமல் நானே சண்டைக் காட்சிகளில் நடித்தேன். தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகக் காட்சிகளை மேச் செய்வதற்காக காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தில் சண்டைக் காட்சிகளை எடுத்தோம். அங்கே வடசென்னையைச் சேர்ந்த பல நிஜ தாதாக்கள், படப்பிடிப்பை வேடிக்கை பார்க்க வந்துவிட்டார்கள். வந்தவர்கள் சண்டைக் காட்சிகளில் எனது ஈடுபாட்டைப் பார்த்து "தல! தல!" என்று கூப்பிட ஆரம்பித்துவிட்டார்கள். "கட்டப் பஞ்சாயத்துக்கு நீ வந்துட்டா கலக்கலாம் தல!" என்று கமெண்ட் அடித்தார்கள். நல்லவேளையாக படப்பிடிப்பு சில தினங்களிலேயே முடிந்துவிட்டது" என்று வயிறு குலுங்கச் சிரித்த அஜித்தின் 'அட்டகாசம்' பட காமெடியைப் பாராட்டி, பெண் ரசிகைகளின் கடிதங்கள் குவிந்தவண்ணம் இருக்கிறதாம். "இனி காமெடியிலும் கவனம் செலுத்துவேன்" என்று கண்ணடித்த அஜித்தை "ஷாட் ரெடி" என்றபடி அழைத்துப் போனார்கள். நமக்கு 'ரெடி ஜூட்' என காதில் விழுந்தது.



அசத்தல் வில்லன்

'நெறஞ்ச மனசு' படத்தில் வரும் சிவனாண்டியா இவர்? சம்பத்குமாரை நேரில் பார்க்கிற யாரும் நம்ப மறுப்பார்கள். தோற்றத்தை அடியோடு மாற்றிக்கொண்டு, மண் வாசனை வில்லனாக, இயல்பாக நடித்திருக்கும் இவர், "கலக்கிட்டான்யா!" என்ற ரசிகர்களின் விருதை அறிமுகப் படத்திலேயே அள்ளியிருக்கிறார்.

"நான் பிறந்தது உத்தரப்பிரதேசம். படிச்சது பஞ்சாப். வாழறது பெங்களூர்ல. என் அப்பா ஓர் இராணுவ டாக்டர். நான் அச்சு அசல் தமிழன். வீட்டுல அம்மா மட்டும் தான் தமிழ் பேசுவாங்க. அவங்கதான் தமிழ் கத்துக் கொடுத்தாங்க." என்று கூறும் இவர், எட்டு வயதுப் பெண் குழந்தைக்குத் தந்தை!

"படத்துல விஜயகாந்தைக் கொல்றதுக்கு எனது அண்ணன் இளவரசுவும், தம்பி வெங்கட்பிரபுவும் ஒப்புக்கொள்ள மாட்டாங்க. உடனே ரெட்டைப் பிறவிகளான எனது பசங்களைத் தூக்கிப் பெரிய கிணத்துல போட்டுட்டு, நானும் தற்கொலை செய்துக்க முயற்சிப்பேன். இதைப் பார்த்துட்டு எனது பங்காளிங்க விஜயகாந்தைக் கொல்ல ஒப்புக்கறது மாதிரி காட்சி. இந்தக் காட்சியை உடுமலைப் பேட்டையில் எடுத்தோம். படப்பிடிப்புக்கு என்னோட எட்டு வயது மகளையும் கூட்டிட்டுப் போயிருந்தேன். இந்தக் காட்சி படமாக்கப்பட்டபோது என் பொண்ணு கதறி அழுதுட்டா. என்னைப் பார்த்து "நீ கெட்ட அப்பா!"ன்னா. நான் நொந்தே போயிட்டேன். பிறகு அந்தப் பசங்கள கூப்பிட்டுக் காட்டி 'இதெல்லாம் நடிப்பு'ன்னேன். அவ நம்பலை" என்றவர், படத்தில் மதுரை வட்டார வழக்கு மொழியில் சுத்தமாகப் பேசி அசத்தியிருக்கிறார்.

சம்பத் அறிமுகமானது கன்னட சினிமாவில். "'பம்பா' என்ற கன்னடப் படத்துல நடிச்சேன். படம் முடிஞ்சு வெளிவரத் தாமதமாகும்னு தெரிஞ்சதும், இயக்குனர்கிட்ட அனுமதி வாங்கி படத்தை சி.டியிலே பதிவு பண்ணி அப்பாவிடம் காட்ட வீட்டுக்குப் போனேன். ஆனால், அவரை ஏற்றி வந்த ஆம்புலன்ஸ் என்னைத் தாண்டிப் போனது. அவசர சிகிச்சைப் பிரிவுக்கு போய் டாக்டரோட அனுமதி வாங்கி ஒரு காட்சியாவது அவருக்குப் போட்டுக் காட்ட முயற்சித்தேன். அதுக்குள்ள அவர் உயிர் பிரிஞ்சுடுச்சு. என் மேல முழு நம்பிக்கை வைச்சிருந்தது அவர்தான்" என்று கண்களில் நீர்கோக்க நினைவு கூரும் சம்பத்துக்கு தமிழில் எக்கசக்க வாய்ப்புகள்!

- ஸ்ரீ



உலக சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்டது அமெரிக்க இரட்டைக் கோபுர வீழ்ச்சி. அது ஏற்படுத்திய பீதி இன்னமும் அமெரிக்கர்களை விட்டு அகலவில்லை. எங்கும் எப்போதும் அலர்ட்டாக இருக்கிறார்கள். குறிப்பாக, விமான நிலையங்களில் ஏகக் கெடுபிடி. இசை நிகழ்ச்சிக்காக அமெரிக்காவுக்குச் சென்று அல்லல்பட்ட கலைஞர்கள் சிலர், தங்களின் அனுபவங்களை இங்கே பகிர்ந்து கொள்கிறார்கள்.

அமெரிக்...

ஸ்ரீராம்குமார்:

"முன்பெல்லாம் விமானம் நிற்கும் இடத்துக்கு மிகவும் பக்கத்திலிருக்கிற கேட் வரை, வழி அனுப்ப வந்தவர்களை அனுமதிப்பார்கள். ஏதோ பேருக்கு மெட்டல் டிடெக்டர் என்று ஒன்று இருக்கும். ஆனால், செப்டெம்பர் 11 இதையெல்லாம் தலைகீழாக மாற்றிப் போட்டுவிட்டது என்பது நியூயார்க், சிக்காகோ, பாஸ்டன், சான்பிரான்ஸிஸ்கோ, டல்லாஸ் போன்ற அத்தனை விமான நிலையங்களிலும் தெளிவாகவே தெரிந்தது. அமெரிக்கர்களின் நம்பிக்கை அடியோடு அசைக்கப்பட்டு விட்டது.

விமானப் பயணிகள் ஒவ்வொருவரின் லக்கேஜையும் மெட்டல் டிடெக்டரின் மூலம் தீவிரமாகச் சோதிக்கிறார்கள். தவிர, வரிசையில் நிற்கும் பயணிகளில் சிலரைக் குத்துமதிப்பாக அழைத்து, அவர்களையும் சோதனை செய்கிறார்கள். ஷூக்களைக் கூட கழற்றியாக வேண்டும். சில மாதங்களுக்கு முன் ஷூவில் வெடிகுண்டு ஒன்றை மறைத்துக் கொண்டு வந்த ஒரு பயணியின் சதி அம்பலமானதிலிருந்துதான் இப்படி. அதிலிருந்து சாம்பிளுக்குச் சில பயணிகளின் ஷூக்களையாவது பரிசோதிக்காமல் விடுவதில்லை.

அதுவும் வெளிநாட்டு பாஸ்போர்ட்களுக்குத் தனி வரிசை. அதிகப்படி சோதனை. இரு கைகளையும் நீட்டி வைக்கச் சொல்லிவிட்டு பரிசோதனை செய்கிறார்கள். தோளில் மாட்டிச் செல்லும் பையைக்கூட திறந்து சோதிக்கிறார்கள்.

'அதிக கெடுபிடி... ம்!' என்று அமெரிக்கர்களே அலுத்துக் கொள்கிறார்கள். விமானம் கிளம்புவதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னால் விமான நிலையத்துக்குப் போனால் போதும் என்கிற நிலை மாறி, இரண்டு மணி நேரத்துக்கு முன்னால் அங்கு இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. வழியனுப்ப வந்தவர்களையெல்லாம் விமான நிலையத்தின் வெளியிலேயே நிறுத்தி விடுகிறார்கள்.

இதையெல்லாம் தவறென்று சொல்ல முடியாது. பட்டவர்களுக்குத்தானே தெரியும். சொல்லப் போனால் இப்படித் தீவிரமான சோதனைகள் நடத்தப்படுவதால் பாதுகாப்பான பயணம் உறுதி என்கிற நிம்மதி மகிழ்ச்சியையே ஏற்படுத்துகிறது.

இத்தனை கெடுபிடிகளுக்கிடையே ஒரு கலாட்டா! மெம்ஃபிஸ் செல்வதற்காக நியூயார்க் ஏர்போர்ட்டில் செக் இன் செய்த போது, எனது பெயரில் வேறொரு பயணி ஏற்கெனவே செக் இன் செய்து விட்டிருந்தார்! என் பாஸ்போர்ட்டைக் காட்டி எனது அடையாளத்தை உறுதி செய்தேன். சில நிமிடங்கள் பதறிப் போய் பின்னர் அந்தப் பயணியைக் கண்டு பிடித்துவிட்டனர்! கம்ப்யூட்டரை இயக்கி போர்டிங் பாஸ் வழங்கிய ஊழியரின் கவனக்குறைவால் இப்படியொரு தவறு!"

அருண்பிரகாஷ்:

"நான் கொண்டு சென்ற தண்ணீர் பாட்டிலிலிருந்து என்னைக் கொஞ்சம் தண்ணீரைக் குடிக்கச் சொன்னார்கள் விமான நிலைய அதிகாரிகள்! எனக்கு மட்டுமல்ல, பலருக்கும் இதே நிலைதான். ஏதாவது விஷத் தண்ணீரை எடுத்துச் சென்று விமான ஊழியர்களிடம் கொடுத்து குடிக்கச் சொல்லி, வன்முறை



யில் ஈடுபட்டு விடுவார்களோ என்கிற பயம்தான் காரணம்.

சிகாகோ விமான நிலையத்தில் நான் ஏறி உட்கார்ந்து கொண்ட பிறகு, ஏற்கெனவே அதில் ஏறி உட்கார்ந்திருந்த ஒரு பெண்மணியை இறங்கச் செய்து சோதனை நடத்தினார்கள். விமானத்தில் அமர்ந்த பிறகு ஒரு பயணியை இறக்கிச் சோதனை நடத்தியது அதுவே முதல்முறையாம்.

என் தோள் பையில் மிருதங்கத்தில் சுருதி சேர்ப்பதற்காக சிறு கல் ஒன்றை வைத்திருப்பேன். கூடாது என்று கூறி விட்டார்கள்!''

பாம்பே ஜெயஸ்ரீ:

"9/11 சம்பவத்தின்போது நியூயார்க் அருகில்தான் இருந்தேன். 13ம் தேதி நியூயார்க்கில் எனக்கு புரோக்ராம். ஜெட்லாக் பிரச்னையால் அன்றைக்குத் தூங்காமல் டீ.வி பார்த்துக் கொண்டிருந்தபோது சி.என்.என் சானலில் இரண்டாவது டவரை விமானம் தகர்ப்பதை லைவ்வாக காண்பித்துக் கொண்டிருந்தார்கள். என் கணவர் என்னிடம் வந்து "ஏன் இந்நேரத்தில் ஆக்ஷன் படங்களைப் பார்க்கிறாய்?'' என்று கேள்வி எழுப்பினார். அப்பொழுதுதான் இருவரும் டீவி ஓரத்திலிருந்த 'லைவ்' என்கிற வார்த்தையைப் பார்த்து ஷாக்கானோம். அமெரிக்க மக்கள் நம்பிக்கைக்கு அதிமுக்கியம் அளிப்பார்கள். இச்சம்பவத்தால் வாழ்வில் நம்பிக்கையற்று, அதன்பின் சில மாதங்கள் விமானத்தில் பயணிக்கவே பயந்தார்கள். அதன்பின் பயணித்தபொழுதெல்லாம் செக்யூரிட்டி மிகக் கடினமாக இருந்தது. தம்பூராவை தலைகீழாகக் கவிழ்த்து சோதிப்பார்கள். ப்ரவுன் ஸ்கின் உடையவர்களைத் தீவிரமாக கண்காணிப்பார்கள். விசா வழங்குவதில் எப்போதுமில்லாத கெடுபிடி. நான் மியூசிஷியன் என்பதால், ஓரளவு சிரமங்களிலிருந்து தப்பித்துக் கொள்கிறேன். 2001க்கு முன்னால் செக்யூரிட்டி தலைவலி என்பது சிறிதுமிருக்காது. இதெல்லாம் யு.எஸ். உள்ளே நுழையும்போதுதான். திரும்பி வரும்போது எதுவும் நெருக்கடியாக இருப்பதில்லை.''

- ஜி.எஸ்.எஸ், எழில்


ஆ!




* பாம்பே ஜெயஸ்ரீ



* அருண்பிரகாஷ்



* ஸ்ரீராம்குமார்



குயில் தோட்டம்

• சீதா ரவி

"அக்கூவ் கூவ்... கூவ்..." படிப் படியாக உயர்ந்துகொண்டே போன குரல், கார்த்திகேயனின் கலக்கமான கனவுகளை ஊடுருவி உசுப்பியது. நிலவைத் தொடும் உயரத்துக்குப் போய், புள்ளியாய் அது நின்ற போது வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தான்.

ஜன்னல் வழியே பௌர்ணமி கிரணங்கள் படுக்கையில் விழுந்தன. அலாரம் கடிகாரம் இரண்டு மணி காட்டியது. இரவைப் பகலென எண்ணி மயங்கிய குயில்கள், தோட்டத்தில் மீண்டும் ரகளையை ஆரம்பித்தன... "அக்கூவ்...கூவ்..." - வலிமையும் இனிமையும் பிணைந்தெழுந்த குயிலோசை அவனை வாட்டி வதைத்தது. துயரமும் இயலாமையும், நெஞ்சக் கதவுகளில் தாறுமாறாக மோதி வதைத்தன. காதுகளை இறுக்கிப் பொத்திக் கொண்டான் கார்த்திகேயன்.

"குரல் என்றால் என்ன குரல் ஐயா! கீட்ஸ் வானம்பாடிக்கு பாடிய வாழ்த்துப் பாவின் ஜீவ வரி தான் ஞாபகம் வருகிறது... வஸந்த காலத்தின் வர்ணனையாக நெகிழ்ந்தோடும் பூரணமான சாரீரம்... வானம்பாடி கிடக்கட்டும்... கார்த்திகேயனின் குரல் ஒரு குயில் தோட்டம்..."

- அவைத் தலைவர் பேசப் பேச, அரங்கில் ரசிகர்கள் வெறி பிடித்த மாதிரி





கைதட்டினார்கள்.

அந்தப் புகழும் போற்றுதலும் இன்று இருளில் கரைந்த நிழல்போல் ஆகிவிட்டன. வெளிச்சம் என்பது, நிழலின் நிழலாக மாயம் காட்டுகிறது.

கைகளைக் காதுகளிலிருந்து இலேசாக நீக்கியபோது, கடிகார முள் நகரும் 'டிக் டிக்' ஓசை இடி முழக்கம்போல் கேட்டது. குயில்கள் ஓய்ந்திருந்தன.

மினியிசைத் தொடர்-1


மீண்டும் தலை சாய்த்த போதும் வினோதினி தூங்கிக் கொண்டேயிருந்தாள். ஒருக்களித்துத் திரும்பி நிலவொளி விழுந்த அவள் முகத்தைப் பார்த்தான்.

'நிச்சலனமாகத் தூங்குகிறாள், இராதகி...!' எல்லாம் மாறிவிட்டது. தீர்மானமாக. இரவு எந்நேரமானாலும் நைட்டிக்கு மாறி, பக்கத்தில் வந்து உட்கார்ந்து பூமணத்தைப் படர விட்டவள், புடைவையைக் கூட மாற்றிக் கொள்வதில்லை. பகலிலும் ஒரு விலகல் தெரியாமலில்லை. பரிமாறுவதில், பேச்சில், சின்னச் சின்ன செய்கைகளில்... 'வினோதினி!' என்று அவன் அழைத்தால், உள்ளம் துள்ள ஏறிட்டுப் பார்க்கும் கண்களின் நேசத்தில் - சகலத்திலும் அன்பின் எடை



நலிந்துவிட்டது. குரலோடு தொலைத்த இசை, அது தந்த வாய்ப்புகள், வருமானம், புகழ், வரவேற்பு என்னும் இழப்புப் பட்டியலில் இறுதியாய் உறுதியாய், வினோதினியின் காதல் எழுதப்பட்டிருப்பதாய் உணர்ந்தான் கார்த்திகேயன். அச்சம் அவன் உள்ளத்தை நிறைத்து வியர்வையைப் பெருக்கியது.

உள்ளுணர்வின் உந்துதலில் கண்



விழித்தாள் வினோதினி.

"என்ன ஆச்சு? ஏன் இப்படி வியர்த்திருக்கு...?'' கார்த்தி... உங்களைத்தானே கேட்கறேன்... ஏதாவது கனவா... கெட்ட கனவா...? ஒண்ணும் ஆகாது... பயம் வேண்டாம்பா."

சேலைத் தலைப்பால் அவன் முகத்தைத் துடைக்க அவள் முயன்றபோது விலகிக் கொண்டான்.

''நீதான் நிம்மதியாத் தூங்கறியே... உனக்கென்ன! ராத்திரியைப் பகலா நினைச்சு வெளில குயில் கூவித் தீர்க்கறது... திரும்பத் திரும்பத் திரும்பக் கூவறது... எதுவும் உன்னை எழுப்பலை... இடி விழுந்தாக்கூட எழுந்திருக்க மாட்டே நீ..."

அவளுக்குப் புரிந்தது. குயில்களின் குரல் விளையாட்டு, அவனுக்குள் ஏற்படுத்திய வேதனை அவளையும் வருத்தியது. எப்பேர்ப்பட்ட குரல்! நினையாத இடங்களைத் தொட்டுத் தாவி திரும்பி, உணராத உணர்வுகளையும்கூட சுமந்து வந்து, மடியில் போட்டு விளையாட்டுக் காட்டுவான் கார்த்திகேயன்.

கல்லூரி இசைப் போட்டிகளில் அவன் பாடக் கேட்டு இதைச் சொன்னபோது, அவனிடம் கேட்டான்:

"அதென்ன உணராத உணர்வு...?"

"சொல்லத் தெரியலை..." அவன் கண்களை நேராகச் சந்தித்துத்தான் பதில் சொன்னான். அவர்களிடையே ஒரு பந்தம் மலர்ந்த அந்தக்கணம், பின்னால் பல விஷயங்களைச் சொல்ல வைத்தது.

"இன்னைக்கு ஒரு புது மெருகு இருந்ததே பாட்டுல..."

''நீ வந்திருக்கிறதைப் பார்த்துட்டேனில்ல... அதனாலதான்..."

''அப்போ நான் வரலைன்னா...?"

"வராம இருந்து பாரேன்..."

போகாமல் வினோதினியால் இருக்க முடியவில்லை. கார்த்திகேயனின் குரலும் ஆளுமையும் மட்டுமே அதற்குக் காரணமில்லை என்று விரைவில் உணர்ந்தாள். அவனுடைய சங்கீதத்தில், அவற்றைக் கடந்து மேன்மையின் அறிகுறிகளை உணர்ந்தாள். தன் இதயம் தேடுகிற மேன்மையும் அதுவே என்பதில் அவளுக்குச் சந்தேகம் இருக்கவில்லை.

கார்த்திகேயனிடம் இதைச் சொன்னபோது, "நீ சொன்னா சரியாத்தான் இருக்கும்" என்றான். சுற்றும் முற்றும் பார்த்து விட்டுச் சட்டென்று அவளை முத்தமிட்டான்.

பொத்தி வைத்த அந்தப் புத்துணர்வை வார்த்து, இப்போது கார்த்தியின் நெற்றியில் இதழ் பதித்தாள் வினோதினி.

"சரி சரி, தூங்கு!" என்றான் கார்த்திகேயன்...


"கோபமா...?"

"அதான் சொன்னேனே... இடி விழுந்தாலும் நீ தூங்குவே..."

"இடி விழுந்து எழுந்திருக்கலைன்னா என்ன...? உங்களுக்கு இப்படி வியர்த்துவிட்டிருக்குன்னவுடனே எனக்கு முழிப்பு காண்றதா இல்லியா...?"

கார்த்திகேயன் மௌனமானான்.

"இதோ பாருங்கோ கார்த்தி... கொஞ்ச நாளாவே உங்களுக்கு என் பேர்ல கோபம்... எரிச்சல்... எல்லாத்தையும் புரிஞ்சுக்கறேன்... வாரத்துக்கு மூணு கச்சேரி பண்ணிண்டிருந்த ஒருத்தருக்கு, புகழோட உச்சியில இருக்கிறபோது இப்படி ஆச்சுன்னா எப்படியிருக்கும்னு தெரியாதா... போறாத்துக்கு ஊர் பேசற பேச்சு, ஏச்சு எல்லாம் சேர்ந்து பக்கம் பக்கமா தாக்கறது..."



உமையாள்புரம் சிவராமன் வெள்ளை உடையில் விருந்து ஒன்றுக்குச் சென்றார். வாழை இலையில் விருந்து. ஆனால் உட்கார மணை தரவில்லை. தரையில் அமர்ந்தால் உடை அழுக்காகிவிடுமே! 'எனக்கு மிருதங்கம் வாசிக்க இருகை போதும். சாப்பிட வேண்டுமென்றால், பல கை வேண்டும்' என்றார்! உடனே பலகை வந்தது! 'சாப்பிட இரு கை போதாது என்ற எனக்கு இருக்கை போட்டு விட்டீர்கள்!' எனப் பாராட்டினார் அவர்!

– கிருஷ்



சற்றே இறுக்கம் தளர்ந்து அவன் பேசினான் "நேத்திக்கு மோகனம் டிரஸ்ட்டோட செக்ரட்ரி பேசினார்..."


"யாரு? சண்முகநாதனா...?"

"ஆமாம்... கார்த்திகேயன்! சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காதேங்கோ... உங்களுக்கு யாராவது செய்வினை வைச்சிருப்பா... இவ்வளவு கீர்த்தியோட ஆஸ்தியோட இருக்கறது பொறுக்காம, பொறாமையில பண்ணிருப்பா... அப்படின்னு ஆரம்பிச்சு என்னென்னவோ சொல்றார்."

"தப்பு கார்த்தி... அதெல்லாம் எதுவுமில்லே..."

"பின்னே... என்னதான் காரணம்ங்கறே... டாக்டர்கிட்டே போனா உடல் உறுப்பெல்லாம் இருக்க வேண்டிய இடத்துல இருக்குன்னு சர்டிஃபிகேட் தர்றார். ஜோசியரானா ஜாதகத்துல எதுவுமே பிரச்னையில்லன்றார்... ஆனா கண்ணாடி பொம்மையைக் கீழே போட்டு உடைச்சாப்பல, என் தொண்டை மட்டும் நொறுங்கிப் போச்சு... பாட முடியலை என்னால... அப்படியிருக்கறது எத்தனை கொடுமைன்னு உனக்கெங்க புரியப் போறது...? ஒண்ணும் புரியாது!"

"ப்ளீஸ் கார்த்தி. குழந்தை முழிச்சுக்கப் போறா... கத்த வேண்டாம்..."



"உனக்கு ஒரு இழவும் புரியாது!" - குரலை மட்டும் தாழ்த்தி உக்கிரத்தைக் கொட்டினான்.

"ஐயோ! எனக்குப் புரியாம இல்லை... எல்லாம் புரியறது. உங்க அதிர்ச்சி, ஏக்கம், இயலாமை... ஏமாற்றம் அதெல்லாம் எனக்கும் இருக்காதா...? உங்களைவிட அதிகமா எனக்கு இருக்கும்ன்றது ஏன் உங்களுக்குப் புரிய மாட்டேன்றது? இன்னும் தெளிவாச் சொல்றேன்... எனக்கு உங்க மேல காதல் போய்டுமோன்ற பயம் வந்துடுத்து... சரிதானே...?" அழுதுகொண்டே கேட்டாள்.

கார்த்திகேயன் பதில் பேசாது இருந்தான்.

சில கணங்களுக்குப் பிறகு கண்களைத் துடைத்துக் கொண்டு சொன்னாள்:

"எனக்கு ஒண்ணே ஒண்ணுதான் புரியலை... என்ன ஆனாலும் உங்களைப் பிரியமாட்டேன்றதை உங்களுக்கு நான் எப்படி உணர்த்தறதுன்றதுதான் இப்போ சுத்தமா புரியலை... போகட்டும், அதுக்கு ஒரு வழி பிறக்கும்... இப்போ தூங்கணும்..."

சின்னக் குழந்தையைப் போல அவனைப் படுக்கையில் சாய்த்து, பக்கத்தில் அமர்ந்து கொண்டாள். கை கால்களை இதமாக அழுத்திவிட, கார்த்திகேயன் மெள்ளத் தூங்கிப் போனான். ஆழ்ந்த உறக்கம். விடிய விடிய குயில்கள் கூவித் தீர்த்ததைக் கேட்டவாறு உட்கார்ந்திருந்தாள் வினோதினி. விடியல் மனத்துக்குப் புதுத் தெம்பு ஊட்டியது. அன்புச் சுடராகத் தன்னுள் ஒளிர்ந்த அம்பிகை எல்லாவற்றையும் தீர்த்து வைப்பாள்.

ஏழரை மணி அளவில் போன் அடித்தது.

"நந்து, போனை எடும்மா..."

ஓடிப்போய் எடுத்தாள் நந்தினி. எதிர் முனையில் கமலி பேசுவது புரிந்தது.

"அப்பா இன்னும் எழுந்திருக்கலை..."

"ம்... சொல்றேன் ஆன்ட்டி... மறக்க மாட்டேன்..."


நந்தினி போனை வைக்கவும், கார்த்திகேயன் வெளிப்பட்டான்.

"அப்பா... கமலி ஆன்ட்டி ஃபோன்.. இன்னிக்கு ஆன்ட்டி கச்சேரி முழுக்க உங்களுக்காகத்தான் ப்ரே பண்ணப் போறாளாம். இட் வில் பி அ பிரேயர் ஃபார் யுவர் டாடின்னு சொன்னா..."

வழிமறித்து நின்று ஆர்வமாய்ச் சொன்ன குழந்தையை முரட்டுத்தனமாகத் தள்ளிவிட்டான்.

"ஆமாம்! அவதான் சொன்னாள்னா அதை நீ வந்து எங்கிட்டச் சொல்லணுமாக்கும்...! அவாவா வேலையைப் பாருங்க போயி..."

துக்கம் தொண்டையை அடைக்க நின்ற குழந்தையை நெருங்கினாள் வினோதினி. விவரிக்க முடியாத சோர்வு அவளை அழுத்தியது. (தொடரும்)





"முன்பெல்லாம் தமிழ் சினிமாவில் பேய்க் காட்சிகளை எடுக்கணும்னா எங்க காலேஜுக்குத்தான் வருவாங்க. ஹலோ, வெயிட் வெயிட்... சிரிக்காதீங்க! செஞ்சுரி அடிச்ச கட்டடமும், காடு மாதிரி அடர்த்தியான மரங்களும்தான் அதுக்குக் காரணம். இப்போ நாங்கதான் வந்துட்டோமே... தேவதைகள் பேக் ட்ராப்புக்கு எங்க காலேஜை பயன்படுத்தலாம்."

இசை சிறப்பிதழுக்காக சென்னை அடையாறு தேம்ஸ் நதிக்கரையோரம் (புரிஞ்சிருக்குமே!) அமைந்துள்ள தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் பயிலும் பிரியதர்ஷினி, திலானி, ஹேமாவதி, ரேவதாட்சாயிணி, விஜிதா, ராதிகா, கவிதாவைச் சந்தித்தபோதுதான் இப்படி முன்னுரை கொடுத்தார்கள்.

வீட்டு நடுஹாலில் சுடர் விட்டு எரியும் குத்து விளக்காய், மங்களகரமாக இருக்கிறது இசைக் கல்லூரி. நாதஸ்வர இசையும், மிருதங்க அதிர்வுகளும், இழையும் வயலின் கீதமும், நாட்டிய நங்கைகளின் 'ஜல்ஜல்' ஒலிகளும் பழகியதாலோ என்னவோ, அடர்ந்திருக்கும் மரங்களின் அசைவுகளும் சுற்றிச் சுழலும் காற்றும் கூட மெல்லிசையாகிறது.

"ரொம்பவும் பரிசுத்தமான, பாரம்பரியமிக்க கல்லூரி இது. ராகிங்கில் கூட பத்தாவது முடித்து பால் வடிகிற முகத்தோடு வரும் முதல் வருட மாணவர்களை ஜஸ்ட் பாடிக் காட்டச் சொல்லி திருத்தங்கள் செய்வோம். அவ்ளோதான்" என்று ஆலாபனை பாடும் திலானி, விஜிதா, ப்ரியதர்ஷினி மூவரும் இலங்கையிலிருந்து இங்கு






இஞ்சிரங்கோ!

வேண்ட் ஆனவர்கள்.

'தெனாலி' படம் வந்த புதிதில் இவர்களது நண்பர்களெல்லாம் 'இஞ்சிரங்கோ' என்றுதான் அழைத்தார்களாம். "கொஞ்சம் தள்ளி நின்னு கேட்டவங்களுக்கு, 'இஞ்சித் தின்ன குரங்கே'ன்னு கேட்டிருக்கு" என்று சிரிக்கின்றனர்.

இங்கு வாய்ப்பாட்டும் வாத்திய இசையும் கற்றுத் தரப்படுகின்றன. இரண்டில் ஒன்றை மெயினாக எடுத்து, இன்னொன்றை துணைப் பாடமாக பயில வேண்டும். பத்தாவது முடித்தால் நேராக மூன்று வருடம் டிப்ளோமா, அதன்பின் ஒரு வருடம் ஆசிரியப் பயிற்சி என, ஒரு மாணவனை சகலகலாவல்லவனாக்கித்தான் வெளியே அனுப்புகிறார்கள். நுழைவுத் தேர்வு உலகமகா சிம்பிள். 'அலைபாயுதே கண்ணா'வோ அல்லது 'அப்படிப் போடு'வோ எதுவாயினும், பாட்டின் ஸ்ருதியும் லயமும் ஒன்றுசேர்ந்தால், 'உங்கள் வரவு நல்வரவாகுக' என்று அட்மிஷன் கொடுத்து விடுகிறார்கள். "மாலை நேரங்களில் பார்ட்-டைமாக ஒரு குருவிடம் இசை பயிலாமல், ஏன் கல்லூரிக்கே வந்து நான் முழுக்க இசை பயில்கிறீர்கள்?" என்றதுதான் தாமதம்... மலையாய்ப் பொங்கி பனியாய் உருகி விட்டார்கள்.

"நீங்கள் சொல்கிறவர்கள் பரம்பரை பரம்பரையாக இசைக் குடும்பத்தில் பிறந்தவர்களாக இருப்பார்கள். தாலாட்



டாக கர்நாடக சங்கீதத்தையே கேட்டு வளர்ந்திருப்பார்கள். ஆனால் இங்கே பெரும்பாலான வர்கள் குடும்பத்தில் முதன் முறையாக நாங்கள்தான் இசை கற்றுக் கொள்கிறோம். ப்ரைவேட் டாக போகும் பொழுது ஒரு மணி நேரத்துக்கு முன்னூறு ரூபாய், ஒரு மாதத்திற்கு இரண்டாயிரம் என்று ஃபீஸ் வாங்குகிறார்கள். ஆனால் இங்கே ஒரு வருஷத்துக்கே முன்னூறு ரூபாய்தான் ஃபீஸ். இசையென்பது தவம் போல. அதற்கு உடல், பொருள் எல்லாம் கொடுத்தால்தான் அது நமக்குத் திருப்பித் தரும்."

முதலிரண்டு வருடங்கள் தேமதுரத் தமிழிசையை தேவாரம், திருப்பாவை, திருக்குறள், பாரதியார் பாடல்கள் வழியாகச் சொல்லித் தந்து, இறுதியாக தெலுங்கு கீர்த்தனைகளோடு தெலுங்கும் கூடுதலாகக் கற்றுத் தருகிறார்களாம்.



"ச....ரி....க...ம....ப...த...நி...ச என்றுதானே புத்தகத்தில் இருக்கிறது. எப்படி ஏற்ற இறக்கங்களோடு பாடுகிறீர்கள்?" என்று அப்பாவியாகக் கேட்டால், பந்தா பண்ணு கிறார்கள். "அதுதான் தொழில் ரகசியம். எங்களுக்கு இப்பவே எவ்வளவு ஃபேன்ஸ் தெரியுமா? உறவினர்கள் வீட்டுக்குச் சென்றால் சுற்றி நின்று, 'ப்ளீஸ் பாடேன்' எனக் கொஞ்சும் போது, கால் தரையிலேயே நிக்காது. 'சாமஜ வரகமனா'ன்னு நீட்டி பாடும்போது, 'அக்கா.... சினாதானா பாடுக்கா'ன்னு குட்டீஸ் எல்லாம் நச்சரிக்கும்" என்று கண்சிமிட்டுகிறார்கள்.

இந்த இசைக் கல்லூரியின் இன்னொரு சுவாரஸ்ய அம்சம், மாணவர்கள் சட்டை, வேட்டி தான் அணிய வேண்டும். நோ டீ-ஷர்ட், ஜீன்ஸ். மாணவிகளுக்கு சேலை மற்றும் பாவாடை, தாவணி மட்டும். நோ சுடிதார்! வகுப்பறைகளில் தரையில்தான் அமர்கிறார்கள். "நடிகை பானுமதி எங்க கல்லூரியில் முதல்வராக இருந்தபோது இந்த விஷயத்துல ரொம்ப ஸ்டிரிக்ட். கேம்பஸுக்குள்ள பேண்ட், சுடிதார் நுழையவே கூடாது அவங்களுக்கு. அப்புறம் பசங்க வேட்டி கட்டிக்கிட்டு பஸ்ல வரும் போது, கன்வீனியன்ட்டா இல்லாததால இப்பொழுதெல்லாம் எல்லோரும் காலேஜுக்குள்ள வந்து வேட்டிக்கு மாறிடுவாங்க" என்ற ரேவதாட்சாயிணியின் கூரான கண்கள், முன்னூற்றி அறுபது டிகிரியிலும் சுழல்கின்றன. பின்னே பரத நாட்டிய மாணவி அல்லவா!

"எல்லாம் சரி, இசைப் பள்ளியில் பயின்ற எவரும், கர்நாடக சங்கீதத்திலோ அல்லது சினிமாவிலோ பிரபலமாகாததற்கு என்ன காரணம்?" என்று கேஷுவலாக கேட்டதற்கு ஒரு சிலருக்குக் கன்னம் சிவந்து விட்டது. "எங்கள் கல்லூரியில் படித்த அனைவருமே அரசு கல்லூரி, பள்ளிகளில் ஆசிரியராகவும், வெளி நாடுகளில் இந்தியக் கலைகளை வளர்க்கும் குருக்களாகவும் சிறந்த வாழ்க்கை வாழ்கின்றனர். இசை பயின்ற சான்றிதழ் பார்த்தாலே, வெளி நாடுகளில் விசா சுலபமாகவும் நீண்ட காலங்களுக்கும் கிடைத்து விடுகிறது. வேண்டுமானால் மீடியாவில் பிரபலம் ஆகாமல் இருக்கலாம். இதுதான் எங்கள் பதில். இருந்தாலும் வருங்காலப் பிரபலங்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கக் கூடாது" என்றனர் கோரஸாக.

• ச.ந.கண்ணன்

அட்டை, படங்கள் : ஸ்ரீஹரி

நன்றி : லக்ஷ்மண் ஸ்ருதி மியூசிகல்ஸ்



காங்குப்பம் கூத்துக் கலைஞர்!

"கச்சேரிகளுக்குப் போய் உட்கார்ந்து முழுமையாகக் கேட்க வேண்டும் என்று ஆசை தான். ஆனால் நேரம் கிடைப்பதில்லை; அதுமட்டுமல்லாமல், தனி மனிதனாக கச்சேரிகளுக்குப் போவதைவிட, கர்நாடக இசையில் ஆர்வம் உள்ள நண்பர்களுடன் சென்று கேட்க வேண்டும் என விரும்புவதால், அதற்கான வாய்ப்புகளும் அதிகம் கிடைப்பதில்லை. சில மாதங்களுக்கு முன்பு நித்யஸ்ரீ மகாதேவனின் கச்சேரிக்குப் போனபோது, முழுமையாய் உட்கார்ந்து ரசித்தது ஒரு இனிய அனுபவம்" என்று கூறும் துரைமுருகனின் காரில் ஒலிப்பது கர்நாடக இசைதான். தியாகராஜர் கீர்த்தனைகள் பிடிக்கும் என்றாலும் இவர் அதிகம் கேட்பது தமிழிசைப் பாடல்கள்தானாம்.

''கர்நாடக இசை ராகங்களில் இசை அமைக்கப்பட்ட பழந்தமிழ்த் திரைப்பாடல்களின் பரம ரசிகன் நான்'' என்று கூறிவிட்டு, பி.யூ. சின்னப்பா, தண்டபாணி தேசிகர் பாடிய சினிமா பாட்டுகளை ராகம் போட்டுப் பாடிக் காட்டுகிறார் இந்த திமுககாரர்!




"எனது சொந்த கிராமம் குடியாத்தம் தாலுகாவில் காங்குப்பம். அங்கே சிறுவனாக இருந்தபோது, தெருக்கூத்து நடத்துவார்கள். அதிலே எனக்கும் வேடம் கொடுப்பார்கள். அந்தக் காலத்தில் தெருக் கூத்துகளில் வசனங்களைவிட, பாட்டுகள் தானே பிரதானம்! எனவே நானும் பாடுவேன். தவறாகப் பாடுகிறபோது, கூத்து வாத்தியார் திருத்துவார். ராகம், தானம் பற்றி விளக்குவார். அதுதான் என்னுள்ளே இசை ஆர்வத்துக்கு ஊன்றப்பட்ட விதை என்று சொல்லலாம்.

படித்து வக்கீலான பின்பு, அந்தக் காலத்து சரசுவதி ஸ்டோர்ஸ் சென்று ஏராளமான கர்நாடக இசைத்தட்டுக்களை வாங்கி வந்து கேட்பேன். அப்போது எனக்கு நாதஸ்வரம் மீது அலாதி பிரியம். ஒரு நண்பர் மூலம் நாதஸ்வரம் ஒன்றை வாங்கிக் கொண்டு வரச்செய்து, கொஞ்ச காலம் கற்றுக் கொண்டு, அதன்பின் பயிற்சியைத் தொடராமல் விட்டுவிட்டேன்.

எம்.எஸ். அம்மா பாடிய எந்த மொழிப் பாடலாக இருந்தாலும், அவரது இனிய குரலுக்காகவே இசைத்தட்டுகளை வாங்கிக் குவித்து விடுவது என் பழக்கம். எனக்குப் பிடித்த பாடகர்களின் பட்டியலில் முதலிடம் மதுரை சோமுவுக்குத் தான். இன்று கச்சேரி செய்பவர்கள், மாரிமுத்தா பிள்ளை, முத்துத்தாண்டவர், அருணாசலக் கவிராயர் ஆகியோரது அற்புதமான பாடல்களுக்கு அதிக முக்கியத்துவம் தந்து பாட வேண்டும் என்பது என் கருத்து. அவர்களது பாடல்களைத் தொகுத்து புத்தகங்களாகவும், கேஸட் மற்றும் சி.டிக்களாகவும் கொண்டு வர வேண்டும்" என்று கூறும் துரைமுருகன், தினமும் இரவு குறைந்தது பதினைந்து நிமிடம் கர்நாடக இசை கேட்காமல் தூங்குவதில்லை.

- மௌலி

■ எங்க ஊர் பிள்ளையார்



முதல் பூஜை ஏன்?

எந்தக் காரியத்தை தொடங்கினாலும் முதலில் விநாயகரை பூஜித்த பிறகே காரியத்தை தொடங்குகிறோம். ஏன் தெரியுமா? விக்னேஸ்வரரை பூஜிக்காமல் தொடங்கும் எந்தக் காரியமும் தடைப் பட்டுவிடுமாம். ஒருமுறை விநாயகரை பூஜிக்காமல் சிவபெருமான் திரிபுர சம்ஹாரத்துக்குச் சென்றபோது, தேரின் அச்சாணியைக் கழற்றி, தேர் செல்வதைத் தடுத்து விட்டார் விநாயகர். அதன் பின் அவரை சிவபெருமான் பூஜித்த பின்பே தேர் புறப்பட்டது என்கிறது புராணக் கதை ஒன்று.

தந்தை தேரின் அச்சையே எடுத்து விநாயகர் தடுத்து நிறுத்தியதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? ஞானக் கடவுளான கணேசன் அப்படிச் செய்வாரா? இதற்கும் புராணத்தில் பதில் இருக்கிறது.


தாரகாசுரன் சூரபத்மனை முருகப் பெருமான் அழித்த பின், தாரகாசுரனின் புதல்வர்களான வித்யுன்மாலி, தாரகாசுரன், கமலாக்ஷன் மூவரும் தந்தையின் மறைவுக்கு பின் கடுந்தவம் புரிந்தனர். அவர்கள் முன் பிரம்மன் தோன்றியதும், எல்லா அசுரர்களைப் போலவே சாகா வரம் கேட்டனர்.

"நாங்கள் நினைத்த இடத்திற்கு பறக்கக் கூடிய மூன்று பிரம்மாண்டமான நகரங்களை நிர்மாணிக்க வேண்டும். அவை பொன், வெள்ளி, இரும்பு ஆகிய உலோகங்களால் அமைய வேண்டும். இந்த மூன்று நகரங்களும் எப்பொழுது ஒன்றாகச் சேருகிறதோ, அப்போது ஒற்றை பாணத்தால், அதுவும் அக்னியால் மட்டுமே எங்களுக்கு அழிவு ஏற்பட வேண்டும். அதுவரை நாங்கள் இறவாமல் உயிர் வாழ வேண்டும். எங்கள் நகரில் எல்லா சுக போகங்களும் நிலைத்திருக்க வேண்டும்" என்று வரம் கேட்டனர். வரம் பெற்றபின் தேவர்களையும், ரிஷிகளையும் கொடுமைப்படுத்தினர்; ஈஸ்வரனைக் கூட வழி



படுவதை நிறுத்தி விட்டனர்.

திரிபுரர்களை அழிக்க திரிகரண சுத்தியுடன் தேவர்கள் பல காலம் சிவபூஜை செய்தனர். சிவபெருமான் தேவர்களுக்கு பிரத்யட்சமாகி, உலக நன்மைக்காக திரிபுரர்களை அழித்து அனைவரையும் காப்பதாக வாக்களித்தார். இந்தத் திருப்பணியில் எல்லா தேவர்களும் பங்கேற்க விரும்பினர்.



சிவபெருமான் மகாருத்ரனாக உருவெடுத்தார். திரிபுர ஸம்ஹாரத்துக்கு, ருத்ரனுக்கு விஸ்வகர்மா ஒரு புதுமையான தேரைப் படைத்தான். பஞ்ச பூதங்களால் அமைந்த தேரின் சக்கரங்களாக சூரிய, சந்திரர் அமைந்தனர். நட்சத்திர தேவதைகள் சக்கரங்களின் அலங்காரக் கற்களாயின. இந்திரன், ஈஸானன், நிருத்யை, குபேரன் போன்றோர் நான்கு தூண்களாயினர். வாயு, தேரைச் செலுத்தும் சக்தியாக உருவெடுத்து நின்றார். வருணன், ஈஸ்வரன் கவசத்தில் அமர்ந்தான். நான்கு வேதங்களும் குதிரைகளாகி, வேத நாயகன் பிரம்மா சாரதியானான். ஓம்காரம் என்னும் பிரணவம் சாட்டையானது.

மேருவை வில்லாக்கி, வாசுகியை நாணாக்கி, மஹா விஷ்ணுவை அஸ்திரமாக்கி எடுத்துக்கொண்டான் ருத்ரன். நவக்கிரஹங்கள் தேரின் கொடிகளாகவும் தோரணங்களாகவும் ஒளிர்ந்தன. அக்னியும் எமனும் சக்கரத்தின் இரு அச்சுகளாக அமர்ந்தனர். சக்தி சூலமாகி, முருகன் வேலாகி சிவனுக்கு ஆயுதங்களாக மாறினர். தேர்க் கலசமாகி இருந்தார் மஹாகணபதி.



• வரசித்தி விநாயகர்

மஹாகணபதி ஞானஸ்வரூபனல்லவா? ஒரு கணம் அனைத்தையும் உற்றுநோக்கினார். ஏதோ தவறு இருப்பதை அறிந்தார். ரதம் புறப்படும் நேரத்தில் ரதத்தைச் சற்று நிறுத்தினார். திரிபுரத்தை எரிக்கவும், திரிபுர அசுரர்களின் ஆயுளை முடிக்கவும் மூல காரணமாக இருக்க வேண்டிய யமனும் அக்னியும், தேரின் அச்சாணியாக இருந்தனர். எந்தக் காரியத்திலும் வெற்றியைத் தேடித் தர வேண்டிய காஷ்டை, முகூர்த்தம் என்னும் இரு தேவதைகளும் தேரின் அமைப்பில் எங்கும் இடம் பெறவில்லை.

இதனையறிந்த மஹாகணபதி, தேர் அச்சுக்களைக் கழற்றினார். அங்கே காஷ்டை, முகூர்த்தம் ஆகிய தேவதைகளை அச்சாணியாக்கி அமரச் செய்தார். அக்னியையும், யமனையும் அஸ்திரமாக இருந்த விஷ்ணுவின் சிரத்திலும் பாதத்திலும் அமரச் செய்தார். ருத்ரரதம் புறப்படு முன் விக்னத்தை நிவர்த்தி செய்த மஹா கணபதியை, விக்னேஸ்வரன் என்று தேவர்கள் வாழ்த்தி வணங்கினர். 'எந்தக் காரியத்தையும் செய்யும் முன் தடைகள் நீங்க, விநாயகரை வழிபடுங்கள்' என்று ஈஸ்வரன் கட்டளையிட்டார்.

சிவன் ரதத்தின் அச்சை முறித்து தடை செய்தவரல்ல கணபதி. சரியான முறையில் அச்சை அமைத்துத் தந்து தடையை நீக்கியவர் அவர். அதன் பின் ருத்ரரதம் புறப்பட்டு, விஷ்ணு அஸ்திரமாகப் பாய, அக்னி திரிபுரத்தை எரிக்க,

யமன் காரணகர்த்தாவாகி அசுரர்களின் உயிரைப் பறித்து சிவனிடம் சேர்க்க, திரிபுர ஸம்ஹாரம் நிகழ்ந்தது. தர்மம் மீண்டும் தழைத்தது.

- நளினி ராமனாதன்,
சென்னை - 93


Geethanjali

சூப்பர் ஆடியோ நிறுவனத்தினர் வழங்கும் 'ஓம் கணபதி ஓம்' ஆன்மிகம் மணக்கும் ஆடியோ சிடி பரிசு பெறுபவர் நளினி ராமனாதன்.

வரசித்தி விநாயகர்



பவானி ஆற்றின் கரையில் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் அருகில் எழுந்தருளியுள்ள அருள்மிகு வரசித்தி விநாயகரின் பெருமையை அளவிட்டுக் கூற முடியாது.



• கஜ்ரானா பிள்ளையார்

சுமார் ஐந்து அடி உயரத்திற்கு கம்பீரமாக வீற்றிருக்கும் பிள்ளையார் வசம் தங்கள் துயரங்களை ஒப்படைத்து, அவற்றை நீக்கிக் கொள்ளும் பக்தர்கள் ஏராளம்.

மிகப் பழைமையான இந்த ஆலயம், இன்று திருப்பணிகள் பல செய்யப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சியளிக்கிறது.

ஆண்டுதோறும் இங்கு கொண்டாடப்படும் மகா சதுர்த்தி விழாவும், மாதம் தோறும் நடைபெறும் சுக்ல சதுர்த்தி, சங்கடஹரா சதுர்த்தி விழாக்களும் ஏராளமான பக்தர்களை ஈர்த்து வருகின்றன. தமிழ்நாட்டின் பல ஊர்களிலிருந்தும் இங்கு வந்து செல்கிறார்கள்.

- ஜி. கிருஷ்ணமூர்த்தி,
சத்தியமங்கலம்

கஜ்ரானா பிள்ளையார்

கஜ்ரானா என்ற குக்கிராமம் மத்தியப் பிரதேசத்தின் இந்தோர் நகரின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இங்கு தான் கஜ்ரானா பிள்ளையார் கோயில் உள்ளது.

இங்கு வழிபட்டால் விரும்பியது நிறைவேறும் என்பது, இந்தோர் மக்களின் அசையாத நம்பிக்கை. நூற்றுக்கணக்கானோர் தினம் வழிபடும் கோயில். புதன் கிழமையும், சதுர்த்தி நாட்களும் முக்கியமானவை. தென்னிந்தியக் கோயில்கள் போல் கர்ப்பக்கிரகம் என்று இல்லாததால், பொறுமையாக நின்றால் மூர்த்தியின் மிக அருகில் செல்வதோடு, பண்டிதர்களிடம் நெற்றியில் சாந்தும் இட்டுக் கொண்டு வரலாம்.

இங்கு தரிசனம் முடித்தவர் அனைவர் மணிக்கட்டிலும், இரண்டு மூன்று சுற்றுக்களுடன் காவி நிறக் கயிறு அலங்கரிப்பதைப் பார்க்கலாம். மணிக்கயிறு கட்டவே மூன்று அல்லது நான்கு பண்டிதர்கள் பிராகாரத்தில் அமர்ந்திருப்பார்கள்.

கஜ்ரானா பிள்ளையாரின் திருவுருவப் படம் இல்லாத வீடுகளோ, அலுவலகங்களோ இல்லையென்று சொல்லுமளவிற்கு, இந்தப் பிள்ளையார் இந்தோர் மக்களை ஆக்கிரமித்திருக்கிறார். லட்சக் கணக்கில் வியாபாரம் செய்ய கடையின் கதவை நீங்கள் காலையிலேயே தட்டினாலும், இந்தப் பிள்ளையாரின் படத்திற்கு ஒரு சூடம் காட்டி, கன்னத்தில் போட்டுக் கொள்ளாமல் கடைக்காரன் உங்கள் பக்கம் திரும்ப மாட்டான்.

- ஜி. குமார்,
போபால்

பட்டுக்கோட்டை பிரபாகர்



தொடரும்...



நீட்டிய வலக்கையில் மலர்
பின்புற இடக்கையில் கத்தி
உதட்டு நுனியில் புன்சிரிப்பு
உள்ள நுனியில் வன்சிரிப்பு
புறக் கண்களில் பாசம்
அகக் கண்களில் காமம்
முகமெதிர் பேச்சில் தேன்
முகமறை பேச்சில் தேள்

இப்படியெல்லாமில்லாத
மனிதர்களும்

புழுக்கள் புரளும்
கொசுக்கள் கொஞ்சும்
நாற்ற சாக்கடை
ஓடாத ஊரும்...

இலை வாங்கிவர
கமர்கட்டுகள்
இராணுவத் தளவாடமெனில்
கரன்சிக் கட்டுகளென
ஊழல் புழங்காத நாடும்...

எங்கே உண்டோ,
அங்கே எனக்கோர்
இடம் வேண்டுமென
பறக்காதே நண்பா.

எங்கும் இவை தொடரும்
வேறு வடிவங்களில்...
வேறு பாஷைகளில்...



▪ அனுராதா ரமணன்

புனரபி ஜனனம்

வெந்நீரில் குளியல்
சாம்பிராணிப் புகை
இருட்டு அறைக்குள்
அம்மாவின் மார்புச் சேலைக்குள்
பசியாறல்; பரக்க விழித்தல்
என் சின்ன முதுகில்
தாயவளின்
மெத்து விரல் தட்டல்...
பாச சுருதி கூட்டி
அவள் பாடும் தாலாட்டு.

உரிமையுடன்
அவள் மடியில்
ஒன்றுக்கிருத்தல்... மறுபடியும்
செல்லச் சிணுங்கல்
தாயவளின்
பூ முத்தம்...
இதெல்லாம் எனக்கு
உடனடித் தேவை
அது சரி...
எப்பொழுது
புனரபி ஜனனம்?



ஒரு பாடகர் அல்லது வாத்திய இசைக் கலைஞர் சுமார் முந்நூறு, நாநூறு பாடல்கள் பாடம் பண்ணி வைத்திருப்பார்... அவற்றுள் ரொம்பப் பிடித்தது என்று இருக்குமே... கேட்டோம்...



ஆட்கொண்ட



• 'சொரூபிணி'



• 'சுப்ரமண்யாய நமஸ்தே...'

காயத்ரி கிரீஷ்:


ஏந்தவொரு பாடலையும் அதனுடைய அர்த்தத்தை மனசுக்குள்ள முழுமையா உள்வாங்கி, சரியான ராகத்துல அதற்கேயுரிய பாவத்துடன் பாடினா, அந்தப் பாடல் நிச்சயமா நம் மனசைக் கவர்ந்துடும். அப்படி நிறையப் பாடல்கள் இருந்தாலும், ஸ்ரீ முத்துசுவாமி தீட்சிதரின் 'ஸ்ரீ சுப்ரமண்யாய நமஸ்தே...' என் மனசுக்கு ரொம்பப் பிடிச்சது.

காம்போதி ராகத்திலமைந்த இக்கீர்த்தனைக்கு, காஞ்சி மகாப் பெரியவர் விளக்கம் தரும் போது, காயத்ரி மந்திரத்துடன் ஒப்பிட்டுக் கூறியிருப்பார். காம்போதி ராகத்தின் அனேக சஞ்சாரங்களும் இக்கீர்த்தனையில் பொருந்தியிருக்கும். இதனைப் பாடுகையில் ஒரு இனம் புரியாத சந்தோஷமும், நிம்மதியும் ஏற்படறது.

பொதுவாச் சொல்லணும்னா, கர்நாடிக், கஜல், ஹிந்துஸ்தானி எதுவா இருந்தாலும் ஒரு பாடலைப் பாடி மனசுக்கு நிம்மதியும், புத்துணர்வையும் தந்துச்சுன்னா, அது தான் உண்மையான மனசுக்குப் பிடித்த பாடல்.''

வீணை காயத்ரி:

ஏகப்பட்டவை



மனசு பூரா நெறைஞ்சி கிடக்கு. இருந்தாலும் என் மனசையே கொள்ளையடிச்ச பாடல்னா, எம்.எஸ். அம்மா பாடின 'தேவ தேவம் பஜே...' தான். ஹிந்தோள ராகத்தில் அமைந்த இந்தப் பாடல்ல ஸ்ரீராம பிரானையும், அவருடைய அதிசயிக்கத்தக்க குணங்களையும் முழுமையாக வர்ணிக்கும் உன்னத வரிகள் இருக்கு. இந்தப் பாடலை அடிக்கடி கேட்கறதுண்டு.

இதுல 'அன்னமாச்சார்யா' கீர்த்தனைக்கு வாசிக்கறப்போ இங்கிருந்தபடியே திருப்பதிக் குப் போயி, ஸ்ரீ ஏழுமலையானை தரிசிச்சிட்டு வந்த ஒரு உண்மையான உணர்வு ஏற்படும். மரியாதைக்குரிய தண்டபாணி தேசிகரின் 'ஜெகத்ஜெனனீ...' பாட்டுல வரும் 'நாத சொரூபிணீ'ங்கற இடம் அப்படியே என்னை ஆட்கொண்டு விடும்."

பாடல்!



• 'முரளிதரா கோபாலா'

உன்னிகிருஷ்ணன்:

"கர்நாடக சங்கீதமாக இருந்தாலும் சரி, திரையிசைப் பாடல்களாக இருந்தாலும் சரி, பாடுற பாடல்ல அற்புதமான பர்ஃபெக்ஷனும், நேர்த்தியான பாவமும் இருந்தா எல்லோரையும் கவர்ந்துடும். குறிப்பா செம்மங்குடி சார் பாடின 'க்ஷீணமை...' பாடலை அவசியம் சொல்லணும். முகாரி ராகத்தில அமைந்த இதனைப் பாடக் கேட்கும் பொழுது, யாராயிருந்தாலும் அப்படியே உருகிடுவாங்க.

அடுத்து எம்.எல்.வி. அம்மா பாடின 'முரளிதரா கோபாலா...' பாடுறப்போ, அதுல ஒரு கச்சிதம் தென்படும் பாருங்க... அதுதான் எம்.எல்.வி. அப்படியே பக்திப் பரவசத்தால உடல் சிலிர்த்துப் போக வைக்கறது எம்.எஸ். அம்மா பாடின 'குறையொன்றுமில்லை...'

தோடியில 'கார்த்திகேய காங்கேய' பாடுகிற போது எனக்கு ரொம்ப மன நிறைவு ஏற்படும்."

• முத்துக்குமார்

ஆறு மினரெட் அதிசயம்!

பிரமிட் தேசம் - 14

சிவசங்கரி

மறுநாள் காலை குளித்து, காலைச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு எட்டு மணிக்குத் தயாராய் இருந்தவர்களை, நகரின் இதயப்பகுதியிலிருந்த சுல்தான் அஹ்மட் சதுக்கத்துக்கு (Sultan Ahmet Square) லயத் அழைத்துச் சென்றார். ஆதி நாட்களில் ஹிப்போட்ராம் (Hippodrome) என்று அழைக்கப்பட்ட இந்த இடம், ரோமானியர்களின் வெற்றியைக் குறிக்கும் சின்னமாக கி.பி 203-ம் ஆண்டு கட்டப்படத் துவங்கி, கி.பி 330-ம் ஆண்டு மே மாதம் 11-ம் தேதி பேரரசர் கான்ஸ்டான்டைன், இஸ்தான்புல் பெயரை கான்ஸ்டான்டிநோபலாக மாற்றி, அதை ரோம சாம்ராஜ்ஜியத்தின் இரண்டாவது தலைநகராக அறிவித்த தினத்தன்று திறக்கப்பட்டதாம். முப்பதாயிரம் பேர் உட்கார்ந்து காணக்கூடிய வகையில் காலரிகள் அமைக்கப்பட்ட நானூறு மீட்டர் நீளம், நூற்றியிருபது மீட்டர் அகலமும் கொண்ட ஹிப்போட்ரோமில், பைஸன் டைம் அரச பரம்பரை ஆட்சி புரிந்த காலத்தில், இங்கு பலவிதமான விளையாட்டுக்கள், கேளிக்கை நிகழ்வுகள், வீரச் சண்டைகள், பொதுக்கூட்டங்கள், குதிரைப்பந்தயங்கள் தொடர்ந்து நடந்து வந்துள்ளன. இன்று அந்த இடம் மண் மூடி மேடாகிவிட, ஒரு இடத்தைத் தோண்டி, சுமார் நாற்பத்தைந்து அடிக்குக் கீழே தெரியும் மைதானத்தை, டூரிஸ்டுகளின் பார்வைக்கு வைத்திருக்கிறார்கள். மூவாயிரத்தி ஐந்நூறு வருஷங்களுக்கு முன் ஒரே கல்லில் செதுக்கப்பட்டு, எகிப்திலுள்ள கர்னாக் கோவிலிருந்து கொண்டு வரப்பட்ட பிரும்மாண்டமான கல்தூண் (Obelisk) இங்குள்ளது. வெளிர் சிவப்பு சலவைக் கல்லில், ஹீரோக்ளைஃபிக் படங்கள் செதுக்கப்பட்ட இத்தூணின் எடை, சுமாராய் முந்நூறு டன் என்கிறார்கள். எகிப்திலிருந்து இங்கு கொண்டுவர சிரமப்



• தலை இழந்த தூண்



பட்டதில் தொண்ணூற்றி ஆறு அடி உயரம் இருந்த இத் தூணின் அடிப்பாகத்தை வெட்டிவிட்டதில், தற்சமயம் தூணின் உயரம் அறுபது அடி! ஸர்பன்டைன் தூண் (Serpentine column) என்ற மற்றொரு இரும்புத்தூண், கிரேக்க நாட்டிலுள்ள அப்போலோ கோவிலிருந்து எடுத்து வரப்பட்டதாம். பாம்புகள் ஒன்றோடொன்று பிணைந்த தோற்றம் கொண்ட இத் தூணில், இப்போது பாம்புகள் தலைகளை இழந்து காணப்படுகின்றன.

ஹிப்போட்ரோமில் எங்களை இறக்கி விட்ட வாகனம், வேறு இடத்துக்குச் சென்று காத்திருக்கும் என்பதால், அங்கிருந்து நடந்து அருகிலுள்ள 'நீல மசூதி'க்குச் (Blue Mosque) சென்றோம். வழி நெடுகிலும் பச்சென்று குடை விரித்த மரங்கள். சாலையோரப் பூங்கா, அவற்றில் பூத்துக் குலுங்கின, நீல, வெள்ளை, ஆரஞ்சு வண்ண ஹைட்ராஞ்ஜியா மலர்கள். ஆங்காங்கு துருக்கியரின் பாரம்பரிய உடைகளோடு, பெரிய ஜாடிகளை முதுகில் சுமந்தபடி நின்றிருந்த டீ விற்பனையாளரிடம் 'ஆப்பிள் டீ' வாங்கிக் குடித்துவிட்டு மசூதிக்குள் நுழைந்தோம்.

சுல்தான் அஹமட் மசூதி, நீல மசூதி என்று உலகளவில் பிரபலம் பெற்றது. மஹ்மெட் ஆஹா (Mehmet Agha) என்ற கட்டடக் கலைஞரின் கற்பனையில் உருவான இம்மசூதி, 1616-ம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டது. கட்டட நிபுணரிடம் சுல்தான் அஹமட் தங்கத்தால் கூம்பு போன்ற மினரெட்டுகளைச் செய்யச் சொன்னாலும், 'தங்கம்' என்ற துருக்கி வார்த்தை 'ஆறு' என்ற வார்த்தையின் சாயலோடு ஒலித்ததில், நிபுணர் ஆறு மினரெட்டுகளை மசூதியில் அமைத்துவிட, இஸ்லாமியர்களின் புனித ஸ்தலமான மெக்காவிலுள்ள 'காபா'வுக்கு இணையாக இதில் மினரெட்டுகள் இருப்பது கூடாது என்று எண்ணிய சுல்தான், உடனடியாய் ஆட்களை அனுப்பி, காபா மசூதியில் இன்னொரு மினரெட்டைக் கட்ட வைத்து, அதை ஏழாக்கியதில், இன்று உலகளவில் ஆறு மினரெட்டுகளைக் கொண்ட ஒரே மசூதி இதுதான்!

வாஸ்தவத்தில் நீல மசூதி மிகக் கம்பிரமானதாய் மட்டுமல்லது, மிக மிக

• ஆப்பிள் விற்பனையாளருடன்...





அழகானதாகவும் இருக்கிறது. பிரும்மாண்டமான நடு வட்ட 'டோம்,' பதினாறு பால்கனிகள், தூண்கள், தரை விரிப்புகள், மிகச் சிறந்த வேலைப்பாடுகள் என்று மசூதியின் அமைப்பு அற்புதமாகயிருக்கிறது. இதன் உட்பக்கம் முழுவதும் பதிக்கப்பட்டுள்ள விசேஷ நீலக் கற்களின் மீது, அங்கிருக்கும் ஜன்னல்களின் வழியே சூரியக்கிரணங்கள் விழும்போது, மசூதி பூராவும் நீல விளக்குகள் ஏற்றி வைத்த மாதிரியான ஜொலிப்பு ஏற்படுவதுதான் இதற்கு 'நீல மசூதி' என்று பெயர் வரக் காரணமாம்! மசூதிக்கு வெளியே காலணிகளைக் கழற்றிவிட்டு, கால்களைத் தண்ணீரில் சுத்தம் செய்து, ஊழியர் தரும் துணியைத் தலையில் போர்த்திக்கொண்டு, உள்ளே சென்று



* நீல மசூதி

விரிப்பில் மௌனமாய் அமர்ந்து பிரார்த்தனை செய்தது நினைவில் நிற்கும் அனுபவம்.

நீல மசூதியிலிருந்து நடந்து செல்லும் தொலைவில் இருப்பது, டாப்காபி அரண்மனை (Topkapi Palace). ஓட்டமான் சுல்தான் வாழ்ந்து வந்த இந்த அரிய அரண்மனை, 15-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டு 19-ம் நூற்றாண்டு வரை உபயோகத்தில் இருந்து, இன்றைக்குப் பார்வையாளர்களை உலகமெங்கிருந்தும் கவர்ந்திழுக்கும்படியான கலைப்பொக்கிஷங்களுடன், ஒரு அருங்காட்சியகமாகப் பராமரிக்கப்படுகிறது. இந்த அரண்மனையைச் சுற்றிச் செல்லும் கோட்டைச் சுவரின் நீளம் ஐந்து கி.மீ.; பரப்பளவு ஏழு லட்சம் சதுர மீட்டர்கள்! "இது 'வாடிகன்' நகரைப் போன்று இருமடங்கு பெரியது. மொனாகோ நாட்டில் பாதியளவு" என்றயைத், மேலும், "இதை முழுமையாகச் சுற்றிப்பார்க்க ஒரு நாள் போதாது" என்றார். இதனுள் சுல்தான் இருப்பிடம், அந்தப்புரம், சமையல்கட்டு, குழந்தைகள் கல்வி கற்க, தொழுகை செய்ய, அரசு வேலைகளைக் கவனிக்க, பணியாட்கள் தங்க - என்று அத்தனைக்கும் தனித்தனி இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தாலும், சுவாரஸ்யமான சிலவற்றை மட்டும் உங்களுக்கு விவரிக்கிறேன்.

அந்தப்புரத்தைக் குறிக்கும் 'ஹேரம்' (Harem) என்ற சொல் 'ஹாரம்' (Haram - 'தவிர்க்கப்பட வேண்டும்') என்ற அரபு வார்த்தையிலிருந்து வந்ததாம். அதாவது சுல்தானைத் தவிர, வெளியாட்களால் தவிர்க்கப்பட வேண்டிய இடம் என்று பொருள். சுல்தானின் மனைவி, ஆசைநாயகிகளுக்காக இங்கு முன்னூறு அறைகள் கட்டப்பட்டுள்ளன. நான்கு மனைவிகளை மட்டுமே ஒருவர் மணக்க இஸ்லாமில் விதிக்கப்பட்ட போதும், மூன்றாவது முராட் (Murat III) என்ற சுல்தானின் அந்தப்புரத்தில் ஆயிரத்து இருநூறு பெண்கள் இருந்தனர் என்கிறது ஒரு குறிப்பு! முதலில் ஆண் வாரிசைப் பெறுபவரே சுல்தானின் ஆசை மனைவியாக (Laseki) இருக்க முடியும் என்பதால், ஆசைநாயகிகளிடையே பிள்ளை பெற்றுக் கொள்வதற்குக் கடுமையான போட்டி இருந்ததாம்! தன் பிள்ளை அரசனாக வேண்டும் என்கிற வெறியில், அடுத்தவர் பிள்ளையைக் கொலை செய்ய முயற்சித்ததுகூட உண்டாம்! இது தவிர, சுல்தானின் அம்மா, சுல்தானுக்கு அடுத்தபடியாக மதிக்கப்பட்டவர் என்பதால், அவரையும்




அரவணைத்துப் போகும் பெண்ணுக்கு வரவேற்பு கூடுதலாய் கிட்டுமாம்! எந்த ஓர் ஆட்சியிலும் தாய்ராணி அந்தப்புரத்தின் அசைக்க முடியாத எஜமானியாகவே திகழ்ந்திருக்கிறார். நாற்பது அறைகளில், தனக்கென்று நியமிக்கப்பட்ட பல பணியாட்களுடன் ஒவ்வொரு தாய்ராணியும் தடபுடல் வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார்! சுல்தான், தாய்ராணிக்கு அடுத்தபடியாக, காவலுக்காக நியமிக்கப்பட்டிருந்த கறுப்பு அரவாணிகளின் தலைவிக்குத்தான் அதிகாரம் அதிகமாய் இருந்ததாம்!

இங்குள்ள சமையலறைகளில் ஆயிரத்தி இருநூறு சமையற்காரர்கள் அன்றாடம் இருபதாயிரம் நபர்களுக்கு உணவு தயாரித்திருக்கிறார்கள்! சமையற்கட்டில் தற்சமயம் முன்பு உபயோகப்படுத்திய பீங்கான், வெள்ளி, இதர பாத்திரங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இதேபோல வேறொரு கட்டடத்தில் சுல்தான்கள் பயன்படுத்திய சரிகை, நூல் வேலைப்பாடுகள் கொண்ட உடைகளையும், 'இம்பீரியல் ட்ரெஷரி' என்ற கட்டடத்தில் அவர்கள் பயன்படுத்திய விலையுயர்ந்த அணிகலன்களையும் பார்க்க முடிகிறது. மரகதக் கற்கள் பதிக்கப்பட்ட 'டாப்காபி' கத்தி, தங்க சிம்மாசனம், 86 கேரட் வைரம் பதிக்கப்பட்ட பதக்கம், 6666 வைரக் கற்களைக் கொண்ட மெழுகுவர்த்தி ஸ்டாண்ட்... என்று மதிப்பிட இயலாத பொக்கிஷங்களின் ஜொலிப்பு, நம்மைப் பிரமிக்க வைக்கிறது.

ஓவியங்கள், கடிகாரங்கள், புனிதச் சின்னங்கள், புத்தகங்கள் - என்று ஒவ்வொன்றிற்கும் காட்சியகங்கள் உள்ளன. கட்டடங்களுக்கு இடையே நந்தவனங்கள், நீரூற்றுகள் என்று விஸ்தாரமாய் அமைந்திருக்கும் டாப் காபி அரண்மனை, நிச்சயம் கண்களுக்கும் சிந்தனைக்கும் விருந்துதான்!

துருக்கிப் பயணத்தில் காலைச் சிற்றுண்டி, இரவு விருந்து மட்டுமே எங்களுக்கு டூர் கம்பெனியால் வழங்கப்பட்டன; மதிய உணவு எங்கள் பொறுப்பு! ஏகத்துக்கு அலைந்து திரிந்து விட்டதில், சாப்பாட்டுக்காக இந்திய ரெஸ்டாரெண்டைத் தேடிப் போக உடலில் வலுவின்றி, எங்கள் ஹோட்டலை அடுத்திருந்த அசல் துருக்கி நடைபாதை சாப்பாட்டுக் கடைக்கு நால்வருமே போனோம். கம்பியில் கோக்கப்பட்ட சுட்ட மாமிசங்கள் ஆறடி உயரத்துக்கு சரம் சரமாய் வாசலிலேயே தொங்கி ஆளை பயமுறுத்தின! சமாளித்துக் கொண்டு, கல்லாவில் இருந்தவரிடம் 'சுத்த சைவம்' என்று நாட்டியமாடித் தெரிவித்துவிட்டு உள்ளே சென்று அமர்ந்தோம். யார் செய்த புண்ணியமோ, கடைக்காரர் நாங்கள் அபிநயித்ததை துல்லியமாய்ப் புரிந்துகொண்டதில், மிளகாய்த்தூள் தூவப்பட்ட பீன்ஸ் விதை கறி, சாலட், அரிசிச் சோறு, கட்டித்தயிரை எங்கள் முன் கொணர்ந்து வைக்க, பயமுறுத்திய மாமிசத் தோரணங்களை மறந்துவிட்டு, அசல் துருக்கி சைவச் சாப்பாட்டை ருசித்துச் சாப்பிட்டோம்!

(தொடரும்)



தி. ஜானகிராமன் நன்றாக வீணை வாசிப்பார். அவரது மாபெரும் நாவலான 'மோகமுள்' சுதேசமித்திரன் பத்திரிகையில் பல ஆண்டுகள் தொடராக வந்தது. தம் நண்பரான சுதேசமித்திரன் ஆசிரியர் சீனிவாசன், தொடர் கதை கேட்டபோது, அத்தியாயக் கட்டுப்பாடு இல்லாமல் தாம் எவ்வளவு நாள் எழுதினாலும் வெளியிட வேண்டும் என நிபந்தனை விதித்தாராம் தி.ஜா.

- கிருஷ்

அதிசயம் நிகழாதா!



இசை சீசன் வந்துவிட்டால் போதும்... பாடகரை விட பக்க வாத்தியக்காரர்கள் படு பிஸி. தூங்கும் நேரத்தைத் தவிர, ஒரு நாளின் மற்ற பொழுதுகளில் பம்பரமாய்ச் சுழன்று பணியாற்றுவார்கள். தமது பரபரப்பான நிமிடங்களை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார் வயலினிஸ்ட் வரதராஜன்.

"என்னுடைய குருநாதர் டி.வி. கோபாலகிருஷ்ணன் முதல் எல்லா பிரதான இசைக் கலைஞர்களுக்கும் - எல்லா சபாக்களிலும் வாசிச்சிருக்கேன். 1998 வரைக்கும் மியூசிக் அகாடமில சப்-சீனியர் ஸ்லாட் இருந்தது. அதனால ஒரு நாளைக்கு ஐந்தாறு கச்சேரி பண்ண வேண்டியிருக்கும். அப்போ ரொம்பவும் பரபரப்பா ஒர்க் பண்ண வேண்டியிருக்கும். இப்படித்தான் ஒரு வருஷம், கார்த்தால ஒன்பதரை மணிக்கு பாரத் கலாச்சார்ல ஒரு கச்சேரி, அதை முடித்தால் மதியம் பன்னிரண்டு மணிக்கு மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ்ல ஒரு கச்சேரி, - அடுத்து ரெண்டரை மணிக்கு நாரதகான சபாவுல நடந்த கச்சேரிய முடிச்சுட்டு, நேரா காமராஜ் மெமோரியல்ல ஆறு மணிக்கு என்னோட குருநாதரோட கச்சேரி. மூணாவது கச்சேரிய முடிக்கறப்போ ரொம்ப டயர்ட் ஆயிட்டேன். ஆனாலும் அதைப் பொருட்படுத்தாம, கூடுதல் உற்சாகத்தோடு வாசித்துக் கொடுத்தேன்.


இந்த மாதிரி பரபரப்பான சமயங்கள்லதான், நாம ரொம்ப மதிக்கற டி.என். சேஷகோபாலன், பாலக்காடு கே.வி.நாராயணசாமி மாதிரியான சீனியர் வித்வான்களோட கச்சேரிகள் வந்துடும். அப்படித்தான் 2001-ல கே.வி.என். ஒரு சீசனில் பங்குகொண்ட எட்டு கச்சேரிகள்ல, ஆறு கச்சேரிகளுக்கு நானே வாசிக்க வேண்டியதாயிடுச்சு. இந்த மாதிரி இக்கட்டான சமயங்கள்ல டி.என்.எஸ். மாதிரி ஜாம்பவான்களோட கச்சேரிகள்ல மேனேஜ் பண்றதே ஒரு சாதனைதான். இதனால உடல் ரீதியாகத்தான் எங்களுக்கு டென்ஷனே தவிர, மன ரீதியாக நாங்க பாதிக்கப்படுறதில்ல.



இந்த வருடம் மியூசிக் அகாடமியில் வாசிக்க வாய்ப்பு ஏற்படாதது, என்னைப் போலவே எல்லாக் கலைஞர்களுக்கும் அதிர்ச்சியூட்டும் செய்தி. அந்த சங்கீத வித்வத் சபையில் வாசிக்க வாய்ப்பில்லைங்கிற நிலை, இந்த வருடத்தில் வந்துவிடாமல் ஏதேனும் ஒரு அதிசயம் நிகழ்ந்து, அங்கு நிலவும் சிக்கல்கள் விலகாதா என்பதுதான் அனைத்து கலைஞர்களுடைய எதிர்பார்ப்பாக உள்ளது'' என்று கூறும் வரதராஜனுக்கு இந்த சீசனில் இரண்டு டஜன் கச்சேரிகள்!

- இரா. முத்துக்குமார்

சார்மிங் தேவதை!



அருணாசலம் ஸ்டுடியோவுக்குள் நுழைந்தபோது "அம்மா பால்!" என்ற இனிய கூவல். குரல் வந்த திசை நோக்கித் திரும்பினால் 'காதல் அழிவதில்லை' படக் கதாநாயகி, சார்மியின் அச்சு அசல் தோற்றத்தில் ஒரு புதுமுக நாயகி. சைக்கிள் ஹேண்டில் பாரின் இருபுறமும், பால் குவளைகளை மாட்டிக் கொண்டு, ஒரு தேவதை இறங்கி வந்து பூமியில் பால்காரியாகி விட்டதோ என்று எண்ண வைத்தார். 'நீங்கள் சார்மியின் தங்கையா?' என்றால், விழுந்து விழுந்து சிரித்தார். "எனக்குத் தங்கையே கிடையாது! தமிழில் எடைகுறைவான ஹீரோயின்களுக்குத்தான் இப்போது மார்க்கெட். அதனால் எனது எழுபது கிலோ உடலை, ஐம்பதாகக் குறைத்து விட்டேன். உபயம், காஸ்ட்லி காஸ்மெடிக் ஆபரேஷன். சாமி சத்தியமாக நான் சார்மிதான்" என்று தனது சார்மிங் ரகசியத்தை உடைத்தார். அர்ஜுன் நடிக்கும் 'அனுமான்' படத்திற்காக பால்காரியாக மாறியிருக்கும் சார்மியின் பால் குவளைகளைத் திறந்து பார்த்தபோது அதிர்ச்சி. உள்ளே ஆவின், ஆரோக்கியா பால் பாக்கெட்டுக்கள்!






- ஸ்ரீ சக்கரம்

படம் உதவி :
திரைநீதிச் செல்வம்

புக் பேங்க்





பயணங்கள் பாடங்கள் - 'ஜெம்' வீரமணி, படைப்பு: ராணி மைந்தன்

வழக்கமான பயணக் கட்டுரைகளில் நாடு நகரங்கள் இருக்கும். காண வேண்டிய இடங்கள் இருக்கும். போய் வருகிற வழிகள் இருக்கும். அங்கிருக்கும் மனிதர்களுடன், உணர்வுபூர்வமாக பாதிக்கப்பட்ட அவர்களது வாழ்வுடன் தாமும் கலந்து, பகிர்ந்து கொண்டு நூல் படைப்பவர்கள் அபூர்வம்தான். சுற்றிப் பார்க்கச் சென்றவர் கற்றுக்கொண்டு வந்த பாடங்களுடன் தரும் பல நாட்டுப் பயணங்களின் தொகுப்பு.

- கலைஞன் பதிப்பகம்,
19, கண்ணதாசன் சாலை,
தி. நகர், சென்னை - 17.
விலை ரூ. 110/-

கழனிப்பூக்கள் - தமிழ்தாசன்



என்னதான் சுடிதாரும், ஜீன்ஸும் டீ-ஷர்ட்டும் அணிவது சௌகரியமாகவும், பார்வைக்குப் புதுமையாகவும் இருந்தாலும், பாரம்பரியமான சேலையும், பாவாடை தாவணியும் தரும் அழகே அலாதியானதுதான். தமிழ்க் கவிதைகளும் ஹைக்கூ, லிமெரிக், உரைக் கவிதை என்று புதுப்புது வடிவங்களில் வலம் வந்தாலும், மரபுக் கவிதைகள் தரும் நிறைவும், மகிழ்வும் தனிதான். மரபின் வழியே உலகின் மாற்றங்களைச் சொல்லி மனநிறைவைத் தரும் மரபுக் கவித் தொகுப்பு.

- திருவரசு புத்தக நிலையம்,
23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை - 17.
விலை ரூ.45/-

மாலன் சிறுகதைகள் - மாலன்




கற்காலம் முதல் தற்காலம் வரை உலகின் அத்தனை போராட்டங்களுக்கும் நேசமும், அதன் காரணமாய் எழும் உரிமையும்தான் ஆணிவேராக இருந்திருக்கிறது, இன்னும் இருக்கிறது. மனித நேயம், உயிர் நேயம், தொழில் நேயம் என்று பல நேசங்களின் மீதான உணர்வுகளும், அவற்றின் மீது இருப்பதாக எண்ணிக் கொள்ளும் உரிமைகளும், அதன் விளைவான போராட்டங்களும் மனித வாழ்வாகிறது. புதிய தலைமுறையின் உணர்வுகளை, புதிய கோணங்களில் சொல்லும் சிறு கதைகளின் தொகுப்பு. சிறுகதை இலக்கியத்துக்கு உயிர் கொடுத்து ஆக்கமும் ஊக்கமும் தரும் அற்புத முயற்சி.

- கிழக்கு பதிப்பகம்,
16, கற்பகாம்பாள் நகர்,
மயிலாப்பூர்,
சென்னை - 4.
விலை ரூ. 180/-

- விஷ்வக்


பாலிடிக்ஸ் பஜார்



● அலெக்ஸாண்டர் மீண்டும் உளவுத்துறை தலைவராகப் பொறுப்பேற்றிருப்பது, உளவுத்துறை வட்டாரத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. அங்கு பெரும்பான்மை அதிகாரிகள் அவரது சிஷ்யர்கள். 2001ல் ஜெ. ஆட்சிக்கு வந்தபோது அலெக்ஸாண்டரை ராமேஸ்வரம் மண்டபம் முகாமுக்கு, மிக கீழ்நிலை பொறுப்புக்குத் தூக்கியடித்தார். "இப்போதாவது அவரது அருமை தெரிந்ததே. காற்றுப் புகாத இடத்திலும் அவரது கழுகுப்பார்வை புகுந்துவிடும். இனி உண்மையாகவே 24 மணி நேரமும் டூட்டிதான்" என்று பெருமை பொங்கச் சொல்கிறார்கள் அவரது சிஷ்யர்கள்.









கலக்குது கலைஞர் பாசறை!

● தி.மு.க.வில் மாவட்டம் தோறும் 'கலைஞர் பாசறை' என்ற அமைப்பை ஏற்படுத்தும் பணி அமைதியாக நடந்து வருகிறது. பரமத்தி சண்முகம், பெரம்பூர் சுந்தன், திருவாரூர் திருவிடம் ஆகிய மூவரும்தான் இந்தப் பாசறையின் அமைப்பாளர்கள். தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் கூட்டங்களை நடத்தி உறுப்பினர்களையும் சேர்த்து விடுகிறார்கள். இந்தப் பாசறையின் அவசியம் பற்றி, கலைஞர் மூன்று கடிதங்கள் உடன்பிறப்புக்கு எழுதி விட்டார். "ஆர்.எஸ்.எஸ் பயிற்சி பா.ஜ.க.வில் உயருவதற்கு எந்த வகையில் உதவுகிறதோ அது போல, இந்தப் பாசறைப் பயிற்சிதான் எதிர்காலத்தில் தி.மு.க.வில் உயர ஒரு தகுதியாகக் கருதப்படும்" என்று சொல்கிறார் ஒரு மூத்த கழகப் பிரமுகர். இதைப் புரிந்துகொண்டுதானோ என்னவோ, பாசறையில் சேர உடன்பிறப்புகள் துடிப்பு காட்டுகிறார்கள்.

● தாமும் திருமாவளவனும் 'தமிழ்' என்ற பேனரின் கீழ் இணைந்திருப்பதைப் பயன்படுத்தி சிறுத்தைகளை அப்படியே தி.மு.க கூட்டணிக்குள் கொண்டு போய் விட வேண்டுமென்பது டாக்டரின் ஆசை. இப்படிச் செய்தால் கூட்டணியில் அவரது பேரம் உயரும். ஆனால், சிறுத்தைகளுடன் மீண்டும் நெருக்கம் காட்ட, தி.மு.க.வில் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை. "பாராளுமன்றத் தேர்தலில் இடம் கொடுக்காததால் கோபித்துக் கொண்டு போன திருமாவளவன், எங்கள் தலைவரை சிறிதும் மதிக்காமல் எங்கள் ஆதரவில் வென்ற சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார். இது எங்களுக்கு நன்றாகவே நினைவில் உள்ளது" என்கிறார் கழகப் பிரமுகர் ஒருவர். இது ஒரு காரணமாக இருந்தாலும் ராமதாஸின் செல்வாக்கு எந்த வகையிலும் உயரக் கூடாது என்பதே உண்மையான காரணம் என்றும் சொல்லப்படுகிறது.

● 'இதோ.. அதோ' என்று பூச்சி காட்டிக் கொண்டிருந்த - அனைவராலும் - குறிப்பாக ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களால் எதிர்பார்க்கப்பட்ட அமைச்சரவை மாற்றம் வந்தேவிடும் போலிருக்கிறது. முன்னைப்போதையும்விட இப்போது தன்னம்பிக்கை ஜோதியை உயர்த்திப் பிடித்திருக்கும் முதல்வர், தமது டீமை இன்னமும் செழுமைப்படுத்த விரும்புகிறார். சில மூத்த அமைச்சர்களின் தலைகள்கூட தப்பாது என்கிறார்கள். 2006க்கு முன்னர் இதுதான் இறுதி மாற்றமாக இருக்குமாம்.

- கௌசி



“இனி ஏமாற

ஏ.ஆர்.ரஹ்மான் இல்லாமல் முதன் முறையாக அந்நியனில் களமிறங்கும் ஷங்கருடன் கூட்டணியமைத்திருக்கிறார் ஹாரிஸ் ஜெயராஜ். பாடல்களை முடித்துக் கொடுத்த திருப்தி யில் இருந்தவரைச் சந்தித்தோம்.

உங்கள் படத்தின் பாடல்கள் வெளிவரும் வரை ஆள் இருப்பதே தெரிவதில்லையே?

“வெளிப் பார்வைக்குத்தான் இப்படித் தெரிகிறேன். உள்ளே வேலை நடந்து கொண்டுதானிருக்கிறது. ஸ்டுடியோவைத் தாண்டி, எந்தப் பட விழாக்களுக்கும் பூஜைக்கும் செல்வதில்லை. பணத்தைவிட நேரம் தான் முக்கியமாகத் தெரிகிறது.”

அந்நியன் பாடல்கள் பற்றி?

“எனக்கு ஷாம் படமும் ஒன்றுதான், விக்ரம் படமும் ஒன்றுதான். ஆனால் அந்நியனில் எனக்கு வேலைப் பளு அதிகமாக இருக்கும் என்பதால், ஆறு மாதத்துக்கு வேறெந்தப் படங்களும் கமிட் செய்யவில்லை. எனக்கு ஆத்மதிருப்தியான விஷயம், ஷங்கர் மகாதேவன், ஹரிஹரன் இருவரையும் வைத்து, இரண்டு தூய கர்நாடக சங்கீதப் பாடல்கள் பண்ணியதுதான். இப்பொழுதுள்ள தமிழ் சினிமாப் பாடல் ‘கலாசார’த்திற்கு மத்தியில் இது நிச்சயம் புதுமையானதாக இருக்கும்.”

ரஜினி படம் துவங்கும் முன் உங்களது பெயர் அடிபட்டதே?

“ரஜினி படத்தில் என் பெயர் பரிசீலிக்கப்பட்டது உண்மைதான். எனக்குத் தகுந்த படங்கள் என்றால் மட்டுமே அதில் என் முழு கவனத்தையும் செலுத்த முடியும். மசாலா படங்களுக்கு இசையமைக்க நானும் விரும்புவதில்லை. அவை எனக்கு ஒத்தும்வராது. இதனால்தான் நான் மாஸ் ஃபிலிம், ஹீரோவுக்கு ஜே போடுகிற படங்களை ஒப்புக்கொள்வதில்லை. ‘இவர் இசையமைப்பாளர்தானே? எந்தப் படம் கொடுத்தாலும் ஒப்புக்கொள்வார்’ என்கிற நிலை எனக்குக் கிடையாது.”

இன்றைய தமிழ் சினிமாப் பாடல்களில் உச்சரிப்புகள் சரியில்லை என்கிற குற்றச்சாட்டை ‘பரவாயில்லை’ என்று விட்டுவிட முடியாது அல்லவா?





"உதித்நாராயணை இதுவரை பயன்படுத்தாத இசையமைப்பாளர் நான் மட்டும்தான். ஏனென்று உங்களுக்கே புரியும். அவர் பாடினால்தான் பாடல்கள் ஹிட் ஆகும் என்று நினைக்காமல், எந்தக் குரல் பாடல்களுக்கு செட்டாகும் என்றுதான் நினைப்பேன்."

'மின்னலே' போல சமீபகாலமாக உங்களது படங்களின் அனைத்துப் பாடல்களும் வெற்றி பெறுவதில்லையே?

"அருள், அரசாட்சி போன்ற மசாலா கமர்ஷியல் படங்கள், என் நண்பர்

மாட்டேன்!’’



களுக்காக ஒப்புக்கொண்டது. இந்தப் படங்களை முதலில் நான் ஒப்புக் கொள்ளவே தயங்கினேன். இனி இது போன்ற தவறுகள் நடக்காது. 'உள்ளம் கேட்குமே' இன்றுவரை வெளிவரவில்லை. இதெல்லாம் சரியாக வராது என்று முன்னமே நினைத்ததுதான். ஆக, இனிமேல் நண்பர்கள், தெரிந்தவர்கள் என யாருக்காகவும் படங்கள் செய்து ஏமாறப் போவதில்லை. மூன்று பேரை திருப்திப்படுத்துவதற்காக, மூன்று கோடி மக்களை இனியும் ஏமாற்ற மாட்டேன். இரக்கம் இருக்கலாம். ஆனால் அதுவே நம்மை ஏமாளியாக்கக் கூடாது இல்லையா!"

மற்ற இசையமைப்பாளர்களின் பாடல்களைக் கேட்பதுண்டா?

"7Gயில் வந்த 'நினைத்து நினைத்து' பாடலை சமீபத்தில் ரசித்துக் கேட்டேன்."

இசைக்கும்பொழுது முழுச் சுதந்திரம் கிடைக்கிறதா?

"கண்டிப்பாக. யார் பாடுவது என்பதைவிட, ஒரு பாட்டுக்கு யார் வயலின் அல்லது ஃப்ளூட் வாசிக்க வைப்பது என்று தீர்மானிப்பதுதான் மிகவும் கடினமானது. எனது ஸ்டுடியோவில் நானே இன்ஜினியர், மியூசிஷியன், ரெக்கார்டிஸ்ட். இதோடு டி.டி.எஸ். மிக்ஸிங், ஃபைனல் மிக்ஸிங், கேஸட் கம்பெனி வரை செல்வது, என எல்லா வேலைகளையும் நானே என் தலையில் போட்டுக் கொள்வேன்."

வசீகரா பாடல் படமாக்கிய விதம் ஏமாற்றமளித்தது போல், இன்றைக்கும் தொடர்கிறதா?

"ம்... சில சமயங்களில். அரசாட்சியில் பாடல்களுக்கு உண்டான விஷுவல்ஸ் கிடைக்கவேயில்லை."

இப்பொழுதாவது சொல்லிவிடுங்கள்... 'ஓமகாசியா' என்றால் என்ன?

(சிரிக்கிறார்) "அதைவிட 'செல்லமே'வில் 'காதலி, காதலி, உஸ்ஸனனா புஸ்ஸா(!)' என்றெல்லாம் வரும். வாத்தியக் கருவியின் ஒலிபோல்தான் இதுவும். பாடலின் மூடை உருவாக்கவே இது போன்ற புரியாத வார்த்தைகள்."

- ச.ந. கண்ணன்

படங்கள் : **ராஜன்**

அன்பு வட்டம்! வாசகர் விழா

மங்கையர் மலர் அன்பு வட்டம்

SAKTHI PICKLES Something Special

"ஏங்க ஊருக்கு ஏப்ப வர்றீங்க?"





"என்ன 'அன்பு வட்டம்' வாசகர் விழாவை ஊர் ஊராகப் போய்க் கொண்டாடறீங்க. எங்க ஊருக்கு மட்டும் வர மாட்டீங்களா?" இப்படி மதுரை, கோயம் புத்தூர், திண்டுக்கல், ஈரோடு வாசகிகள் குமுறுவது காதில் விழுகிறது! இதோ வந்து விட்டார் ஆசிரியர் ரேவதி சங்கரன் உங்களை அன்பு வட்டத்தில் இணைக்க.

தேதி	இடம்	நேரம்
11.12.2004	தமிழ்நாடு தொழில் வாணிபக் கழக பவள விழா அரங்கம், காமராஜர் சாலை, மதுரை - 9.	மாலை 4.00 மணி
12.12.2004	எஸ்.எம்.பி.எம். பள்ளி, ஜி.டி.என். ரோடு, திண்டுக்கல் - 1.	காலை 10.00 மணி
18.12.2004	கோவை மாநகராட்சி கலையரங்கம், திருவேங்கடம் சாலை, ஆர்.எஸ்.புரம், கோவை.	மாலை 5.00 மணி
19.12.2004	கொங்கு கலையரங்கம், சம்பத் நகர், ஈரோடு.	மாலை 4.00 மணி

மங்கையர் மலர் வாசகர்கள் அனைவரும் வருக! போட்டிகள் உண்டு, பரிசுகள் உண்டு, சந்தா சிறப்புச் சலுகைகளும் உண்டு! உங்களது திறமையை வெளிப்படுத்த ஒரு நல்ல வாய்ப்பு!

"அடுத்தவர்களுக்கு உதவி செய்யுங்கள்.
அது உங்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும்'
- இது சான்றோர் வாக்கு.
'அப்படி உதவி செய்யும் போதும் எச்சரிக்கையாய் இருங்கள்.'
- இது வள்ளுவர் வாக்கு.
"நன்று ஆற்ற லுள்ளும் தவறு உண்டு அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை" என்கிறார் அவர்.

என்ன உதவுகிறோம் என்பது முக்கியம்.

யாருக்கு உதவுகிறோம் என்பது அதை விட முக்கியம்.



தென்கச்சி சுவாமிநாதன்

நல்லதுக்குக் காலமில்லை...!

நள்ளிரவு நேரம்.

ஒரு பெரியவர் நடந்து வந்து கொண்டிருக்கிறார். எதிரே தள்ளாடியபடி ஒரு குடிகாரன்.

'ஐயோ... பாவம்' என்று எண்ணிய பெரியவர், அவனுக்கு உதவ முன் வந்தார்.

"உன் வீடு எங்கேயிருக்கிறது சொல்... உன்னை அங்கே கொண்டு வந்து விடுகிறேன்!" என்றார்.

அவன் அண்ணாந்து பார்த்தான்.

எதிரே இருந்த வீடொன்றின் மேல் தளத்தில் ஒரு கதவு தெரிந்தது.

"ஓ... அதுதானா... வா... போகலாம்!" பெரியவர் அவனை ஆதரவாக அழைத்துச் சென்றார்.

கதவுக்கு முன்னால் கொண்டு சென்று "போ... உள்ளே!" என்றார். "மாட்டேன்!" என்பது போல அவன் தலையை ஆட்டினான்.

உடனே பெரியவர் கதவைத் திறந்து அவனை வலுக்கட்டாயமாகப் பிடித்து உள்ளே தள்ளினார். கதவைச் சாத்திவிட்டு நிம்மதியாக கீழே இறங்கி தெருவுக்கு வர...

அங்கே -

இன்னொரு குடிகாரன்...

அவனும் தடுமாறிக் கொண்டிருந்தான்.

பெரியவர் ஓடிப்போய் அவனையும் தாங்கிப் பிடித்தார்.

"உன் வீடு எங்கேப்பா?" என்றார்.

அவனும் அண்ணாந்து பார்த்தான்.

"ஓ...எல்லாரும் ஒரே அறையில்தான் தங்கியிருக்கிறீர்களா...?"

அவனையும் மிகுந்த சிரமத்துக்கிடையே தூக்கிக் கொண்டு போய், வலுக்கட்டாயமாகத் தள்ளி கதவைச் சாத்திவிட்டு தெருவுக்கு வந்தார்.

அங்கே -

மூன்றாவதாக ஓர் ஆள்!

அந்த இருவரைவிட இவன் அதிகமாகத் தள்ளாடினான்... உடலில் அடிபட்டிருந்தான். இவனும் அவர்களைப் போலவே அண்ணாந்து பார்த்தான்.

"வா போகலாம்" என்றார்.

இவன் பயந்தபடியே, "போலீஸ்! போலீஸ்!" என்று அலறினான்.

காவலர் ஒருவர் ஓடி வந்தார்.

இவன் சொன்னான்:

"ஐயா! என்னை இந்தப் பெரியவர் கிட்டேயிருந்து காப்பாத்துங்க...!"

"ஏன், அவர் என்ன செஞ்சார்?"

"இந்த மாடிப்படி வழியா மேலே அழைச்சுக்கிட்டுப் போறார்... அதோ அந்தக் கதவைத் திறந்து அந்தப் பக்கம் பள்ளமா இருக்கிற குப்பைக் குழியிலே என்னைத் தள்ளி விடுறார்... நானும் இந்த வழியா விழுந்து எழுந்திரிச்சு, இந்தப் பக்கமா வந்துக்கிட்டிருக்கேன்... இப்ப இவர் கூப்பிடுறது மூணாவது தடவை!"

(பேசலாம்)

தெம்புக்குப் படிங்க! 6



ஸ்ரீஷா - சஷாங்க்!



இந்த வருட இசை விழாவின் போது, சஷாங்க்கின் புல்லாங்குழல் கச்சேரிகளில் முதல் வரிசையில் அமர்ந்து, ஒரு புது ரசிகை, கச்சேரிகளை ரசிப்பார். அவர் பெயர் ஸ்ரீஷா. பெங்களூரைச் சேர்ந்த குச்சிப்புடி டான்ஸர். ஸ்ரீஷா, சஷாங்க்கின் மனைவி. இவர்களது திருமணம் நவம்பர் கடைசி வாரத்தில் பெங்களூரில் நடைபெற்றது. வரும் டிசம்பர் 25ஆம் தேதி சென்னையில் ரிஷப்ஷன்.

"என்ன சஷாங்க்? லவ் மேரேஜா...?"

"இல்லவே இல்லை. ஸ்ரீஷா நூற்றுக்கு நூறு சதவிகிதம் என் பெற்றோரின் தேர்வு. கடந்த சில வருஷங்களாகவே, எனக்கு வீட்டில் பெண் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒன்றரை வருஷங்களுக்கு மேலாக அமெரிக்காவில், நியுஜெர்ஸியில் நான் வசித்து வருவதால், அமெரிக்காவில் வசிக்கும் பெண்களின் ஜாதகங்கள் நிறைய வந்தன. வருஷத்தில் எட்டு மாதங்களுக்கு மேல், உலகமெங்கும் டூர் போகும் எனக்கு, அமெரிக்காவில் படித்து, வேலை பார்க்கும் பெண் வேண்டாம் என நினைத்தோம். மியூஸிக், டான்ஸ் இப்படி ஏதாவது ஒரு துறையைச் சேர்ந்த பெண்ணாக இருந்தால் நல்லது என்பது எங்கள் எதிர்பார்ப்பு. என்னை இந்த அளவுக்கு உருவாக்கிய என் பெற்றோருக்கு, எனக்கு ஏற்ற பெண் யார் என்று முடிவு செய்யத் தெரியாதா என்ன? அவர்களது தேர்வு எனக்கும் பிடித்திருந்தது. சம்மதித்து விட்டேன்" என்கிறார் சஷாங்க்.




சஷாங்க்கும், ஸ்ரீஷாவும் முதல் முதலாகப் பார்த்துக்கொண்டது தென் கொரியாவில், சியோல் நகரில் என்பது இன்னொரு சுவையான தகவல். "எங்கள் உறவினர் வீட்டுக் கல்யாணத்துக்காக பெங்களூருக்குச் சென்றிருந்தபோது, குடும்ப நண்பரான குச்சிப்புடி டான்ஸர் வீணாமூர்த்தி மற்றும் வீணைக் கலைஞர் சுமா சுதீந்திராவிடம், சஷாங்க்குக்கு ஏற்ற பெண் இருந்தால் சொல்லும்படி கேட்டோம். மூன்றே நாட்களில் ஸ்ரீஷாவைப் பற்றிச் சொன்னார் வீணா. இரு குடும்பத்தினரும் சந்தித்துப் பேசினோம். ஸ்ரீஷாவின் போட்டோவையும், அவரது குச்சிப்புடி நடன வீடியோ பதிவையும் அமெரிக்காவில் சஷாங்க்குக்கு அனுப்பி வைத்தோம். எங்களுக்குப் பிடித்திருப்பதாகச் சொன்னதும், பெண்ணை நேரில் பார்க்காமலேயே திருமணத்துக்கு சஷாங்க் ஓ.கே சொல்லி விட்டான்.

சியோலில் ஓர் இசை நிகழ்ச்சிக்காக சஷாங்க் அமெரிக்காவிலிருந்து வர, நாங்கள் ஸ்ரீஷாவையும் அழைத்துக் கொண்டு சியோலுக்குப் போனோம். அங்கேதான் இருவரும் முதல் தடவையாக நேரில் சந்தித்துக் கொண்டார்கள்" என்றனர் சஷாங்க்கின் அப்பா சுப்ரமணியாவும், அம்மா ஹேமலதாவும்.

"சஷாங்க்கின் புல்லாங்குழல் இசையை நான் கேட்டதுண்டு என்றாலும், நேரில் பார்த்ததில்லை. எனவே, என் வருங்காலக் கணவராக அவரை சியோலில் சந்தித்ததை மறக்கவே முடியாது" என்கிறார் ஸ்ரீஷா. "எனக்குக்கூட அது திரில்லிங்கான அனுபவம்தான்" என்கிறார் சஷாங்க்.

- எஸ். சந்திரமௌலி

மூன்றாவது பரிமாணம்!



தங்கத் தாமரை முதலிய ஏராளமான விருதுகளைப் பெற்ற பிரபல இயக்குனர் அருண் கோப்கர், கேமராவில் கவிதை படைக்கும் மது அம்பாட், எடிட்டிங்கில் தேர்ந்த நிபுணர் சங்கல்ப்... இந்த மூன்று பேரும் இணைந்து, பரத நாட்டியக் கலைஞர் அலர்மேல் வள்ளியைப் பற்றி, தேசிய ஆவணக் காப்பகத்துக்காக, ஒரு குறும்படம் தயாரித்திருக்கிறார்கள்.

இதற்கு முன்பே இயக்குனர் குமார் சாஹ்னி தயாரிப்பதாக இருந்து, ஆரம்பக் கட்டத்திலேயே அது நின்று போயிற்று.

"ஆனால், ஒரு வகையில் அது நல்லதாயிற்று. எட்டு வருடங்களுக்குப் பிறகு, என் நடனம் இன்னும் முதிர்ச்சியை எட்டியிருக்கிறது. இப்போது படப்பிடிப்பு நடத்துவதையே நானும் வரவேற்றேன்!" என்று சொல்லும் அலர்மேல் வள்ளி, படப்பிடிப்பு அனுபவங்களை நம்மிடம் பகிர்ந்து கொண்டார்...

"பதினைந்து நாட்கள் சென்னையில் படப்பிடிப்பு நடத்தினார் அருண் கோப்கர். ஆனால், அதற்கு முன்பே மூன்று வாரங்கள் சென்னையில் வந்து தங்கினார். தினமும் பரத நாட்டியம் பற்றிப் பேசினோம். அபிநயம், நிருத்தம் எல்லாம் பற்றிப் பேசும்போதே வீடியோவில் பதிவு செய்து கொண்டார். ஒவ்வொரு கட்டத்தையும் எழுதிக் கொண்டார்! ஜதிகள் சொல்லும்போது கூட, மூவ்மெண்ட்டுகளைக் குறித்து வைத்துக் கொண்டார். 'சிறைப்பனி' என்று தொடங்கும் சங்ககாலப் பாடல் செய்யும்போது, வார்த்தை வார்த்தையாக எழுதி, அர்த்தம் எழுதி, என்ன அபிநயம் செய்கிறேன், 'சஞ்சாரி'யில் என்ன செய்கிறேன் என்று அவ்வளவையும் எழுதிக் கொண்டு விட்டார்!

முழுமை என்றால் அப்படி ஒரு முழுமையான வேலை. எதையும் தயார் செய்து கொண்டு, முழுதாகப் புரிந்து கொண்ட பிறகுதான் ஷூட்டிங்கைத் தொடங்குகிறார் அருண். நடனக்கலை ஒரு வகை மீடியம். திரைப்பட இயக்கம் என்பது இன்னொரு வகை மீடியம். எனக்கு இந்த இரண்டும் சமமாகச் சந்திக்கிற புள்ளி இருக்குமா என்ற கவலை இருந்தது. இரண்டு வெவ்வேறு தளங்களைச் சேர்ந்த கலைஞர்கள் இணைந்து உருவாக்கும், மூன்றாவது பரிமாணப் படைப்பு இது. ஆனால், 'ரஷஸ்' பார்த்தபோது, அந்தக் கவலை எல்லாம் பறந்து விட்டது. படம் அற்புதமாக வந்திருக்கிறது!"

புகழ்பெற்ற எழுத்தாளர் சாந்தா கோகலேதான் 'ஸ்க்ரிப்ட்'டை எழுதியிருக்கிறார். அலர்மேல்



வள்ளியைப் பற்றி இதுவரை வெளியாகியிருக்கிற நூற்றுக்கணக்கான பேட்டிக் கட்டுரைகள், அவரது நடன விமர்சனங்கள், எல்லாவற்றையும் ஒன்றுகூட விடாமல் படித்து விட்டு, வள்ளியின் கருத்துகள் பற்றி விரிவாகப் பேசிய பிறகு, அவற்றின் சாரம் முழுவதையும் 'ஸ்க்ரிப்ட்'டாக உருவாக்கியிருக்கிறார் சாந்தா கோகலே.

"கேமராமேன் மது அம்பாட், ஒரே ஒரு கேமராவைத்தான் உபயோகித்தார். ஆனால், திரையில் பார்க்கும்போது மல்ட்டி கேமரா பயன்படுத்திய மாதிரி தெரியும். லைட்டிங்கில் தனிக் கவனம் செலுத்தினார். அவருடைய அழகுணர்ச்சியையும், கலையுணர்வையும் பார்த்து பிரமித்துப் போய் விட்டேன்!" என்கிறார் வள்ளி. இந்தக் குறும்படம் அடுத்த மாதம் மும்பை, சென்னை, தில்லி, பெங்களூர் முதலிய நகரங்களில் ரசிகர்களுக்காகத் திரையிடப்படுகிறது.

- சாருகேசி

பங்குச் சந்தை டிப்ஸ்...




சிக்கு செக்குற சிக்கனம்...

இந்தியப் பொருளாதார வளர்ச்சியும் பண வீக்கமும், டிவி மெகா சீரியலும் மகளிர் பேராதரவும் போல, சேர்ந்தே இருக்கும் விஷயம்!

'Inflation' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு பணவீக்கம் என்று யார் தமிழாக்கம் செய்தார்களோ தெரியவில்லை! மூனு தடவை பத்தாம் கிளாஸ் எழுதிய மக்கு பிளாஸ்த் திரிக்கு 'அறிவொளி'ங்கிற பேர் இருக்கிற மாதிரிதான். 'வீக்கம்' என்பது நோயின் அறிகுறி. ஆனால், அடிப்படை பொருளாதார சித்தாந்தப்படி பணப்புழக்கம் ஓரளவு அதிகமானால்தான், பொருளாதார வளர்ச்சியும் கூடும்.

இந்த பாராவை ஒரு நல்ல செய்தியுடன் தொடங்கலாம். ரிஸர்வ் வங்கியின் சமீபத்திய அறிக்கை இது. அதன்படி,



இந்தியாவில் நிகழும் ஆண்டில், பணப்புழக்கம், சென்ற ஆண்டை விட பதினான்கு சதவிகிதம் அதிகரித்துள்ளது. இது என்ன கணக்கு? இந்த ஆண்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி ஆறு சதவிகிதமாகவும், பண வீக்கம் எட்டு சதவிகிதமாகவும் உயர்ந்து இருப்பதால், பணப்புழக்கம் பதினான்கு சதவிகிதமாக அதிகரித்திருக்கிறது என்று அனுமானம் செய்யலாம்.

சரி, பணவீக்கம் என்றால் என்ன?

போன வருஷம் ஒரு கிலோ தரமான சர்க்கரை, பதினான்கு ரூபாய் விற்றது என்று வைத்துக் கொள்வோம். இந்த வருஷம், அதே தரமுள்ள ஒரு கிலோ சர்க்கரைக்கு பதினேழு ரூபாய் கொடுக்க நேர்ந்தால், அதை பணவீக்கம் என்று சொல்கிறோம்.

இந்தப் பண வீக்கத்துக்கு என்ன காரணம்? அடுத்த இதழில் பார்ப்போம்.

வி.கோபாலன்

குறுந்தொகை



மௌன ராகம்


* கி.ரா.

● 'ஆதார சுருதி' என்ற உயர்ந்த சங்கீத நாவலை எழுதியவர் ரசவாதி. பரிசுகள் பல பெற்ற படைப்பு அது. அவரது புதல்வி ரேவதி பாலுவும் எழுத்தாளர்தான். வானதி பதிப்பகம் வெளியிட்ட சிறப்புச் சிறுகதைத் தொகுப்பில் இவரது கதையும் உண்டு. தொலைபேசித் துறையில் பணிபுரியும் ரேவதிபாலுவின் முதல் சிறுகதைத் தொகுதியின் தலைப்பிலும் சங்கீத மணம் கமழ்கிறது. தலைப்பு: 'மௌனமாக ஒரு ராகம்.' அடுத்த சிறுகதைத் தொகுதி தயாராகி வருகிறது. அதன் தலைப்பு: 'இதுவும் கடந்து போகும்!'

● தமிழிசை முன்னோடிகளில் ஒருவர் திருஞானசம்பந்தர். அவர் ஒரு லட்சத்து அறுபதினாயிரம் பாடல்கள் பாடினார் என்கிறார்கள். தற்போது கிடைப்பவை சுமார் நான்காயிரம் பாடல்களே. எல்லாமே இசையோடு பாட ஏற்றபடி பண் அமைக்கப்பட்டவை. ஞானசம்பந்தர் பற்றி சாகித்ய அகாதமிக்காக நூல் எழுதுகிறார், மதுரைப் பல்கலை இக்கால இலக்கியத் துறைத் தலைவர் டாக்டர் சு. வேங்கடராமன். அறியப்படாத தமிழ் இலக்கிய வரலாறு, என்றும் உள்ள தமிழ், தமிழ் வளர்த்த வைணவம் உள்படப் பற்பல நூல்களின் ஆசிரியர். இவரது குறிப்பிடத்தக்க இன்னொரு நூல்: 'சிறுகதைக் கலைஞர் ஜெயகாந்தன்.'

* சு. வேங்கடராமன்









* ரேவதி பாலு

* சுந்தரராஜன்

● எம்.வி. வெங்கட்ராமின் நெருங்கிய நண்பராக இருந்தவர் அமரர் கே.பி. நீலமணி. பத்திரிகையாளராகப் பணிபுரிந்தவர்... 'புல்லின் இதழ்கள்' என்ற சங்கீத நாவலின் ஆசிரியர். இவர் சிறந்த வயலின் வித்வானும்கூட. வயலின் வகுப்பெடுத்து, பல இளம் வயலின் கலைஞர்களை உருவாக்கியவர்.

● கர்நாடக சங்கீதத்தின் நுணுக்கங்களையெல்லாம் உணர்ந்து எந்த இசை விமர்சகருக்கும் இணையாக சங்கீதத்தை அலசக் கூடியவர் கி. ராஜநாராயணன். அவரது மிக நெருங்கிய நண்பராக இருந்த கு. அழகிரிசாமியும்கூட இசைப்புலமை நிறைந்தவர். அழகிரிசாமியின் 'திரிவேணி' என்ற காலத்தை வென்ற கதையில், தியாகராஜரே ஒரு பாத்திரமாக வருகிறார்.

● மதுரை மணி ஐயரின் பரம விசிறியாக ஓர் எழுத்தாளர் இயங்கி வந்தார். அவர் வந்தால் அவரை முன் வரிசையில் அமருமாறு மதுரைமணி கேட்டுக் கொள்வது வழக்கம். 'மதுரை மணி அல்ல அவர், மதுர மணி!' என்று இப்போதும் பழைய நினைவுகளில் நெகிழ்கிறார் முதுபெரும் எழுத்தாளர் சிட்டி பி.ஜி. சுந்தரராஜன்.

- திருப்பூர் கிருஷ்ணன்

20. அர்ச்சுன சந்நியாசி

விஷ்வக்ஸேனன்



மகுட வைரம்

'ஆத்திரம் அறிவுக்குச் சத்ரு' என்று பழமொழி ஒன்றிருக்கிறது. ஆத்திரம் அதிகமாகும்போது மனிதன் பேசும் வார்த்தைகளையோ, செயல்களையோ உணர்வதில்லை. பின்னர் ஏற்படும் விளைவுகளை எதிர்கொள்ளும்போது, தவறு புரிந்தாலும் அதை பெரும்பாலோர் ஏற்றுக் கொள்வதில்லை. அதேபோலத்தான், மனிதன் அபிமானம் வைத்திருப்பவர் பழிக்கப்படும்போதோ, தாக்கப்படும்போதோ, உணர்ச்சி வசப்பட்டு விடும் மனிதனுக்கும், ஆத்திரக்காரனுக்கும் வேறுபாடே இல்லாமற் போய் விடுகிறது.

பாண்டிய நாட்டுக்காகவும், மன்னனுக்காகவும் உயிரையும் தரச் சித்தமாக இருக்கும் முகுந்தன், மன்னனையும் பழித்து, இளவரசியையும் கொன்றுவிட ராஜ மாதுலர் உத்தரவிட்டதும், உணர்ச்சி வசப்பட்டு முன்னால் பாய்ந்து மேலேயிருந்து தொங்கிய இரும்புச் சங்கிலிகளில் ஒன்றைப் பிடித்து பலமாக இழுத்து விட்டான்.

"வேண்டாம் முகுந்தா" என்று விஷ்ணு சித்தரின் அலறல் முடியுமுன்பு, ஏதோ அந்த சுரங்கப்பாதையே இடிந்து விழுவது போல ஒலி எழுந்தது. சுரங்கப்பாதையின் இரு வாயில்களையும் பெரும் பாறைகள் உருண்டு வந்து அடைத்தன. குறுக்கே நின்ற தூண்கள் சுழன்று நகர்ந்து, சுருங்கச் சுவரோடு பதிந்தன. பக்கச் சுவர்கள் விலகி சதுரச் சாளரங்கள் சுவர்களில் வரிசையாகத் தோன்றி, உள்ளிருந்து அம்புகளையும் ஈட்டிகளையும் வீசும் யந்திரங்கள் சுழன்றபடியே வெளிவந்தன. நடுவில் நின்றிருந்த ராஜ மாதுலரையும், மலை நாட்டு வீரர்களையும், ராஷ்டிரகூடர்களையும் நோக்கி, ஏதோ மழை பொழிவது போல் அம்புகளும் ஈட்டிகளும் தொடர்ந்து பொழிந்தன. ராஜ மாதுலரும் வீரர்களும் உடல்கள் சல்லடைக் கண்களாகத் துளைக்கப்பட்டு மரணக் கூச்சல்களுடன் சரிந்தார்கள்.

ஒரு நாழிகை நேரம் கழித்து தூண்கள் மீண்டும் பழைய இடங்களை அடைந்து நின்றபோது, இளவரசியின் கண்ணெதிரே விரிந்த காட்சி மிகக் குரூரமாயிருந்தது.

"இளவரசி, விஷ்ணுசித்தரே, மன்னிக்க வேண்டும். மன்னரைப் பழித்து, இளவரசியாரைக் கொல்ல உத்தரவிட்டதால் உணர்ச்சி வசப்பட்டு விட்டேன்" என்றான் முகுந்தன் கரகரத்த குரலில்.

விஷ்ணுசித்தரின் முகத்தில் வருத்தம் தெரிந்தது.. "அவசரப்பட்டு விட்டாய் முகுந்தா... சரி, கோட்டைத் தலைவனை அழைத்து உடல்களை அப்புறப்படுத்தச் சொல். நீயே சென்று மன்னருக்கு நடந்தவற்றைத் தெரிவித்து விடு" என்றவர், இளவரசியை அழைத்துக் கொண்டு, பின்பக்கம் தெரிந்த கதவொன்றின் வழியே வெளியே வந்தார்.

அதுவரை மௌனமாக இருந்த இளவரசி கேட்டாள், "விஷ்ணு சித்தரே, அந்த ராகுலனும், வில்லவனும் எங்கிருக்கிறார்கள்?"

"அவர்கள் பாண்டியர் எல்லையை நெருங்கி விட்டார்கள் மகளே. அவர்களை எதிர்பார்த்துத்தான் பராந்தகனும் அங்கே சென்றிருக்கிறான்" என்றார் விஷ்ணுசித்தர்.



வீசிக்கொண்டிருந்த மலையமாருதம் சற்று மந்தமாகவே இருந்த போதிலும், காற்றில் குளிரை நிரப்பி ஊசிகளைக் கொண்டு குத்துவது போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

பராந்தகனின் விழிகள் அந்த மாலை நேரத்தில், மலைப் பகுதியில் வனாந்தரத்தின் அழகைப் பருகிக் கொண்டிருந்தன. தாயின் மடிமீது தவழ்ந்து ஏறிச் சென்று விளையாடும் குழந்தைகள் போல, மேகங்கள் மலை மீதும், முகடுகளிலும் தவழ்ந்து கொண்டிருந்தன. காட்டு மைனாக்களும், கிளிகளும், இன்னும் பெயர் தெரியாத பல பட்சிகளின் கீதங்கள் ஓங்கி ஒலித்தன. கிறீச் கிறீச்சென்று மரங்களில் தாவிய குரங்குகளைக் கண்டும், புரவிகளில் மனிதர்கள் வருவதைக் கண்டும், புல்வெளிகளில் மேய்ந்து கொண்டிருந்த காட்டு முயல்களும், மான்களும் தலையை உயர்த்தி, திருப்பி அபிநயம் பிடித்துவிட்டு, ஒரே தாவலில் ஓடி மறைந்தன. தூரத்தில் எங்கோ பெரும் உறுமல் ஒன்றும் ஒலித்து அடங்கியது. எங்கோ அருவியொன்று பாயும் ஒலி தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது.

சற்றுத் தொலைவில் தென்பட்ட பாறைகளின் மேல் தலைகள் தோன்றி மறைந்ததைக் கவனித்த பராந்தகன், புரவியை இழுத்து நிறுத்தினான்.

"நாம் கூபகர் வாழும் பகுதியை அடைந்துவிட்டோம் பராந்தகா" என்றான் பகதத்தன்.

பாறைகளை நெருங்குமுன்பாக கன்னங்கரேலென்ற நிறத்துடன், வலுவான உடலமைப்புடன், அளவில் பெரிதான ஈட்டிகளைத் தாங்கி கூபகர் இன ஆண்கள் வழி மறித்து நின்றனர். கழுத்தில் ஆடிய மணிகளும், தலையில் செருகப்பட்டிருந்த இறகுகளும், செவிகளில் தொங்கிய பெரும் வளையங்களும், அவர்களுக்கு விசித்திரமான தோற்றத்தை அளித்தன. அவர்கள் கரங்களிலிருந்த ஆயுதங்களும் விசித்திரமாயிருந்தன.

பராந்தகன் புரவியிலிருந்து கீழே இறங்கினான். அவனுக்கு முன்பாக கூபகர்களை நெருங்கிய பகதத்தன், நாட்டிய முத்திரை போல அபிநயம் செய்துவிட்டு ஏதோ கூறினான். கூபகர்கள் பராந்தகனை அதிசயத்துடன் பார்த்தனர். இருவர்



திரும்பி பாறைகளின் பின்னே தென்பட்ட வழியில் வேகமாக ஓடினர். சற்று நேரத்தில் ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாக கூபகர் மக்கள் ஓடி வந்தார்கள். அவர்களின் கூச்சல் மலைப் பகுதியில் பெரிதாக எதிரொலித்தது.

வந்து நின்ற கூட்டத்தை விலக்கிக் கொண்டு திடமான முதியவர் ஒருவர் வந்தார். பராந்தகனை ஏற இறங்கப் பார்த்தவரது முகத்தில் திருப்தி தெரிந்தது. கரங்களைக் குவித்து வணங்கியவர், வலது கரத்தை முன்னால் நீட்டினார்.

"பராந்தகா, மன்னர் அளித்த முத்திரை மோதிரத்தை இவர்களிடம் காட்டு. வெறும் வார்த்தைகளை நம்புபவர்களல்ல இவர்கள். எளிதில் ஏமாறக் கூடியவர்களுமல்ல'' என்றான் பகதத்தன்.

முத்திரை மோதிரத்தை எடுத்து நீட்டினான் பராந்தகன். மாலைப் பொழுது மங்கி இருள் சூழத் தொடங்கிய அந்தச் சமயத்திலும், வர்ண ஜாலங்களை அள்ளி வீசியது அந்த முத்திரை மோதிரம். ஒருமுறை அதை உற்றுப் பார்த்த முதியவர், கரங்களை முன்னால் நீட்டியபடி மண்டியிட்டார். தொடர்ந்து பின்னால் நின்ற கூபகர் கூட்டமே மண்டியிட்டு, ஒரே குரலில் ஏதோ சத்தமிட்டது.

பகதத்தன் பெரிதாக நகைத்தான். "பராந்தகா, இவர்கள் இனி உன் அடிமைகள். நீ உத்தரவிட்டால்தான் எழுந்திருப்பார்கள்" என்றான் நகைத்தபடி.

அந்த முதியவரின் வலுவான தோள்களைப் பற்றி எழுப்பிய பராந்தகன், "முதியவரே, எழுந்திருங்கள். வயதில் மூத்தவர் தாங்கள். எனக்கு மண்டியிட வேண்டாம்" என்றான்.

அடுத்து ஒலித்த முதியவரின் குரலில் கூபகர் மொழி ஒலிக்கவில்லை. சுத்தமான தமிழ் ஒலித்தது. "இளவரசே, உங்கள் வருகை மிக்க மகிழ்ச்சியளிக்கிறது. எமது குடிசைகளுக்கு வாருங்கள்" என்றார்.

"முதியவரே, நான் இளவரசனல்ல. மிகச் சாதாரண ஒரு வீரன்தான். என்னைப் பெயரிட்டே அழைக்கலாம். என் பெயர் பராந்தகன். இவன் என் தோழன் பகதத்தன்."

''பராந்தகரே, பாண்டிய மன்னர் எமக்குக் கடவுள். அவரது முத்திரை மோதிரம் கொடுத்தனுப்பப்படுபவர் எமக்குத் தலைவர். வாருங்கள்'' என்றவர் திரும்பி நடந்தார். கூபக மக்கள் அரை ஓட்டமாக குடிசைகளை நோக்கி ஓடினர்.


சமவெளியில் தெரிந்த குடிசைகள் வழக்கமானவையாக இல்லாமல் உயரமாகவும், அளவில் பெரியனவாகவும் தெரிந்தன. மான் குட்டிகளும், ஆடுகளும், கோழிகளும் வாசல்கள் உலவ, ஓரங்களில் ஓநாய்களைப் போன்ற வேட்டை நாய்கள் புதிதாக வருபவர்களை உற்றுப் பார்த்தபடி நின்றன. வெறும் மணிகளையும் சிறு துணிகளையும் அணிந்த சிறுவர் சிறுமியர்,

"கமலா...! நேத்து அதிசயமா நீ சமையல் செஞ்சது நல்லதாப் போச்சு...!"

"ஏன்! என்ன ஆச்சு?"

"ஒரு வாரமா நம்ம வீட்டுல டேரா போட்டிருந்த என் நண்பன் சொல்லாம கொள்ளாம ஓடியே போயிட்டான்...!"

- குட்டி ரேசன்னா





பாதி மறைந்து நின்று எட்டிப் பார்த்தனர்.

உயரமான ஒரு குடிசையின் உச்சியில் பாண்டியர் கொடி மலைக் காற்றில் படபடத்தது. வாயிலில் கனத்த கூர் வேல்களுடன், திடகாத்திரமாக நின்ற நால்வர் தலை வணங்க உள்ளே நுழைந்த பராந்தகனும் பகதத்தனும், மூங்கிலிலான பெரும் இருக்கைகளையும், வண்ணச் சிலைகளையும், மரச் சிற்பங்களையும் கண்டு பிரமித்தனர்.

"பராந்தகரே, நீண்ட பயணத்தில் களைத்திருப்பீர்கள். உணவு தயாராகிக் கொண்டிருக்கிறது. அருந்திவிட்டு ஓய்வெடுங்கள். காலைப் பொழுதில் நீங்கள் இடும் பணி எதுவானாலும் நிறைவேற்றித் தருகிறோம்" என்றார் முதியவர்.

அடுத்து வெளியே நடந்த முதியவர் கூபக வீரர்களிடம் சரமாறியாக ஏதோ உத்தரவுகள் இடுவதைக் கவனித்த பராந்தகன் கேட்டான். "பகதத்தா, அவர் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்?"

பகதத்தன் முகத்தில் வியப்பு தெரிந்தது. "பராந்தகா, நாம் வந்த வழியில் பின் தொடர்ந்து எவரேனும் வந்திருக்கிறார்களா என்று கண்டு வரச் சொல்கிறார். காவலைப் பலப்படுத்தவும் உத்தரவிடுகிறார்."

முதியவரின் எச்சரிக்கை உணர்வு இருவரையுமே வியக்க வைத்தது.

அடுத்த ஒரு நாழிகையில் வரகரிசியில் சமைத்த உணவும், ஆசினிப் பலாவும், மலைத் தேனும் வந்தன. ரசித்து ருசித்து, காரமும் மணமுமான உணவை அருந்தத் தொடங்கினான் பகதத்தன்.

"அதிருக்கட்டும் பகதத்தா, முதியவர் என்னை இளவரசர் என்று அழைத்தாரே, நீ அவரிடம் என்ன கூறினாய்?" என்றான் பராந்தகன்.

பகதத்தனின் முகத்தில் பலாச்சுளையும், தேனும், கூடவே விஷமமும் சேர்ந்து வழிந்தன.

"உன்னை மன்னருக்கு நெருங்கிய உறவினன் என்றேன்."

"உறவினனா? நானா, பாண்டிய மன்னருக்கா?"

"ஆம்."


"எப்படி?"

"இளவரசியை மணப்பவன் மன்னருக்கு உறவுதானே? அதைத்தான் சொன்னேன்."

"இதென்ன அபாண்டம்? என்ன உளறுகிறாய்?" - பராந்தகன் பதறினான்.

"அடேய், பதறாதே. நான் உளரவில்லை. உண்மையைத்தான் கூறினேன். உன்னையே உனக்குப் புரியவில்லை என்றால் அது என் குற்றமல்ல. முதலில் உணவருந்து" பகதத்தன் மிரட்டினான்.

உணவை முடித்துக் கொண்டு அமர்ந்த பராந்கனை நோக்கிய பகதத்தன், "இப்பொழுது சொல், இதுவரையில் உன் சித்தத்தில் சோழ நாட்டின் விடுதலையும், இப்போது மேற் கொண்டுள்ள



பணியும்தான் நிறைந்திருக்கின்றன அல்லவா?" என்றான்.

"ஆமாம்."

"சரி, இந்தப் பணிகள் முடிந்த பின்பு?"

"திரும்ப வண்டாழஞ்சேரிக்குச் செல்ல வேண்டியது தான். வயல்வெளியும், அரிசிலாறும், உழவு மாடுகளும் இருக்கவே இருக்கின்றன."

பகதத்தன் நகைத்தான்.

"ஏன் நகைக்கிறாய்?"

"முட்டாள், படைத் தலைவரைக் காத்து, இளவரசியை மீட்டு, மேல மங்கலத்திலும் ராகுலனின் திட்டத்தை முறியடித்து, இப்போது தென் எல்லைப் புறத்து வில்லவனையும் ராகுலனையும் அழிக்க வந்திருக்கிறாய். இத்தகைய ஒரு வீரனை, பாண்டிய மன்னர் எளிதில் விட்டுச் சென்றுவிட அனுமதிப்பாரா? பல்லவ மன்னருடனான உன் உறவு என்ன, அந்த வாள், கர்ணனுக்குக் கிடைத்த நாகாஸ்திரம் போல உன்னிடம் வந்த கதை என்ன, என்பதெல்லாம் இன்னும் புரியவில்லை. அத்தனை எளிதில் மீண்டும் வண்டாழஞ்சேரிக்குச் சென்றுவிட இயலும் என்று எண்ணுகிறாயா?"

பராந்தகன் மௌனம் சாதித்தான். இதுவரை அவனது செயல்களின் பின்விளைவுகளை அவன் சிந்தித்துப் பார்க்கவேயில்லையென்பது தெளிவாகத் தெரிந்தது.

"இதைத் தவிர இன்னொரு முக்கியமான உண்மையும் இருக்கிறது பராந்தகா."


"என்ன உண்மை?"


"இளவரசி குமுதவல்லி, அர்ச்சுன சன்யாசியை அல்லி ராணி பார்த்த பார்வையல்லவா உன்னைப் பார்க்கிறாள்? அவள் பார்வைக்கு என் மனம் தரும் விளக்கம் சரியானால், அவளது இதயம் உன்னால் பறிக்கப்பட்டு விட்டது என்பது நிச்சயம். உன்னிடமும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. உண்மையைச் சொல். இளவரசியை நீ புரிந்து கொள்ள வில்லையா? நான் உன்னைவிட இதில் அனுபவசாலி. என்னிடம் மறைக்காதே."

பராந்தகன் மீண்டும் மௌனம் சாதித்தான். குமுதவல்லியின் குமுத முகம் அவன் மனத்தில் முழுவதுமாக எழுந்து அவனை விழித்துப் பார்த்தது. "சோழ நாட்டு வீரரே. உண்மையை உங்கள் மனதுக்கே மறைக்க முயல வேண்டாம். உங்கள் இதயத்தில் சோழ நாட்டு விடுதலையைத் தவிர, வேறு சிலவற்றுக்கும் கூட இடமிருக்கிறது. நன்றாகப் பாருங்கள்" என்று நகைத்தது அந்த எழில் முகம்.

அவனே உணராமல் அதுவரை உறங்கிக் கிடந்த உண்மைகள், மெல்ல பராந்தகனின் மனத்தில் உதயமாகத் தொடங்கின.

(தொடரும்)





ஓவிய ஜாம்பவான் சில்பியின் கலைக்கூடத்தில் பட்டை தீட்டப்பட்டவர் ஓவியர் தனுஸு. ஆலயங்களையும் கடவுளர்களையும் தத்ரூபமாகத் தீட்டும் அவர் வீட்டு வரவேற்பறையில் தெய்வீகமாய் வீற்றிருக்கிறது ஓர் ஓவியம்.

"எங்கள் நித்திய பூஜாமூர்த்தியாக விளங்கும் ஸ்ரீ ஏகம்பனையும், ஸ்ரீ ஏலவார் குழலியையும் திருமணக் கோலத்தில் முழுமையான ஆபரணங்களுடன் ஓவியமாக்க எண்ணம் கொண்டு, சுமார் ஆறு மாதங்கள் தொடர்ந்து சிரத்தையுடன் தீட்டினேன். இதில் எனக்குக் கிட்டிய மனநிறைவு முன்னெப்போதும் கிடைத்ததில்லை" என்கிறார் தனுஸு.

- கலை

நீங்கள் கேட்டவை - தராசு

சிறைச்சாலைக்குள் தண்டம் இருப்பது சரியா..?




● நகை ஓ. மகராசன்,
சின்னமனூர்

? 'கடந்த லோக்சபா தேர்தலின் செலவுக் கணக்குகளை உடனடியாகச் சமர்ப்பிக்காவிட்டால், பா.ஜ.கவின் 'தேசியக் கட்சி' அங்கீகாரத்தை ரத்து செய்ய நேரிடும்' என்கிறதே தேர்தல் கமிஷன்?

! அதானே! இந்தியா ஒளிர்ந்ததுகூட அரசுச் செலவில்தானே! ஏன் தாமதம்? எப்படியும் தேசியக் கட்சி என்ற அங்கீகாரத்தை பி.ஜே.பி தக்க வைத்துக் கொண்டுவிடும் என நம்பலாம். எனினும் தேர்தல் கமிஷனிடமிருந்து இப்படி ஒரு தாக்கீது பெற்றதே கேவலமல்லவா!



• சிக்ஸர்....



• .... சாம்பியன்!

● எல். இரவி, செ. புதூர்

? பிற மொழிப் படங்களைத் திரையிட கர்நாடகத்தில் இவ்வளவு எதிர்ப்பு வரக் காரணம் என்ன?

! மத அடிப்படைவாதம் மாதிரி, இது மொழி அடிப்படைவாதத்தால் வரும் வினை. இதனால் கன்னடப் படங்கள் அதிகமாக ஓடும் என்று கணக்குப் போட்டால், அல்நாஷயர் கதை ஆகிவிடும்!

● பொன்மொழி, அன்னூர்

? உயர்ந்த பொறுப்பில் உள்ளவர்கள் வழி தவறி நடக்க என்ன காரணம்?

! 1) அவர்கள் அப்பொறுப்புக்கு தகுதியில்லாதவர்களாயிருப்பது.

2) அப்பொறுப்பு தரும் முக்கியத்துவத்தைத் தங்கள் சொந்த முக்கியத்துவமாகக் கருதி, அகந்தை கொள்வது.

3) தவறாக வழிகாட்டுவோரை அருகில் வைத்துக் கொள்வதால் தறிகெட்டுப் போவது.


● க. முத்துக்குமார், வேப்பம்பட்டிபுதூர்

? பிச்சையெடுப்பதைவிடக் கேவலமானது எது?

! லஞ்சம் வாங்குவது. பிராய்லர் கோழி



• டபுள் பரபரப்பு!



கடை போட, ஓர் ஆண்டுக்கான உரிமக் கட்டணம் நானூறு ரூபாய். ஆனால் புதிதாக் கடை ஆரம்பிக்க முயன்ற ஒருவர், உரிமம் பெற லஞ்சமாக பதிமூன்றாயிரம் ரூபாய் அழுதிருக்கிறார். இதை அப்பகுதி கவுன்சிலர் 'சையத் மஸூத்' அறிந்து, மாநகராட்சி கமிஷனரிடம் மனு தந்துள்ளார். லஞ்சம் வர்ங்கும் டாப் டென் நாடுகளில் நாம் வேகமாக முன்னேறி வருகிறோம்!

● எம். சம்பத் வேலாயுதம்பாளையம்


? மறைந்த ஆர்தர் ஹெய்லியின் படைப்புகளில் உங்களைக் கவர்ந்தது எது?

! அவர் படைப்புகளைக் காட்டிலும் அவற்றை உருவாக்க அவர் செய்த மிக உன்னிப்பான கவி ஆராய்ச்சியே கவர்ந்தது.

● எம். சிவகுருநாதன், தஞ்சை

? 'இரண்டாயிரம் ஆண்டு பழைமையான சங்கரமடத்தின் அறுபத்து மூன்றாவது ஆச்சார்யரைக் கைது செய்திருக்கலாமா?' எனக் கேள்வி கேட்கும் அத்வானி, வாஜ்பாய் போன்றவர்கள்கூட 'அப்படிப்பட்ட உயர்ந்த நிலையில் இருக்கும் ஒருவர் கொடூரக் கொலைக் குற்றத்தில் குற்றம் சாட்டப்பட்டு, சந்தேகிக்கப்படும் அளவுக்கு இடமளிக்கலாமா?' என்பது பற்றி கவலை தெரிவிக்கவில்லையே?

! இதுதாங்க பா.ஜ.க பிராண்ட் அரசியல்.



• கித்தாப் காங்கிரஸ்!

● எஸ். மீனா, திருச்சி - 6.

? இந்தியாவிலேயே பரபரப்பான மாநிலம் எது?

! சன் டீ.வி.யில் செய்திகளைக் கேட்டால் பரபரப்பு உலகளாவியது. பரபரப்பு இல்லாத செய்தியே உலகில் கிடையாது! ஜூலியா ராபர்ட்ஸுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தால்கூட ஓரே பரபரப்புதான்!



• கிருஷ்ணா கைங்கர்யம்

● சியாமளா ஈஸ்வரன், தேவூர் மேட்டுக்கடை

? 'காங்கிரஸ் கட்சி தயவின்றி இனி தமிழகத்தில் எந்தக் கட்சியும் ஆட்சி அமைக்க முடியாது' என்கிறாரே ஜி.கே. வாசன்?

! இந்தக் கித்தாப்பிலேயே மிதக்கிற காங்கிரஸ், என்றைக்குத்தான் தனித்து ஆட்சி அமைக்குமாம்!

● ஆர். ராமசுப்ரமணி, திருவாரூர்

? 'சிறுபிள்ளைத்தனம் என்பதற்கு ஆங்கிலத்தில் 'சைல்டிஷ்' என்று அர்த்தம். அது தவறான வார்த்தை அல்ல' என்று முதல்வர் ஜெயலலிதா சொல்வது சரியா?

! வார்த்தையில் குறையில்லை; பிரயோகத்தில்தான். இதுதான் தி.மு.கவின் வாதமும்கூட. எனினும் இச்சொல் 'unparliamentary' என்ற ஆட்சேபகரமான பிரிவில் வராது.



• இரட்டைத் தோல்வி

● ஆர். ரங்கநாதன், சென்னை - 17

?2005ல் சென்னையில் தண்ணீர்த் தட்டுப்பாடு எப்படி இருக்கும்?


! வருண பகவான் இந்த வருடம் வழி காட்ட, வீராணம் நிறைந்துவிட்டது. ஸ்ரீ சாய்பாபா, கிருஷ்ணா கால்வாயைச் சீரமைத்துக் கொடுத்ததால் கண்டலேறு தண்ணீரும் கை கொடுக்கப் போகிறது. என்றாலும் சென்னைக்குக் குடிநீர் சப்ளை செய்யும் ஏரிகள் நிரம்பாதது திக் திக். முதல்வரின் கவனம் இனியேனும் அந்த திசையில் திரும்ப வேண்டும்.

● வே. சித்ரா, கும்மிடிப்பூண்டி

? ஆந்திராவில் நக்சல் - அரசு பேச்சுவார்த்தை வெற்றி பெறாதது எதைக் காட்டுகிறது?

! இரு தரப்பினரிடையேயும் 'ஈகோ' பிரச்னை இருப்பதை

யும், நாட்டு நலனைக் கருத்தில் கொள்ளாததையும்தான்.



● கே. தெய்வசிகாமணி, சென்னை - 30
? 'செல்லமே' படத்தில் வில்லனாக நடித்த பரத், சமீபத்தில் பி.ஏ தேர்வு எழுதும்போது பிட் அடித்து மாட்டிக் கொண்டது எதைக் காட்டுகிறது?
! பி.ஏ பாடமும் ஒழுங்காகப் படிக்கவில்லை. வில்லனாக நடித்தாரே, அதிலிருந்தும் பாடம் கற்கவில்லை என்பதைத்தான்.

● ரேவதிப்ரியன், ஈரோடு
? அஜித், சிம்பு - இரட்டை வேட நடிப்பில் அமர்க்களப்படுத்துவது யார்?
! அஜித் தோற்றத்தை மாற்றாமலேயே அட்டகாசப் படுத்துகிறார். சிம்பு தோற்றம் நடிப்பு, இரண்டிலும் சின்னச் சின்ன மாற்றங்களோடு சிக்ஸர் அடித்திருக்கிறார்.



• ... கவலை!



• படாத....

● எம்.கே. இளமதி, பேரையூர்
? தற்போது பிரபலமாக இருக்கும் டீ.வி தொடர் எது?
! வருத்தத்தை அளித்து, எல்லா சானல்களிலும் ஐந்து வேளைச் செய்தியிலும் வரும் தொடர்.

● ஆர்.கே. ராமன், பெங்களூர்
? வியாபாரிகள் லாபத்துக்கு மேலாக விலையைக் கூறி, பின்பு சிறிது குறைப்பது போல் பெட்ரோல், சமையல் வாயு விலைகளைப் பல மடங்கு உயர்த்தி, பின்பு அரசே சற்றுக் குறைப்பது மக்களை ஏமாற்றும் காரியமல்லவா?
! பேரம் பேசி ஒரு ரூபாயாவது குறைத்தால் திருப்தியாக ஏமாறுவதும், கூட இலவசம் தருவதானால், எதையும் வாங்கி ஏமாறுவதும் நம் தேசியக் கலாசாரம்.

● டி. சிவகுமார், திண்டுக்கல்
? தீபாவளிப் படங்களில் எது டாப்?
! நீங்க ஒண்ணு... திருட்டு வி.சி.டி குறைஞ்சும்கூட, தியேட்டர்களில் கலெக்ஷன் அப்படியொண்ணும் அதிகரிக்கலைன்னு அவனவன் துக்கப் பட்டுக்கிட்டிருக்கிறப்போ, டாப்பாவது பாட்டமாவது!

● என். பாலு, சிறுகமணி
? சாமியார்களை நம்பாதீர்கள் என்று அரசியல் தலைவர்கள் சிலர் அறிவுரை சொல்வது எப்படி இருக்கிறது...?
! 'போலிகளை நம்பி வேறெங்கும் ஏமாந்து விடாதீர்கள், எங்களிடமே ஏமாறுங்கள்' என்ற அக்கறை மிகுந்த அறிவுரைதான் அது.

● தெ. சுந்தரமகாலிங்கம், வத்திராயிருப்பு★
? சிறைச்சாலைக்குள் தண்டம் இருப்பது சிறைச்சாலை விதிகளின்படி சரியா? அப்படியே சரியென்றாலும், ஆகம விதிகளின்படி சரியா?
! மனசாட்சிப்படியே சரியில்லை. அது சொல்வதைக் கேட்காதபோது, விதிகள் சொல்வதைக் கேட்டால் என்ன, மீறினால் என்ன...!

❑ ரூ. 100 பரிசு பெறுபவர்:
எம். சிவகுருநாதன்,
262, மூன்றாவது தெரு,
பிலோமினா நகர்,
தஞ்சாவூர் - 613 006

★ ரூ 50 பரிசு பெறுபவர்:
தெ. சுந்தரமகாலிங்கம்,
58, பலகுடி வடக்குத் தெரு,
வத்திராயிருப்பு - 626 132
விருதுநகர் மாவட்டம்



'எண்'ணியது

எந்த விவரமும் சொல்லாமல் நெய்வேலி சந்தான கோபாலன், கடம் கார்த்திக், அருணா சாய்ராம் மற்றும் ரஞ்சனி - காயத்ரியிடம் பிறந்த தேதி மாதம், வருடம் போன்ற தகவல்களை வாங்கிக் கொண்டு (வருடத்தை வெளியிடக் கூடாது என்று முனகிக் கொண்டே கொடுத்தார்கள்.) எண் ஜோதிட நிபுணரான சி.வி. ராஜராஜனிடம் (இவர்தான் டி.ஆரை விஜய டி.ஆராக மாற்றியவர்) சென்று ஒப்பித்து, நமது கேள்விகளை முன் வைத்தோம். அனைத்தையும் கணக்கிட்ட ராஜராஜன் பலன்களைக் கூறினார்.

நெய்வேலி சந்தான கோபாலன்:

தொண்டை சரியாகுமா?

(பிறந்த தேதி கூட்டு : 6, பெயர் கூட்டு: 7, எண்களின் கூட்டு: 7)

" அறிஞர் அண்ணாவின் பிறந்த தேதி கூட்டு எண்ணிக்கையான 6ல் பிறந்துள்ளதால், உலகப்புகழ் அடையும் அளவிற்கு இவர் திறமைகள் வாய்ந்தவர் என்பதில் எள்ளளவும் சந்தேகமேயில்லை. ஆனால் இவருடைய திறமை, புகழை தேடித்தரும் அளவுக்குப் பொருளைத் தேடித்தராது. கேது போல கெடுப்பாரில்லை. பெயரின் கூட்டுத் தொகையான ஏழில் கேதுவின் ஆதிக்கம் இருப்பதால் அவரின் குரல் சரியாகாது. 52 வயதுக்குப் பிறகு பிரச்னை இன்னமும் அதிகமாகும்.

பரிகாரம்: இவருக்கு வழங்கப்பட்ட பட்டங்களை என்னுடன் கலந்தாலோசித்துப் பிறகு பெயருடன் இணைத்துக் கொண்டால், ஒரே வாரத்தில் இவரின் தொண்டை சம்பந்தமான பிரச்னைகள் தீர்ந்து போகும். இதை ஒரு சவாலாகவே ஏற்றுக் கொள்கிறேன்."

(சவால் கிவால் எதுவும் வேண்டாம். சந்தானகோபாலன் பாட்டு எங்களுக்கு இப்படியே பிடிச்சிருக்கு என்கிறார்கள் அவருடைய ரசிகர்கள்!)



• பாடுவாரா?



• உடம்பு இளைக்குமா?

அருணா சாய்ராம்:

சினிமாவில் பாடுவாரா?

(பிறந்த தேதி கூட்டு : 3, பெயர் கூட்டு : 7, எண்களின் கூட்டு:6.)

"இவர் தமது சமுதாயப் பணியினாலும், இறைவனைப் பற்றி பாடுவதாலும் உலகளாவிய புகழ் பெறுவார். மற்றபடி சினிமாவில் நிச்சயம் பாட மாட்டார். அதற்குரிய வாய்ப்பு கிடைக்காது.

பரிகாரம்: எப்படி சிவாஜி ராவாக இருந்த ரஜினிகாந்த் பெயர் மாற்றம் செய்து, தமிழ்நாட்டின் பட்டிதொட்டி வரை பிரபலமடைந்தாரோ, அதே போல் பெயர் மாற்றந்தால் அருணா சாய்ராமும் அறுபதே நாட்களில் சினிமாவில் புகழ்பெற முடியும்."

(என்ன மேடம், கவுன்ட் டவுனை ஆரம்பிக்கலாமா...?)

ரஞ்சனி-காயத்ரி:

டி.வி சீரியல்களில் நடிப்பார்களா?

• நடிப்பார்களா?



நிறைவேறுமா?



(ரஞ்சனி : பிறந்ததேதி கூட்டு : 4, பெயர் கூட்டு : 7, எண்களின் கூட்டு : 2)

"மிகப்பெரிய நடிப்பாற்றல் கொண்டவர். இவரது ஒவ்வொரு முகபாவமும் ரசிகர்களை ஈர்க்கும். பிறப்பிலேயே இவருக்கு இக்கலை வாய்த்திருந்தாலும், பெயரினால், கேதுவின் சூழ்ச்சியினால் இவரால் சினிமாவிலோ, டி.வியிலோ நுழைய முடியாமல் போய்விட்டது. ஆனாலும், மிகத் தாமதமாக இவருக்கு நடிப்பதற்கான வாய்ப்புகள் தேடி வரும்.

பரிகாரம்: பெயர் மாற்றம் செய்தால் தொண்ணூறு நாட்களில் பெரிய நடிகை யாகிவிடுவார்."

காயத்ரி:

(பிறந்த தேதி கூட்டு:1, பெயர் கூட்டு : 18, எண்களின் கூட்டு :2)

"இவருக்கும் நடிப்பதற்கு வாய்ப்புகளுண்டு. 11 வயதிலேயே நடிப்பதற்கான வாய்ப்புகள் கிடைத்து, மறைந்திருக்கின்றன.

பரிகாரம்: 120 நாட்கள் கழித்து இவர் நடிகையாகலாம், பெயர் மாற்றம் செய்த பிறகு."

(கே.பி.சார் இதைப் படிச்சார்னா, ஒரு புது சீரியலுக்கு ஐடியா வருமில்லே!)



• சரியாகுமா?

கடம் கார்த்திக்:

உடல் இளைக்குமா?

(பிறந்த தேதி கூட்டு:7, பெயர் கூட்டு: 29, எண்களின் கூட்டுத் :4)

"ஏழு, நான்கு என கேதுவும் ராகுவும் சேர்ந்திருப்பதால் உலகளாவிய புகழடைவார். வெறும் கார்த்திக் என்ற பெயரோடு இருந்திருந்தால் இவர் குண்டாகி இருக்க மாட்டார். 22 வயதானபோது கடம் கார்த்திக் என்ற பெயர் மாற்றத்தால் சந்திரனும், ராகுவும் இணைந்து நீர் உடம்பாகி விட்டது. 31 வயதிற்குப் பிறகு இது மேலும் தீவிரமாகும். இதே பெயர் நீடிக்குமானால் இவரால் இளைக்கவே முடியாது.

பரிகாரம்: பெயரே இவருக்கு மருந்து. தண்டால், பஸ்கி எதுவும் வேண்டாம். வேறு பொருத்தமான பெயர் சேர்த்தால் நூற்று இருபது நாட்களில் இவரது உடல் இளைத்து விடும்."

(அலுங்காம நலுங்காம வழி சொல்றாருப்பா!)



• சவால்!

- **செந்தில்**

படம் : **ராஜன்**



Nungambakkam Cultura

Regd. Office : "Om Dwaraka Enclave", Flat No : 3D, No : 64

35th Anniversary Celebrations & Fine Arts festival ***(4th***

(Karnataka Sangha) 111, Habbibullah Road, T.Nagar,

4.12.04	4.30 pm	Mangalaisai - Namagiripettai Murugan with Sendamangalam A Manigandan Special Thavil
Saturday	5.30 pm	Grand Inauguration of the Festival invocation by Dr. RadhaBhaskar. Presiding & Inauguration. Conferment of Titles : Sangeetha Kala Siromani Dr.M.Balamuralikrishna, Nirthya Kalasiromani Mrs. Anitha Ratnam, Natakakalasiromani Sri. Raadhu Felicitations Sri. A. Natarajan (Former Director - Chennai Doordharshan), Dr. Padma Subramanyam
	7.30 pm	Bharthanatyam Kum Bhavya Balasubramanian Desciple of Nirthya Kalasiromani Srekala Bharath
5.12.04	9.00 am	Gayathri Girish - Akkarai Sudha Lakshmi - B. Sivaraman - R.V.P. Balachandar
Sunday	11.00 am	Mahalakshmi Ladies Drama Troupe Presents "Naan Enna Saiyatum" by Bombay Gnanam
	5.00 pm	B. Rajam Iyer - R.K. Sriramkumar - Palagad Suresh - K.V.R.S. Mani - Ernakulam Ramakrishnan
	7.15 pm	P. Unnikrishnan, T.S. Subramanyan - Ganapatiram - Trivandrum Rajagopal
6.12.04	5.00 pm	Veena B. Kannan - Kudanthi Saravanan - Adambakkam Sankar - Papanasham Sedhuraman - R. Raman
Monday	7.15 p.m	Drama "Oor Vambu" - Evergreen Classical Family Comedy by Marina
7.12.04	5.00 pm	Geetha Rajasekar - Setthalai Sivakumar - Neyveli Skanda Subramanyan
Tuesday	7.15 pm	N.C. Soudaravalli - M.S. Anantharaman - Melakaveri Balaji - A.S. Murali
8.12.04	5.00 pm	Bharatanatyam Srimathy Disciple of K.J. Sarasa
Wed	6.00 pm	Bharatanatyam Srinidhi Sundar Disciple of Sarasa
	7.15 pm	Bharatanatyam Jayanthi Subramanyan Disciple of Adyar K. Lakshman
9.12.04	5.00 pm	Devotional Music - Film & Non-film on Veena by Kalaimamani Revathy Krishnan & party.
	7.15 pm	Mohani Attam by Gopika Varma.
10.12.04	5.00 pm	Violin Trio M.S. Anantaraman - M.A. Sundareswaran - M.A. Krishnaswamy - Rajarao - Vaikom Gopalakrishnan
Friday	7.15 pm	Neyveli Santhana Gopalan - Delhi Sundarrajan - Vellore Ramabadran - EM. Subramanyam
11.12.04	9.00 am	Sankari Krishnan - Badma Sankar - Kumbakonam Saravanan - Nanganallur Swaminathan
	11.00 am	Gurukulam the Original Boys Co. 95 Presents "Appa Vandar" by Madhavabhuvarga Murthy
	5.00 pm	Dr. R. Ganesh - Madurai S.Balasubramanyam - K.R.Ganesh
Saturday	7.15 pm	Kovai Padhu's Drama "Washingtonil Thirumanam" by Saavi
12.12.04	9.00 am	Nagammai Srinath - Kandadevi Vijayaraghavan - Mudhra Bashkar - Kartik
	11.00 am	Naataka Mandir Presents TV Fame Thillairajan in "Pathi Bhakthi" by Sri Rangam Rangamani
	5.00 pm	Flute Sikkil Neela Kunjumani & Mala - T.Rukmani - Mandhiramangalam Swaminathan - Pudhukottai N. Ramachandran
	7.15 pm	Dr. K.J. Jesudoss - Nagai Muralidharan K.V. Prasad - Vaikom Gopalakrishnan
13.12.04	5.00 pm	Bharthanatyam Shobana Ramesh Disciple of Dr. Saraswathi
Monday	7.15 pm	Sanjai Subramanyam - M.A. Sundareswaran - Arunprakash
14.12.04	5.00 pm	Priya Sisters - K. Sivaraman - Pallada Ravi - Madipakkam Murali
Tuesday	7.15 pm	Madurai T.N.S. Krishna - R.K. Sriram Kumar - T.K. Murthy - T.V. Vasan
15.12.04	5.00 pm	Violin Duet Lalkudi Krishnan & Viji - Trichy Sankaran, Vaikom Gopalakrishnan
Wed	7.15 pm	Odissy Dancers Sonal Mansing
16.12.04	5.00 pm	Violin Duet Kanyakumari - Embark Kannan - Mannarkudi A. Eswaran
Thursday	7.15 pm	T.V. Sankaranarayanan - Nagai Murali - Tiruvarur Bhakthavatchalam - V. Suresh
17.12.04	5.00 pm	Vipanchee Natyalaya Presence Dance - Drama "Jaishakthi"
	7.15 pm	T.M. Krishna - R.K. Sriram Kumar - K.V. Prasad - B.S. Purushothaam
18.12.04	9.00 am	Geetha Raja - Dr. R. Hemalatha - Thanjavur Subamanyam - Papanasam Sethuraman
	11.30 am	Kovai K.S. Krishnan Presents "Arubhadam Kalayanam"
	5.00 pm	U.P. Raju & Nagamani - Melakaveri Thyagarajan - B. Jayanth - B. Ravi
Saturyday	7.15 pm	Bharatanatyam Dr. Padma Subramanyam
19.12.04	9.00 am	Udayalur Kalayaraman Party - NAMASANKEERTHAN
	11.30 am	Bombay Chanakya's "Nirum Maarum Nijangal"
	5.00 pm	Bombay Sisters Saroja & Lalitha - Mysore V. Srikanth - Tanjore Subramanyam - H. Sivaramakrishnan
Sunday	7.15 pm	United Visuals Present T.V. Varadharajan & Nithya in "Kalakkra Chandru, Pramadham" by Venkat
20.12.04	5.00 pm	Katam Kartik's Heart Beat Ensemble
Monday	7.15 pm	S.Ve.Sekar's Drama "Mega Vasual"
21.12.04	5.00 pm	Veena Madurai T.N. Seshagopalan - Varadharajan - Guruvayur Dorai T.V. Vasan
Tuesday	7.15 pm	Flute Dr. N. Ramani - Manjunath - Mannargudi Eswaran - B.S. Purushotham
22.12.04	5.00 pm	Harikatha Kalyanapuram Arvamudachariar "Kulasekarar's Rama Anubhavam"
Wed	7.15 pm	Bharthanatyam Srekala Bharath
23.12.04	5.00 pm	Carnatic & Hindustani Jugalpandhi by Sriram Parasuram & Anuradha Sriram - Vital Ramamurthy - Tiruchur Narendran - Umakanth Pooranik - Gurumurthy Vaidhya
Thursday	7.15 pm	Xazaphone Kadri Gopalnath - A. Kanyakumari - Hariduvarmangalam Palanivel - Rajasekar
24.12.04	5.00 pm	Bharatanatyam Sulakshana Jayaram
Friday	7.15 pm	Kutchipudi Arts Academy Presents "Kiraapurajayeeam"

MANGALAM

Season Tickets Rs.3000/-, Rs.2500/-, Rs.2000/-, Rs.1500/-, Rs.1250/-, Rs.1000, Rs.700/-

Note : Besides the above programes there are afternoon programes everyday for which the admissic / Daily Tickets at hall 8.30 am to 8.30 pm daily from 1st December 2004 Canteen facility is available Dial : 2483 4823, 2480 5050, 2834 3252, 5538 1325 For booking details :

MJF Lion Dr. S. Nalli Kuppuswamy Chetti, *President* MJF Lion Dr. S. Natarajan, *General Secretary*

Academy Trust (Regd)


Ganapathy Street, West Mambalam, Chennai - 33. Dial : 2483 4823 / 2480 5050 / 5538 1325

December 2004 to 10th January 2005) Venue : Rama Rao Kala Mantap A/c Auditorium,
Chennai - 600 017.

25.12.04	9.00 am	Jalatharangam Anayanpatti S. Ganesan - Anayanpatti G. Venkata subramaniyam - Thanjavur S. Subramanyam - N. Guruprasad
	11.30 am	Kathady's Ramamurthy Presents "Honey Moon Couple" by Crazy Mohan
Saturday	5.00 pm	Dr. Srekazhi Sivasidambaram - Parthasarathy - G. Saikrishnan - J. Ramdoss - Sowrirajan - K. Makesh
Christmas	7.15 pm	Bharatanatyam Anitha Ratnam & Sri Bharathalaya Spatika Produced by K.S.R. Anirudha
26.12.04	9.00 am	Vijayalakshmi Subramaniyam - V.V. Ganesh Prasad - J. Balaji - Adambakkam Sankar - RVP Balachandar
Sunday	11.30 am	Drama "Masala Mamiyar" by Radhu
	5.00 pm	Violin Duet M.S. Gopalakrishnan Dr. M. Narmada - Vaikom Gopalakrishnan - Neyveli Narayanan - Vaikom Gopalakrishnan
	7.15 pm	Krishnakumari Narendran Presents "Sri Maha Ganapathy" (Multimedia Presentation)
27.12.04	5.00 pm	Bharatanatyam Kavitha Ramu Disciple of K.J. Sarasa
Monday	7.15 pm	O.S. Thyagarajan - V.V. Ravi - Umayalpuram Sivaraman - V. Suresh
28.12.04	5.00 pm	Bharatanatyam Gayathri Rajasekar Disciple of Sobhana Balachandra
Tuesday	6.00 pm	Bharatanatyam Mathura Vishwanathan Disciple of A. Lakshman
	7.15 pm	Violin Solo Kunnakudi Vaidhyanathan & Party
29.12.04	5.00 pm	Bharatanatyam by Disciple of Swaminathan
Wed	6.00 pm	Bharatanatyam Bargavi Gopalan Disciple of K.J. Sarasa
	7.15 pm	Hyderabad Bros. Sriram Murthy - Peri Sriram Murthy - Srimushnam Rajarao
30.12.04	5.00 pm	Madurai T.N. Seshagopalan - Delhi Sundarrajan - Dr. T.K. Murthy - T.V. Vasan
Thursday	7.15 pm	Bharatanatyam Revathy Ramachandran
31.12.04	5.00 pm	Bharatanatyam Padmini Krishnamurthy & Disciples Taarika Chaitra Sridhar, Deepika Ramachandran
Friday	7.15 pm	Bharatanatyam "Krishnaarparnam" - Dance Drama by Saroja Vaidyanathan & her students
1.1.05	8.30 am	"Sarvam Subramanyam" - A musical picture by Kousalya Sivakumar & Party
Saturday	10.00 am	Nirmala Ramachandras sings Padams & Javalis
Newyear	11.30 am	Crazy Mohan Drama "Maadi Mel Madhu"
	5.00 pm	Vichitra Veena Ravikriran (Vocal) - V.V. Ravi - K.V. Prasad - B.S. Purushothaman
	7.15 pm	Dr. M.Balamuralikrishna - B.S. Ragavendra Rao - Umayalpuram Sivaraman
2.1.05	9.00 am	Musical Demonstration by Prof. T.R. Subramaniyam "A Rational Approach to Manodharma Sangitha"
Sunday	11.30 am	Drama Amirtham Gopal "Antha Naal Vanthathu" Augusto
	4.30 pm	Hindustani Recital Mala Ramadurai & Party
	6.15 pm	Bharatanatyam Dr. Prabhukumari Vanama
	7.30 pm	Cracy Mohan Drama "Madhu +2"
3.1.05	5.00 pm	Dance K. Subha Lakshmi Disciple of Kalaimamani Ranganayaki Jayaraman
Monday	6.00 pm	Bharatanatyam Anupama Aranaprasad
	7.30 pm	Aruna Sairam - M.A. Krishnasamy - Thanjavur Murugabhupathy - Guru Prasad
4.1.05	4.30 pm	Maharajanpuram Srinivasan - M.R. Gopinath - Thanjavur Kumar
Tuesday	6.15 pm	Bharatanatyam Meenakshmi Srinivasan
	7.30 pm	Bharatanatyam Hema Sripal Disciple of K.J. Sarasa
5.1.05	4.30 pm	Vasundra Rajagopal - Ambika Prasad - Nellai Balaji - N. Rajaraman
Wed	6.15 pm	Bharatanatyam Malavika Disciple of Meenakshi Chitranjan
	7.30 pm	Kuchipudy Natyamayuri Karthiyayani
6.1.05	5.00 pm	Bharatanatyam Priyadharshini Disciple of K.J. Sarasa
Thursday	6.15 pm	Bharatanatyam Yashini Sankari & Ramya Ravi Disciple of Lataravi
	7.30 pm	Sudharaghunathan Pakalaramdass - Neyveli Skanda Subramanyam - Raman
7.1.05	4.30 pm	Suganthan Kalamegam - Kandadevi - Vijayaraghavan - Mudhra Bhaskar - A.S. Sankar
Friday	6.15 pm	Bharatanatyam Mathangi Ravishankar
	7.30 pm	Bharatanatyam Natya Manjari Students "Dhasavatharam" Disciple of Udipi Lakshmi Narayan & Madhumathi Prakash
8.1.05	9.00 am	Kunrathilay Ooru Kuleer Nilavu - Isai Chitiram by Kalayapuram R. Veeraraghavan
Saturday	11.30 am	Sathya Sai Creations Mappilai Ganesh in "Krishna Jayanthi" by Kaaraikudi Narayanan
	4.30 pm	Dr.Radha Bhashkar Melakkaveri Thyagarajan - Mudhra Bhaskar
	6.15 pm	Bharatanatyam Sangeetha Pasupathy Disciple of Subhashini Chandrasekaran
	7.30 pm	Drama Kalailayam "Olirum India"
9.1.05	9.00 am	Traditional, Classical Music & Film Songs Trichy Gurunathan & Party
	11.30 am	Y.Gee. Mahindra's Drama "Upadesam Saivathu U A A"
	4.30 pm	Lakshmi Rangarajan - Akkarai Subhulakshmi - Manoj Siva
Sunday	6.15 pm	Bharatanatyam S. Dhivya & S.Darshana Disciple of Revathi Ramachandran
	7.30 pm	Drama Y.Gee. Mahendra "Kadhalika Neeram Undoo"
10.1.05	4.30 pm	Somasekar & Party
Monday	6.15 pm	Bharatanatyam Priya Mohan Disciple of Sudharani Raghupathy
	7.30 pm	Bharatanatyam Divya Kashduri

is free. Admission is also free for morning programes except Dramas. Advance booking for seasons

Shri R. Krishnasamy, *Vice president* Shri S. Venkataraman, *Joint Secretary* Shri R.V. Ramachandran, *Treasurer*



பகவான் ஒரு யக்ஞம் பண்ணுகிறான்! அதிலே ரித்விக்குகளெல்லாம் யார்...?

ரித்விக்குகள் என்றால் யக்ஞத்தை நடத்தி வைப்பவர்கள். அத்வர்யு, ஹோதா, பிரும்மா, உத்காதா, அக்னீதரன், அர்ச்சாவாகன், மைத்ரா வருணன் என்று ரித்விக்குகள் பலர் யக்ஞத்திலே உண்டு. அந்த மாதிரி இங்கே பகவானுக்கு யார் ரித்விக்குகள் என்றால், கருணை முதலான குணங்களே ரித்விக்குகள்.

காருண்யம் என்கிற குணம் ரித்விக்காக இருந்து யக்ஞத்தை நடத்துகிறது. விசேஷமாக பல குணங்கள்... பல்வேறு ரித்விக்குகளாய் அமர்கின்றன. வாத்ஸல்யம், ஸௌசீல்யம், ஸௌலப்யம் முதலான காருண்யம் முதலான குணங்களைக் கொண்டு ரக்ஷித்து, உயர்ந்த கதியைக் கொடுக்கிறான்.

இப்படிப்பட்ட உத்தமமான குணங்கள் பகவானிடத்திலே இல்லையானால், நம்மால் அவனை ஆச்ரயிக்க முடியுமா? அவன் நம்மை அனுக்ரஹிப்பானா? தயை என்ற குணம் இல்லாவிடில் எவ்வாறு நாம் அவனிடம் நெருங்க முடியும்? எண்ணத்தைச் சொல்ல முடியும்? உத்தமமான 'தயா' என்ற குணத்தினாலேயேதான், அவன் அனைத்தையுமே பரிபாலனம் பண்ணுகிறான்.

கூரத்தாழ்வார் என்ற மகான் அழகாகச் சொல்லுகிறார்:

''உலகத்திலே நல்ல குணங்கள் ஒருத்தரிடத்திலே இருந்தால், அந்த குணங்களினால் அவருக்கும் பெருமை

குறையொன்றுமில்லை



ஏற்படும். ஆனால் இங்கே விஷயம் மாறி இருக்கிறது. பகவானை அடைந்ததனாலே இந்த குணங்களெல்லாம் பெருமை அடைகின்றன. ஸௌசீல்ய, ஸௌலப்யாதி குணங்களெல்லாம் உயர்ந்து விளங்குகின்றன...'' என்று கொண்டாடுகிறார்.

குணங்கள், ஹோதாவாகவும் உத்காதாவாகவும் இருந்து யக்ஞத்தை நடத்தி வைக்கின்றன.


யார் யார் வந்து இந்த யக்ஞத்தை அறிந்து, பகவான் சரணாகதி ரக்ஷணம் பண்ணுகிறான் என்று அந்த யக்ஞத்திலே கலந்து கொள்கிறார்களோ, அத்தனை பேருக்கும், மோக்ஷமாகிற உயர்ந்த தக்ஷிணையை பகவான் கையிலே கொடுக்கிறான்.

யக்ஞத்திலே எல்லோருக்கும் தக்ஷிணை தரவேண்டும் என்கிறது சாஸ்திரம். வரக்கூடிய யாராயிருந்தாலும் தக்ஷிணை... அதே மாதிரிதான் பகவான் நமக்காக நடத்தும் சரணாக ரக்ஷண யக்ஞத்துக்குச் சென்று, நாம் அவன் திருவடியைப் பற்றினோமானால், அவன் இந்தக்

இந்த குணப்பிரயுக்தமான திருநாமங்களின் ஏற்றத்தைத்தான் நாம் பார்த்துக் கொண்டே வருகிறோம். ஸஹஸ்ர நாமமானது விசேஷ அர்த்த புஷ்டியுடன் நினைக்குந்தோறும், பல விசேஷ அர்த்தங்களைக் காட்டக் கூடியதாகவும், உயர்ந்த கிரந்தமாக இருப்பதனாலே, இதற்கு விசேஷமான அர்த்த கௌரவமும் விசேஷமாக அமைந்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

6 ஏழாம் பாகம்




திருக்கிறது.

பகவானே பாடுபொருளாக இருப்பதனாலேயும், பாடுவதைக் கேட்பவனும் பகவானே என்பதனாலேயும், சஹஸ்ர நாமத்தைக் கேட்பவனும் ரக்ஷிக்கப்படுகிறான்.

முதல் மூன்று சுலோகங்களும் சஹஸ்ரநாமத்திலே மிகவும் ஏற்ற முடையவை. மற்ற திருநாமங்கள் எல்லாம் இந்த மூன்று சுலோகங் களின் விவரணம்தான்:

விச்வம் விஷ்ணுர் -
வஷட்காரோ
பூத - பவ்யபவத்ப்ரபு:
பூதக்ருத் - பூதப்ருத்-
பாவோ பூதாத்மா
பூதபாவன:





பூதாத்மா பரமாத்மாச
முக்தானாம் பரமாகதி:
அவ்யய: புருஷ: ஸாக்ஷீ
க்ஷேத்ரஜ்ஞோ க்ஷர ஏவச
யோகோ யோகவிதாம்நேதா
ப்ரதான - புருஷேச்வர:
நாரஸிம்ஹவபு: ஸ்ரீமான் கேசவ:
புருஷோத்தம:

- இந்த மூன்று சுலோகங்கள் மூன்று வாக்கியங்களுடைய பொருளாய் இருக்கக் கூடியவை. இவற்றுள் முதல் சுலோகத்தில் ஒன்பது திருநாமங்கள் இருக்கின்றன. இரண்டாவது சுலோகத்தில் எட்டு திருநாமங்கள். மூன்றாவது சுலோகத்தில் ஏழு திருநாமங்கள். 9 - 8 - 7 மூன்றையும் கூட்டினால் இருபத்திநான்கு திருநாமங்கள்.

இருபத்திநான்கு அக்ஷரங்களுடைய காயத்ரி மஹாமந்திரத்தை விளக்கக் கூடியதாக, இந்த இருபத்திநான்கு திருநாமங்கள் அமைந்திருக்கின்றன.

காயத்ரி மந்திரத்தை 'காயத்ரி சந்தஸாம் மாதா' என்று விசேஷமாக ஸ்தோத்திரம் பண்ணியிருக்கிறது.

சுஸ்வரமாக இதை யார் கானம் பண்ணுகிறார்களோ, அப்படிப்பட்டவர்களை இது ரக்ஷிப்பதனாலே இதற்கு காயத்ரி என்று பெயர். நல்ல முறையிலே உச்சரிக்கக் கூடியவர்களை இது ரக்ஷிக்கிறது.

'சந்தஸாம் மாதா' என்றால் சந்தஸுகளுக்குள் அன்னை எத்தனையோ சந்தஸ்ஸுகள் உண்டு விராட் சந்தஸ், அனுஷ்டுப் சந்தஸ்... ஒவ்வொரு சந்தஸுக்கும் ஒவ்வொரு எண்ணிக்கையில் அக்ஷரங்கள் அமைந்திருக்கும். எல்லா சந்தஸ்ஸுக்கும் மாதாவாய் - அம்மாவாக இருக்கக் கூடியது காயத்ரி.

எதனாலே இது அந்த மாதா ஸ்தானத்தைப் பெற்றது என்று பார்த்தோமானால், மூன்று வேதங்களுடைய ஸாரமாக இருக்கக் கூடியது காயத்ரி. எல்லா மந்திரங்களும் காயத்ரிக்குள்ளே அடக்கம்; காயத்ரி வியாக்ருதிக்குள்ளே அடக்கம்; வியாக்ருதி பிரணவத்துக்குள்ளே அடக்கம். பிரணவம் என்றால் 'ஓம்' என்கிற ஒலி. வேதம் அனைத்துக்கும் வித்து ஓம்காரம்.

ஓம்காரத்தை விவரித்தால், வியாக்ருதி - பூர்பு வஸ்ஸுவ: - இது வியாக்ருதி மந்திரம். இதை விவரித்தால் காயத்ரி, காயத்ரியை விவரித்தால் எல்லா வேத மந்திரங்களும்.

பூர்வ காலத்தில் மஹரிஷிகள் ரிக் வேத மந்திரங்களையெல்லாம் தொகுத்தார்கள். ரிக் வேதம் என்பது முதல் வேதம். அதன் மந்திரங்கள் எல்லாம் மண்டலம் மண்டலமாக இருக்கும். அப்படிப்பட்ட மந்திரங்களையெல்லாம் சேர்த்து கடைந்து எடுத்தார்கள் ரிஷிகள். அவை விசேஷமாக எட்டு அக்ஷரத்திலே வந்து நின்றன. அவ்வளவு அக்ஷரங்களும் எட்டே அக்ஷரங்களாகச் சுருங்கிவிட்டன.

அதே போல் மிகவும் கடினமாய், உயர்ந்ததாக இருக்கும்படியான கடினமான யஜுர்வேதம், சின்னச் சின்ன பதங்கள் சேர்கிறபோது, ரொம்பக் கஷ்டமாக இருக்கும் சொல்வதற்கு. அதிலே பெரிய பெரிய பதங்கள் எல்லாம்

சுறுசுறு குறும்படம்!

குறும்படங்களின் ஆயுள் எப்போதுமே அற்பம்தான். ஆனால், ஆனந்த் இயக்கியிருக்கும் 'நோ எக்ஸிட்' மட்டும் விதிவிலக்கு. அமெரிக்க நுகர்வுக் கலாசாரத்தின் நடப்பு நிலவரத்தை, ஒரே ஒரு போன்கால் மூலம் நெத்தியடியாகச் சொல்லும் இந்த ஏழு நிமிடக் குறும்படம், உலகம் முழுக்கப் பதினைந்து நாடுகளில் வெற்றிகரமாக வலம் வந்திருக்கிறது. தற்போது நியூயார்க், லாஸ்ஏஞ்சல்ஸ், நேப்பல்ஸ் சர்வதேசப் பட விழாக்களுக்கு அதிகாரபூர்வமாக தேர்வு பெற்றிருக்கும் நோ எக்ஸிட்டை பார்த்துப் பாராட்டியிருக்கிறார் மணிரத்னம். கோடம்பாக்கத்தில் தமிழ்ப் படம் இயக்குவதை லட்சியமாக வைத்திருக்கும் ஆனந்துக்கு, இப்போது ஹாலிவுட்டிலேயே வாய்ப்புக் கிடைத்துவிட்டது. கணினி பொறியாளர் பணியை உதறிவிட்டு, கேமரா பிடித்திருக்கிறார், இந்த காரைக்குடி தமிழ் இளைஞர். இன்னொரு ஷ்யாமளன்?

- ஜெ

வரும். சின்னச் சின்ன பதங்களும் வரும். உதாரணமாக 'பிராகு', 'அபாகு', 'உதகு', 'அதராகு' என்ற சத்தங்கள் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று நான்கு திக்குகளைக் குறிக்கும். இதையே கனம் சொல்கிற போது, சேர்த்துச் சேர்த்துச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்கிறபோது என்னென்ன சத்தங்கள் சேர்கின்றன என்று கண்டுபிடிக்கவே முடியாமல், உகாரமும் அகாரமும் இழைந்து ஒலிக்கும். இப்படி இழைகிற யஜுர் வேதமானது மிகவும் கடினமான சப்தலாவித்யத்தோடு (ஓசை அழகோடு) கூடிய வான்மயம். அப்படிப்பட்ட யஜுர் வேதத்தைப் போட்டு மஹரிஷிகள் கடைந்தபோது, அதிலிருந்து எட்டு அக்ஷரங்கள் தோன்றின. அதே மாதிரி, ஸாம வேதம். 'வேதங்களுக்குள்ளே ஸாம வேதமாய் நான் இருக்கிறேன்' என்கிறான் பகவான். அப்படிப்பட்ட ஸாமவேதத்தைக் கடைந்த போதும் அதிலிருந்து எட்டு அக்ஷரங்கள் தோன்றின.

வேதங்கள் மூன்றைச் சொன்னாலே அதர்வண வேதமும் சொல்லப்பட்டதாகி, விடுகிறது. ஆனதனாலே மூன்று வேதங்களில் பிறந்த அக்ஷரங்கள் 3x8=24 இதுதான். காயத்ரி மந்திரம். வேத மந்திரங்கள் அனைத்தும் காயத்ரியாக, இருபத்திநான்கு அக்ஷரங்கள் கொண்ட விழுப்பொருளாக வந்தது.

இதை மேலும் சுருக்கினார்கள் மஹரிஷிகள். அந்த விவரத்தை அதர்வண வேதம் அழகாகச் சொல்கிறது.

ரிக் வேத சாரத்திலிருந்து பூ:, யஜுர் வேதத்திலிருந்து புவ:, ஸாம வேதத்திலிருந்து ஸுவ: என்கிற வியாக்ருதி மந்திரமானது தோன்றியது.


இதையும் மேலும் சுருக்கினார்கள்... அப்படிச் சுருக்கியதில் அ-உ-ம என்ற அக்ஷரங்கள் தோன்றின. இது அஸம்ஹிதாகாரம்- அதாவது பிரித்துச் சொல்லுதல்.

வேதம் சொல்கிறபோது ஸம்ஹிதை என்பது சேர்த்துச் சேர்த்து, கோத்துக் கோத்து முற்றுப்பெறாத நீள நீள ஒற்றை வாக்கியமாக இருக்கும். சொல்கிறபோது, நாமாக எங்காவது நடுவிலே மூச்சுவிட்டால் தான் உண்டு. அவ்வளவு நீளம்! வாக்கியத்துக்கு முடிவே இராது! நாற்பத்திமூன்று பதங்களைச் சேர்த்து ஒரே வாக்கியமாக, பஞ்சாதி சொல்லலாம். இன்னும் பெரிய பெரிய பஞ்சாதிகளெல்லாம் உண்டு.

ரொம்பக் கஷ்டப்பட்டு தான் அதை தரிக்க முடியும்.

அஸம்ஹிதை என்பது அ - உ -ம என்று அக்ஷரங்களைப் பிரித்துச் சொல்வது; இதையே சேர்த்து ஸம்ஹிதையாகச் சொல்கிறபோது, 'ஓம்' கிடைக்கிறது. மூன்று மாத்திரை அளவில் இந்தப் பிரணவமாகிற ஒற்றை எழுத்தைச் சொன்னால், நல்ல ஞானம் - பகவானைக் குறித்த சிறப்பு ஞானம் நமக்கு ஏற்படும். அதையே இரண்டு மாத்திரை காலத்துக்கு உச்சரித்தால், பூவுலக ஐச்வர்யங்களையெல்லாம் நாம் அடைவோம்.

(தொடரும்)





• 'நோ எக்ஸிட்' படத்தில் கதாநாயகியுடன் ஆனந்த்



சேனல் வார்!

ராஜ் தொலைக்காட்சியின் டெலிபோர்ட் உரிமத்தை மத்திய அரசின் தகவல் - தொலைத் தொடர்புத் துறை ரத்து செய்து விட்டது. இதன் காரணமாக தொலைக்காட்சியின் செய்திப் பிரிவைச் சேர்ந்த பல ஊழியர்கள், வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ராஜ் தொலைக்காட்சி தொடர்ந்து தனது ஒளிபரப்பினை வழங்கிக் கொண்டிருக்கும் நிலையில், செய்திப் பிரிவுக்கு மட்டும் என்ன ஆயிற்று?

'டெலிபோர்ட்' என்பது ஒளிப்பதிவு செய்யும் ஸ்டுடியோவிலிருந்து நேரடியாக செயற்கைக்கோளுக்கு அனுப்பும் வசதியைக் குறிப்பது. இந்த வகையில் தேனாம்பேட்டையில் உள்ள ராஜ் தொலைக்காட்சி ஸ்டுடியோவிலிருந்து, தினசரி இரவு ஏழரை மணி வாக்கில் நேரடியாகச் செய்திகளும், பதிவு செய்யப்பட்ட மற்ற நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பப்பட்டு வந்தன. மற்ற நிகழ்ச்சிகளைப் போல செய்தி ஒளிபரப்பைச் செய்ய முடியாது. செய்திகளை சரம், சரமாகவும் மற்றவர்களுக்கு முன்பாகவும் தர வேண்டும். நேரடி ஒளிபரப்பின் மூலம்தான் அது சாத்தியம். இது இல்லாத நிலையில், செய்திப்பிரிவுக்கு ஆபத்து வந்துவிட்டது. ஊசலாடுகிறார்கள் ஊழியர்கள்.




• ஜெயசீலன்

"நிர்வாகத்துக்கும் மத்திய அரசுக்கும் இடையே உள்ள பிரச்னைகளுக்குள் நுழைய நாங்கள் விரும்பவில்லை. இந்தத் துறையில் வேலை வாய்ப்புகள் மிகக் குறைவு. நாங்கள் வெளியே அனுப்பப்பட்டால் எங்கள் எதிர்காலம் இருண்டதாகிவிடும். ஊழியர்களின் எதிர்காலத்தை மனத்தில் கொண்டு, டெலிபோர்ட் உரிமத்தை மீண்டும் மத்திய அரசு வழங்க வேண்டும்" என்கிறார் செய்தி ஆசிரியர் ஜெயசீலன்.

ராஜ் டி.வியின் டெலிபோர்ட் உரிமம் செப்டம்பர், 2003ல் காலாவதியாகிவிட்டது. ஆனால், அதைப் புதுப்பிக்க மனுப் போடுவதில் கால தாமதமாகிவிட்டது. "புதிய, வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தைக் கையாளும் இந்தத் துறையில் இன்னமும் சரியான நெறிமுறைகளையும், தெளிவான சட்டங்களையும் அரசால் ஏற்படுத்த முடியவில்லை. தவறு நடந்திருக்கிறது. அதற்கு தண்டனை என்னவென்று சொல்லுங்கள். அபராதம் வேண்டுமானாலும் கட்டி விடுகிறோம். அதை விட்டுவிட்டு, உரிமத்தை ரத்து செய்தால் எப்படி?" என்று கேட்கிறது ராஜ் டி.வி நிர்வாகம். இப்போது தொலைத் தொடர்பை முறைப்படுத்தும் குழுமத்தின் முன் நிலுவையில் இருக்கிறது விவகாரம்.

"இது வெறும் நிர்வாகம் தொடர்பான பிரச்னை மட்டுமல்ல. சேனல்கள் இடையே உள்ள போட்டி காரணமாகவும், ராஜ் தொலைக்காட்சி பலிகடா ஆக்கப்பட்டு விட்டது. கடந்த பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் இதன் நிர்வாக இயக்குநர் பா.ஜ.கவில் சேர்ந்ததுகூட இத் தொலைக்காட்சிக்கு எதிரான வாதமாக ஆளும் கூட்டணிக் கட்சிகளால் முன் வைக்கப்படுகிறது" என்று விமர்சனங்கள் கிளம்பியுள்ளன.

- ஸ்ரீநி



அக்னிசர்மா பக்கம்

நடக்குமென்பார் நடக்கும்!

டிசம்பர் 8 முதல் 14 வரை

மேஷம்: வெற்றியையே பார்த்துக்கிட்டிருந்தா சுவாரஸ்யம் இருக்காதுங்க. அப்பப்போ கொஞ்சம் தோல்விகளையும் சந்திச்சாத்தான், ஒரு வேகம் பிறக்கும். இந்த வாரம் அப்படித் தாங்க. எடுத்த காரியங்கள்ல தடைகள், தாமதம்னு இருந்தாலும் கடைசியில நல்லதாகவே முடியும். தொழில், வியாபாரத்தில் இருக்கிறவங்களுக்கு கொடுக்கல், வாங்கல்லயும், பொருளாதார நிலையிலேயும் அனுகூலம் உண்டாகும். குரு பலன் பூரணமா இருக்கிறதால குடும்பத்தில சுப காரிய முயற்சிகள் ஈடேறும். பெண்கள் ஆரோக்கியத்தில கவனமா இருப்பது நல்லது.

ரிஷபம்: உங்க துணிவும் பலமும் கூடி காரியங்களைச் சாதிக்கிற நேரங்க இது. பெரியவங்க ஆசிதான் உங்க பெரிய பலம். அதைத் தவிர்த்துடாதீங்க. உத்தியோகத்தில ஒரு சிறப்பான திருப்பம் காத்திருக்கு. தொழில் வியாபாரம்னு இருக்கிறவங்க எதிர்பார்த்த நிதி உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில நெருக்கடி மறைஞ்சு, நிம்மதியும் சந்தோஷமும் நிலவும். உடன் பிறந்த மூத்தவர்கள் மூலம் பெண்களுக்கு அனுகூலம் கிட்டும்.

மிதுனம்: உங்க தன்னம்பிக்கையும், துணிவும் கூடி காரியங்கள்ல உதவும். ஆபீஸ்ல அனுகூலமான திருப்பம் ஒண்ணு காத்திருக்கு. தொழில் வியாபாரம்னு ஈடுபடறவங்க பண விஷயத்தில எச்சரிக்கையா இருங்க. குடும்பத்தில சில பிரச்னைகள், கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு மறையும். எதிர்பாராத செலவுகள் சில காத்திருக்கு. பெண்களுக்கு எண்ணம் போல எல்லாம் நடக்கும்.

கடகம்: உங்க தெய்வபலம் கூடியிருக்கிறதால எடுத்த காரியங்களில் வெற்றியும், விஐபிக்கள் ஆதரவும் ஏற்படும். பொருளாதாரப் பிரச்னைகள் கொஞ்சம் தலை தூக்கும். இதுவரை கவனிக்கப்படாத உங்க கோரிக்கைகள் ஈடேறும். புதிய முயற்சிகளேதும் இருந்தா, கொஞ்சம் தள்ளிப் போடுங்க. கூட்டுத் தொழில்ல இருக்கிறவங்களுக்குச் சில பிரச்னைகள் ஏற்படும்.



எச்சரிக்கையா இருங்க. ஒருமுறைக்குப் பலமுறை சிந்தித்து செயல்படுங்க. குடும்பத்தில சஞ்சலம் மறைஞ்சு குதூகலம் நிறையும். சுபமங்கள காரியம் ஈடேறும்.

சிம்மம்: மத்தவங்க ரொம்பக் கஷ்ட



மான வேலைன்னு முடியாம விட்டுட்ட வேலைகள் எல்லாம் உங்க திறமையால முடிஞ்சு உங்களுக்கு மதிப்பும், பாராட்டும் தேடித்தரும். தெய்வீக ஈடுபாடு கூடும். பிரார்த்தனைகள் ஈடேறும். உங்க மேல அதிர்ஷ்டதேவதையின் பார்வை பூரணமா விழுந்திருக்கு. வர வேண்டிய பணம் வந்து சேரும். வெளிநாட்டுத் தொடர்பு அனுகூலம் தரும். குடும்பத்தில ஒரு சுப நிகழ்ச்சி கண்டிப்பா நடக்கும். பெண்களுக்கு சிறப்பான வாரம்.

கன்னி: சுக்கிரன் 11ம் தேதி இடம் மாறி உங்க அனுகூலங்களைக் கூட்டி நன்மைகளைச் செய்ய வர்றதால, திட்டமிட்டபடி உங்க காரியங்களெல்லாம் ஈடேறும். ஆபீஸ்ல அனுகூலக்காற்று உங்க பக்கமா வீசும். வாகனம், ஃபர்னிச்சர், ஜவுளி தொழில்கள்ல இருக்கிறவங்களுக்கு லாபம் கூடும். குடும்பத்தில நிம்மதி கூடும். பெண்களுக்கு புதிய பொருள் சேர்ந்து மகிழ்ச்சி தரும்.

துலாம்: உங்ககிட்ட ஒரு காந்த சக்தி இருக்குங்க. அது இன்னும் அதிகமாகி எல்லாரையும் உங்களுக்கு அனுகூலமா நடக்க வைக்கும். எதிர்பாராத பயணம் ஒண்ணு காத்திருக்கு. பெரியவங்களோட நம்பிக்கை உங்க மேல அதிகமாகும். தொழில், வியாபாரத்தில பழைய கடன்கள் மறைஞ்சு, தொல்லைகள் குறையும். கூட்டுத் தொழில்ல எதிர்பாராத திருப்பங்கள் நேரும். குடும்பத்தில சிறு பிரச்னைகள் காத்திருக்கு, கவனமா இருங்க. பெண்களுக்கு எண்ணம் ஈடேறும்.

விருச்சிகம்: உங்க தெம்பும், உற்சாகமும் கூடி நம்பிக்கையோட செயல்படற நேரங்க இது. பண நடமாட்டம் தாராளமா இருக்கும். உத்தியோகத்தில எதிர்பாராத அனுகூலமான திருப்பம் ஏற்படும். புதிய முயற்சி வெற்றி தரும். தொழில், வியாபாரம்னு இருக்கிறவங்க பழைய கடன்களைத் தீர்த்து நிம்மதி பெறுவாங்க. புதிய தொழில் முயற்சி வெற்றி தேடித் தரும். குடும்பத்தில மகிழ்ச்சி நிலவும். திருமணம், மக்கட்பேறுன்னு சுப காரியங்கள் சந்தோஷம் தரும். சொத்து, வீடு பொருள் சேர்க்கைக்கான யோகம் சிலருக்குக் கைகூடும். பெண்களுக்கு அதிர்ஷ்டமான வாரம்.

தனுசு: உங்க ராசிக்கான கிரகங்கள் சாதகமாக சூழ்நிலைகளை உருவாக்கி, உங்களுக்காக வெற்றிகளைக் காத்திருக்க வைச்சுருக்கு. கொஞ்சம் அலைச்சல் இருந்தாலும் எல்லாம் நன்மையாகவே முடியும். குரு பகவான் உங்க பக்கம் நிக்கிறதால அதிர்ஷ்டமான திருப்பங்கள் நேரும். தொழில், வியாபாரங்கள்ல ஆரம்பத்தில



பரிகாரம்!

பத்துப் பொருத்தங்களையும் பார்த்துப் பார்த்துப் பண்ணி வைத்தாலும் கணவன் - மனைவிக்கிடையே அன்பும், அனுசரணையும் அமைந்து விடுகிறதா என்ன? உள்ளுக்குள் வருத்தமும், குறைகளுமிருந்தாலும், பெற்றவர்களுக்காக, குழந்தைகளுக்காக என்று குடும்பம் நடத்துபவர் எத்தனை பேர்? சொன்னாலும் வெட்கம், சொல்லாவிட்டால் துக்கம் என்று மனசுக்குள்ளேயே வருத்தங்களைப் புதைத்து வாழ்க்கையில் வாடிக் கொண்டிருப்பவர்களுக்கு ஆறுதலும், சாந்தியும் தந்து, குறைகளைப் போக்குகிறார் திங்களூர் பெரியநாயகி சமேத கைலாயநாதர். இதே குறையோடு சந்திரன் வந்து வழிபட்டு, சாந்தி பெற்ற இந்தத் தலம் திருவையாறுக்கு மிக அருகில் இருக்கிறது. எந்த உறவுச் சிக்கலும் இங்கு வந்து வழிபட்டால் தீர்ந்து, மகிழ்ச்சி கிட்டுவது நிச்சயம்.

- வி

இருக்கிற சிரமம் வாரக் கடைசியில சரியாயிடும். குடும்பத்தில மகிழ்ச்சி நிலவும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். பெண்களுக்கு சுபச் செலவுகள் காத்திருக்கு.

மகரம்: உங்க அறிவாற்றல் கூடி மதிப்பும், பாராட்டும் வாங்கித் தர்ற நேரம்க இது. முக்கியமான திட்டங்கள் நினைச்சபடி நிறைவேறும். புதிய அறிமுகங்கள் சில கிடைக்கும். ஆபீஸ்ல நீங்கதான் முக்கியமானவராயிடுவீங்க. புதிய முயற்சிகள் வெற்றி பெறும். தோல், பொருள்கள், எண்ணெய் வகை, கெமிக்கல்ஸ், மருத்துவம் தொழில்கள்ல ஆதாயம் கூடும். குடும்பத்தில் புது வீடு, வாகன யோகம், சொத்து என்று மகிழ்ச்சி கூடும். பெண்கள் எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும்.


கும்பம்: உங்க பொருளாதாரம் குரு பார்வையால ஓகோன்னு உயர்ந்து தெம்பையும், உற்சாகத்தையும் கூட்டுற நேரங்க இது. புது அறிமுகங்களும் விஐபிக்கள் ஆதரவு பக்கபலமா இருக்கும். உங்க திறமையும், உழைப்பும் நல்ல பலனைத் தரும். ஆபீஸ்ல இதுவரை இருந்த குழப்பம், பிரச்னைகள் விலகி சிறப்பான முன்னேற்றம் கிட்டும். தொழில் வியாபாரம்னு இருக்கிறவங்களுக்கு முன்னேற்றமான நேரமா இருந்தாலும், யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போடறதில மட்டும் எச்சரிக்கையா இருங்க. குடும்பத்தில மக்களால் மகிழ்ச்சி, பிரார்த்தனை நிறைவேறல்னு குதூகலம் நிறையும். பெண்களுக்கு எண்ணப்படியே எல்லாம் நடக்கும்.

மீனம்: உங்க உழைப்பையும் திறமையையும் முறையா பயன்படுத்தி, மதிப்பும் அந்தஸ்தும் கூட்டிக்கிற வாரம் இது. காரியங்கள் எல்லாம் திட்டமிட்டபடி வெற்றி பெறும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும். புதிய முயற்சி வெற்றி பெறும். தொழில், வியாபாரம், கடல் வாணிபம் அபிவிருத்தி அடையும். டிராவல்ஸ், கெமிக்கல்ஸ், காண்ட்ராக்ட்ஸ் தொழில்கள் ஏற்றம் பெறும். குடும்பத்தில கருத்து வேறுபாடுகள் மறைந்து மகிழ்ச்சியும் ஒற்றுமையும் கூடும். பிரிந்தவர்கள் ஒண்ணு சேருவார்கள்.



ஆசிரியர் பக்கம்

ஜெயேந்திரர் வழக்கு: மீடியா வாயை யார் மூடுவது?



ஒரு வழக்கு தொடரப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பான பல மனுக்கள் விசாரணையில் இருக்கும்போது, அந்த வழக்கு தொடர்பாக எந்தவிதமான கருத்தையும் வெளியிடுவது குற்றமாகும். இதனை sub judice என்பர். ஆனால், ஜெயேந்திரர் விஷயத்திலே அவரைக் குற்றவாளியாகவே சித்திரித்து செய்தி மேல் செய்தி வெளியிடப்படுகிறது! புலனாய்வு என்ற பெயரில் அநாகரிகங்களுக்கு ஒரு எல்லையே இல்லாமல் போய்விட்டது!

வெளியாகின்ற செய்திகளின் தரம் மிகக் கேவலமாக இருக்கின்றன என்பதை உலகமே அறியும். அவற்றுக்கான ஆதாரம் என்ன? ஒரு கொச்சையான செய்தியை 'என்கிறார்கள்', 'சொல்லப்படுகிறது', 'தந்தார்களாம்', 'வந்தார்களாம்' என்று உறுதிப்படுத்தாமல் எழுத வேண்டியது. அதற்கான போஸ்டர் விளம்பரத்தை மட்டும், ஏதோ போலீஸுக்கு மேலாக, பத்திரிகைகள் ஆதாரங்களைத் திரட்டி விட்டதுபோல் உறுதிபடச் செய்ய வேண்டியது! இன்றைய பத்திரிகை உலகின் 'எக்ஸ்' ரேடட் 'இன்வெஸ்டிகேடிவ் ரிப்போர்ட்டிங்' இதுதான்! இந்தப் 'புலனாய்வு' பிதற்றலில் சில வார்த்தைகளுக்கு ஒற்றை அடைப்புக்குறி தந்து, ஆபாச அர்த்தத்தைக் கூட்ட வேண்டியது.

பாலியல் குற்றச்சாட்டுகளைச் சரமாரியாகப் பொழியும் இந்தப் பத்திரிகைகள், பக்கத்துக்குப் பக்கம் பாலியல் உணர்வைத் தூண்டும் வக்கிரப் படங்களை வெளியிடுபவைதான்! இன்றைய 'பத்திரிகை தர்மம்' என்பது இந்தக் கேவலம்தான்!

நேற்றுவரை உயர்நிலையில் வைத்துக் கொண்டாடப்பட்ட ஒருவருக்கு - அவர் யாராயிருந்தால்தான் என்ன - ஒரு கேடு அல்லது துர்கதி வந்தால், டி.வி சானல்களுக்குத்தான் எத்தனை கொண்டாட்டம்! ஜெயேந்திரர் தமது முந்தைய ஜன்மங்களில் எப்படியெல்லாம் நடந்து கொண்டிருப்பார் என்பதைத்தான் இன்னும் இந்தச் சேனல்கள் தோண்டிப் பார்க்கவில்லை... அத்தனை தூரத்துக்கு அவரது கடந்த காலத்தை 'ஆராய்ந்து' ஒவ்வொரு விஷயத்தையும் பூதாகாரமாக்கிக் கொண்டிருக்கின்றன.

ஒரு வழக்கை அணுகும் காவல்துறையினர், பல்வேறு ஆதாரங்களைச் சேகரிக்க முயற்சி செய்வதில் வியப்பில்லை. ஆனால், அவர்களுடைய கண்டுபிடிப்புகள் அல்லது சந்தேகங்கள் யாவுமே சாட்சியமாகிவிட முடியாது. ஆனால், இன்று மீடியா அத்தனை சந்தேகங்களையும் ஆதார சாட்சியங்களாக்கி, தீர்ப்பே எழுதிக் கொண்டிருக்கிறது.

காவல்துறை மிக ஆரம்ப நிலையில் உள்ள சந்தேகங்களை, மீடியாவுக்குக் கசியவிட்டுக் கொண்டிருப்பதும் இதிலிருந்து தெரிய வருகிறது. புலனாய்வை அபாயத்துக்கு உட்படுத்துவதுடன், சமுதாயத்தில் சர்ச்சையும், குழப்பமும், பீதியும் விளைவிக்கும் ஒரு காரியத்துக்குக் காவல்துறை உடந்தையாவதும் குற்றமே.

இன்னொரு புறத்தில், காவல்துறையின் அத்தனை முயற்சிகளும் காழ்ப்புணர்வின் அடிப்படையிலானவை என்றும், ஜெயேந்திரர் மீதான வழக்குகள் எல்லாமே ஜோடிக்கப்பட்ட பொய் வழக்குகள் என்றும் கட்சி கட்டிக்கொண்டு சில பத்திரிகையாளர்கள் எழுதுகிறார்கள்.

எல்லோரும் சற்று வாயை (பேனாவையும்தான்) மூடிக் கொண்டு சும்மா இருந்தால், வழக்கு புதுப் புதுச் சிக்கல்களை எதிர்கொள்ளாமல் விரைந்து நடந்து முடியும்.

குற்றவாளிக்குத் தண்டனை தந்தாக வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இந்த முயற்சியில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அநீதி இழைக்கப்படுவதை, நீதிமன்றம் வேடிக்கை பார்க்கலாமா? குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும் சில உரிமைகள் உண்டு அல்லவா?


கல்கி வழங்கும்
சென்னை ஸ்கேன்
கல்கி துள்ளலில் ஒரு மின்னல்!
(சென்னை நகருக்குள் மட்டும்)

8 பக்கங்கள்
12 டிசம்பர் 2004 இதழுடன் இலவச இணைப்பு

"ஓர்க் பண்ணாம ஓப்பி அடிக்கிறாங்க!"



"காதலிக்கும் ஆசையில்லை கண்கள் உன்னைக் காணும் வரை..' இந்த ரிங்டோன் கொண்ட செல்போன்கள் எல்லாமே ஒரு இடத்துல குவியறதுன்னா, அது அநேகமாக அண்ணாநகர் டவர்பார்க்குன்னு சொல்றோமே, அந்த டாக்டர் விஸ்வேஸ்வரய்யா டவர் பார்க்லதான். அங்க என்னென்னமோ நடக்குதுன்னு லேசா என் காதில் விழ, டைனா குலர் சகிதம் கிளம்பிட்டேன். உள்ளே நுழைஞ்சா இது டவர் பார்க்கா, லவ்வர்ஸ் பார்க்கான்னு சந்தேகம் வந்துடுச்சி. அவ்ளோ பெரிய்ய டவர்ல, அத்தனை காதல் ஜோடிகள்! அவங்க ஒன்னுக்கொன்னு கொஞ்சிக்கிறதும், கெஞ்சிக்கிறதும், அடிச்சிக்கறதும் பார்க்கறதுக்குக் கண் கொள்ளாக் காட்சிதான் போங்க. (பாவங்களா! எனக்கு இதுவரை லவ் அனுபவமில்லாததால கொஞ்சம் வெட்கம்கூட வந்துடுச்சி என்பதை இங்கே தாழ்மையுடன் கூறிக் கொள்கிறேன்)



அதிலயும் அங்கங்க இருக்குற செடி, புதர் மறைவில் காதல் (!) ஜோடிகள் உட்கார்ந்துகிட்டு அரட்டை அடிக்குறது.. அப்படி.. இப்படின்னு ஜெகஜ்ஜோதியா இருக்கு. விவேக்கைத் தலைவராப் போட்டு 'புதர் ஒழிப்பு வாரியம்'னு ஒன்னு அமைச்சாத்தான் இந்த இடத்தில் மேட்டருக்கெல்லாம் மீட்டர் எகிறாம இருக்கும்ங்கறது இந்த வஜ்ஜுராவதியோட தாட்.

சம்பளத்தையும் வாங்கிகிட்டு, ஓர்க் பண்ணாம ஓப்பி அடிக்கிற பெரும்பாலான மார்க்கெட்டிங் எக்ஸிகியூட்டிவ்களை, அப்படியே லபக்குன்னு பிடிக்க விருப்பமுள்ள எந்தக் கம்பெனி எம்டியும் நேரா இங்க வரலாம். நிறையப் பேர் 'சேஃபா' இங்க உக்காந்து 'தியானம்' பண்ணிகிட்டு இருக்காங்க. அட்லீஸ்ட் டவரைச் சுற்றி உள்ள நீருற்றுகளை, அதாங்க fountainகளையாவது பாசி இல்லாம, நல்ல தண்ணியை வச்சு ஷூன் பண்றாங்களான்னா அதுவும் கிடையாது. முழுக்கப் பாசி படிஞ்சி ஒரே நாற்றமடிக்குது. இதையெல்லாம் சீக்கிரமா சரி பண்ணிடுங்க. இல்லன்னா, ஏற்கனவே ஒரு ரெய்டு வந்தது போல மீண்டும் வந்துச்சன்னா, அதுக்கு வஜ்ஜுராவதி பொறுப்பல்ல!

- ச்சோ ஸ்வீட் வஜ்ஜுராவதி

ராஜன்

அண்ணாநகர் F.I.R.

அண்ணாநகரில் காணப்படும் ஒரு விநோதம் - இங்கு பெரும்பாலானவர்கள் மேல்தட்டு மக்கள் என்பதால் தமிழில் பேசக் கூச்சப்பட்டு, தங்கள் குழந்தைகளிடம் ஆங்கிலம் மட்டுமே பேசுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதனை அண்ணாநகரில் எங்கும் காணலாம்.

ஃபோக்கஸ்



அண்ணாநகர் அதிர்ச்சி


• சேம. நாராயணன்

சென்னை மாநகரில் இருக்கின்ற மொத்த மாநகராட்சி துவக்கப் பள்ளிகள் 163, நடுநிலைப் பள்ளிகள் 119, உயர் நிலைப்பள்ளிகள் 39, மழலைப் பள்ளிகள் 30, ஒட்டுமொத்தமாக 347 என்று 'ரமணா' விஜயகாந்த் பாணியில் மூச்சிரைக்க புள்ளி விவரம் சொன்னாலும், சென்னையின் பிரதான இடங்களுள் ஒன்றான அண்ணாநகருக்கென்று பிரத்யேகமாக ஒரு மாநகராட்சிப் பள்ளியும் இல்லை என்பது, இப் பகுதி மக்களின் நீண்டநாள் குறை. நகர் என்று ஒன்றை நிர்மாணித்தால் அப்போது பள்ளிக்கு என்று இடம் ஒதுக்கப்படும். ஆனால் அந்த இடமானது, தனியார் பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்டு விட்டதுதான் இந்தக் குறைக்குக் காரணமென்றும், இதற்கு உடந்தையாக இருப்பது மாநகராட்சிதான் என்றும் குற்றம் சுமத்துகின்றனர் இப் பகுதி மக்கள். இந்தத் தகவல் நமக்கு அதிர்ச்சியூட்ட, உடனடியாக இவ் விவகாரத்தை மாநகராட்சியின் கல்வி நிலைக் குழுத் தலைவர் சேம. நாராயணனிடம் கொண்டு சென்றோம்.

முதலில் "நீங்கள் சொல்வது தவறு. அதற்கான வாய்ப்பே இல்லை" என்றவர், பின்னர் துறை சார்ந்த கோப்புகளையும், தகவல்களையும் ஆராய்ந்துவிட்டு, "நீங்கள் கூறுவது சரிதான்" என்று ஒப்புக்கொண்டார். "இதற்குக் காரணம் என்ன? தீர்வு என்ன? எப்படித் தீர்வு காண உள்ளீர்கள்?" என்று தொடர்ந்து கேட்டதற்கு அவரளித்த விளக்கம் இதோ:

"மாணவ - மாணவிகள் கல்வி பயில்வதற்கு 155 வட்டங்களிலும் மாநகராட்சிப் பள்ளிகள் தேவை என்ற உங்கள் கருத்தை யாரும் மறுக்க முடியாது. நீங்கள் கோடிட்டுக் காட்டும் பகுதியிலிருந்து, 'பள்ளி தேவை' என்று இதுவரை எந்த எழுத்து மூலமான விண்ணப்பமும், எவர் சார்பாகவும் சென்னை மாநகராட்சிக்கு வந்ததாகத் தெரியவில்லை. ஒருவேளை அப் பகுதியில் தனியார் பள்ளிகள் நடத்தப்பட்டு வருவதால், மாநகராட்சிப் பள்ளிகள் தேவையென யாரும் கோரிக்கை வைக்காமல் இருக்கலாம். மற்றொன்று, அப் பகுதியில் வாழும் மக்களின் தரமும் அந்தஸ்து சீரியாக உயர்வாக இருப்பதும் காரணமாக இருக்கலாம். இருப்பினும் இதுபற்றி கல்வி நிலைக்குழு கூட்டத்தில் விவாதித்து, பின்னர் மன்றக் கூட்டத்தில் இதுபற்றிப் பேசுகிறோம். ஆனால் அதற்கு முன்னர் அப் பகுதி மக்களிடமிருந்து எழுத்து மூலமாக விண்ணப்பமொன்று முறைப்படி வருவது, எங்களுக்குப் பேருதவியாக இருக்கும். மேலும் இது போன்று எந்தெந்த வட்டங்களிலெல்லாம் மாநகராட்சிப் பள்ளிகள் இல்லை என்பதை ஆராய, தேவையான நடவடிக்கைகளை எடுக்கக் கோரி மாநகராட்சிக்குப் பரிந்துரை செய்யப்படும்."

இப் பிரச்னைக்கு மாநகராட்சி என்ன செய்யப் போகிறது என்று சென்னை மாநகராட்சி மன்ற ஆளும் கட்சித் தலைவர் குமார் பாபுவிடம் கேட்டபோது,

"அண்ணாநகரில் மாநகராட்சிப் பள்ளிகள் இல்லாவிட்டாலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் குறிப்பாக 63, 64 ஆம் வட்டங்களில் மாநகராட்சிப் பள்ளிகள் இருக்கின்றன. அண்ணாநகரில் வசிக்கும் குழந்தைகள் இப் பள்ளிகளில் வந்து படித்துக் கொண்டுதான் இருக்கின்றனர். மேலும் இப் பகுதியிலுள்ள தனியார் பள்ளிகளும் முறையான அனுமதியுடன்தான் இயங்குகின்றன. இதையும் மீறி மாநகராட்சிப்பள்ளி தேவையென்றாலும், அதற்கான இடமேதும் மாநகராட்சி வசம் இல்லையே" என்றவரை, "ஏன் வேறொரு இடத்தை மாநகராட்சி முறைப்படி கையகப்படுத்தலாமே!" என்று இடைமறித்துக் கேட்டதற்கு,

"மாநகராட்சிப் பள்ளி தேவை என்று பொதுமக்கள் முறைப்படி கோரிக்கை வைக்கும் பட்சத்தில் அதனை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க மாநகராட்சி முயற்சிக்கும்" என்று கூறி விடை கொடுத்தார்.


• குமார் பாபு

அண்ணாநகரில் மாநகராட்சிப் பள்ளி இருக்கிறதா - இல்லையா என்று இதுவரை ஆய்வேதும் செய்து தெரிந்து கொள்ளாத மாநகராட்சி நிலைமையைத் தெளிவாக எடுத்துக் கூறிய பின்னரும் 'எழுத்து மூலம் முறைப்படி' என்றெல்லாம் பேசுவது ஏனோ????

✍ இரா. முத்துக்குமார்

பல்கேரிய மல்கோவா!

'ஜா ஜா ஜீ ஜ்ஜா ஜா ஜா' என்று இரண்டு பேர் ஜெஃப்ரீஸில் ஏதோ பல்கேரிய மொழி போல் ஒலித்த பாடலைப் பாடிக்கொண்டிருந்தார்கள். அருகே சென்று விசாரித்தால்... அட... உண்மையாகவே பல்கேரியப் பாடல்கள்தான். பாடியவர்களும் பல்கேரியர்கள்தான்.

பல்கேரியாவில் இந்தப் பாடல் ரொம்பப் பிரசித்தமாம். அந்த ஊர் பெப்ஸி உமாவிடம் ஃபோன் செய்பவர்கள், இந்தப் பாடலைத்தான் அடம் பிடித்துக் கேட்பார்கள் போலும்.

அரும்பாக்கம் ஜெஃப்ரீஸில் இப்படித்தான் புதிது புதிதாக 'இஞ்ஜா வஜ்ஜா' இசை, டின்னோ என்று ஏதேதோ வது நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டே இருக்கிறார்கள். சென்னையில் தொடங்கப்பட்ட முதல் பப் இதுதான். கேளிக்கை, கலைக்க, நிறைய உணவு வகை, விளையாட்டு வசதி, பில்லியர்ட்ஸ். கேட்பதற்கு இருக்கவே இருக்கிறது 'ஜா ஜா ஜீ ஜ்ஜா ஜா ஜா'.

குட்டிக் குட்டியாக விசில் அடித்துக் கொண்டு, எல்லோரையும் ஓரக் கண்களால் ரசித்தபடி பாடிக் கொண்டேயிருந்தார்கள் பல்கேரிய இருவர். இந்தப் பெண்களின் பெயர்களை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா? இதோ... ஒருவரின் பெயர் மரியா ஆன்ஜெலோவா டாஜேவா. இன்னொருவர் ஸ்வெடானா இலிலோவா விலாய்கோவா. எவ்வளவு அழகாக, மல்கோவாவில் ஒரு வெரைட்டி மாதிரி இருக்கிறதல்லவா? அதுதான் பல்கேரியா.

✍ கங்கா



அண்ணாநகர் F.I.R.

ஐஏஎஸ் படிப்பவர்களுக்காக அரசு பயிற்சி மையம் இங்குள்ளது. தனியார் பயிற்சி மையங்களும் நிரம்பி வழிகின்றன.

பூமராங்

✉ சமுதாய அக்கறையோடு சி.ஐ.டி. பகுதியில் பாரதி பாலகரின் சீரிய சிந்தனைச் சிதறல்கள் அருமை.

- ஆர். நாகராஜன், சென்னை - 117.

✉ சீரியும் - பாம்புமா மோத விட்டுட்டு கடைசியிலே 'வெள்ளை'க் கொடியை ஆட்டிப் புட்டீகளே! தெற்கு - வடக்கு 'நூக் கடல்'லைத்தான் சொல்றேன்!

- சிம்மவாஹினி, வியாசர் நகர்




உங்கள் கருத்துகளை chennai scan@kalki weekly.com® மெயிலலாம்.

கருகும் துளிர்கள்

குழந்தைத் தொழிலாளர்கள் பற்றி நீட்டி முழக்கும் நாம், அவர்கள் தலைமீது கத்தியாய்த் தொங்கிக் கொண்டிருக்கும் 'பாலியல் கொடுமை' பற்றி அதிகம் என்ன, குறைந்தபட்ச சிந்தனையைக் கூட செலுத்துவதில்லை. அதனால் இன்று இவ்விவகாரம் விஸ்வரூபமெடுத்து அவர்கள் முன்நின்று மிரட்டிக் கொண்டிருக்கிறது. இது குறித்து மேலும் விளக்கம் கேட்டு அண்ணாநகரில் இருக்கும் 'துளிர்' என்ற தொண்டு நிறுவனத்தை அணுகியபோது,

"பாலியல் கொடுமையன்னாலே கற்பழிப்புன்னு சொல்ல முடியாது. ஒரு குழந்தையை (18 வயதுக்குட்பட்ட வயதுமே குழந்தைதான்) ஒருவர் தன்னுடைய பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளப் பயன்படுத்துவது பாலியல் கொடுமையே. இதைச் செய்பவர்களில் தொண்ணூறு சதவீதம் பேர் அக்குழந்தைக்கு நன்கு அறிமுகமான ஆணோ, பெண்ணோதான். இதன் காரணமாகவே தனக்கு ஏற்பட்ட கொடுமைகளை பெற்றோரிடம் சொல்ல குழந்தைகள் பயப்படுகின்றனர். இன்றும் சில இடங்களில் குழந்தைகள் மனம் விட்டுக் கூறினாலும், அதனை பெற்றோர் நம்புவதில்லை. இந்த மூட நம்பிக்கைதான் இந்த விவகாரத்தை இத்தகைய அபாயத்திற்குக் கொண்டு வந்துள்ளது."



இதனால் எப்படியெல்லாம் குழந்தைகள் பாதிக்கப்படறாங்க..?

"உடல் ரீதியான்னு பார்த்தா நடப்பதில் - அமர்வதில் மாற்றம் தென்படும். சில விவரிக்க முடியாத அதிருதிகள் தென்படும். உணர்வு ரீதியாக என்றால், தேவையற்ற முறையில் பயம் கொள்வது, குற்ற உணர்வுடன் இருப்பது, அடுத்தவர் மீது வெறுப்பினைக் காட்டுவது இப்படி. இன்னொரு முக்கியமான பாதிப்பு 'Post Traumatic Stress Disorder' என்ற நோயால் பாதிக்கப்படுவது - இதன்படி ஒருவருக்கு இளம் வயதில் ஏற்பட்ட பாலியல் கொடுமையானது, சுமார் 20 வருடங்கள் கழித்து மீண்டும் நினைவுக்கு வந்து மன உளைச்சலுக்கு ஆளாவது. அடுத்து நடத்தை ரீதியாக - தனக்கு நடந்தது சரியா- தவறா என்று கூடத் தெரியாமல் அதனை அடுத்தவர்களிடம் முயற்சிப்பது, கல்வியில் கவனக் குறைவு இப்படி நிறைய சொல்லலாம்."

இதைக் கட்டுப்படுத்த ஒரே வழி, தேவையான விழிப்புணர்வை ஏற்படுத்துவது. இதனைத் துளிர் அமைப்பானது ஆசிரியர்களையும் பெற்றோரையும் நேரில் சந்தித்து, இது போன்ற சமயங்களில் குழந்தைகளுக்கு எப்படியெல்லாம் நேசக்கரம் நீட்டி அவர்களை இக்கொடுமையிலிருந்து மீட்டெடுப்பது என்று பிரசாரம் செய்து வருகிறது. இதற்காக பிரத்யேக பயிற்சியேடுகள், கேசட்டுகளை உருவாக்கியுள்ள இத் 'துளிர்' அமைப்பின் தொலைபேசி எண்: **26207269**

✍ ஸ்வரா

அண்ணாநகர் F.I.R.

சென்னையிலுள்ள அனைத்து பிரபல ஷோரூம்களும் வரிசையாக இருக்குமிடம் அண்ணாநகர். எந்த ஒரு கடைகளும் இங்கு கிளைகள் திறக்காமல் இருப்பதில்லை. சமீபத்தில் நல்லி சில்க்ஸ், ஷுவர்ஸ்சில் போன்றவை திறக்கப்பட்டுள்ளன. இங்குள்ளவர்கள் பேரம் பேசுவது குறைவு; தரம் மட்டுமே பார்ப்பார்கள். விலையைப் பற்றி கவலையே படமாட்டார்கள் என்கிறார்கள் வணிகர்கள்.

பொலிட் பீரோ



• வீரா.. வீரா.. என்று அம்மாவின் செல்வாக்கு திடீரென உச்சத்துக்குச் செல்வதும், ஜெய.. - ஜெயே.. என சட்டென்று அதல பாதாளத்துக்குச் செல்வதும் தொடர்கதையாகி வருகிறதல்லவா? இந்நிலையில் ஆட்சி மீதும், கட்சி மீதும் மக்கள் வைத்துள்ள நம்பிக்கை (!) குறித்து தெரிந்து கொள்ள, இரு முனைகளிலிருந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளனவாம். இதை வைத்துத்தான் அடுத்த கட்டமானது நிர்மாணிக்கப்படுமாம்.

• வள்ளுவர் கோட்டத்தில் சென்ற வாரம் ஓர் நெஞ்சைப் பிழியும் சம்பவம். தமிழ்நாடு நாற்காலி பின்னும் தொழிலாளர்கள், ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, கொளுத்தும் வெயிலில் உண்ணாவிரதம் மேற்கொண்டனர். இதில் பங்கேற்ற அனைவருமே பார்வையற்றோர் - ஆனால் இவர்களுக்கு ஆதரவாக அங்கு வந்து குரலெழுப்ப 'வோட்டு வேட்டையாடும்' ஒரு அரசியல்வாதிகூட முன் வராதது ஏனோ?

• இந்த ஆண்டும் அம்பேத்கர் நினைவு நாளுக்காக பல்வேறு தலித் அமைப்புகள் சார்பில் சுவர் விளம்பரம் எழுதப்பட்டபோது, வழக்கமாக தி.மு.க.வினர் எழுதும் இடங்களில் எல்லாம் சென்னை புறநகர்ப் பகுதிகளில் அரசியல் நடத்தும் கட்சியே விளம்பரம் எழுதியிருந்தது. மற்ற கட்சிகள் சென்னைக்குள் தலை தூக்குவதைத் தடுக்கவே தங்களுடைய இடத்தில் அக் கட்சியினருக்கு விட்டுக் கொடுத்து, தங்களை ஒதுக்க முயன்றுள்ளனரோ என்று சந்தேகிக்கின்றனராம் மற்ற தலித் அமைப்புகள்.

• சென்னையில் உள்ள ரத்தங்களாலும், காக்கிகளாலும் அதிகமாக சந்தேகப் பார்வையும் கண்காணிக்கப்பட்டவர் சமீபகாலமாக வாயிட்ஸ் சாலைக்கு வந்து போகும் குடந்தைக்காரர் தானாம். எங்கே இவரே ஒரு வேளை பட்சியாக மாறி விடுவாரோ என்பதுதான் அவர்களுடைய சந்தேகமாம். ராம... ராம...

✍ கலை

டாக்கீஸ் டாக்

தியேட்டர் கிடையாது

மேட்டுக்குடி மக்கள் வாழும் அண்ணாநகரில் இன்று ஒரு திரையரங்கு கூட கிடையாது என்பது இதன் ஆச்சர்யங்களில் ஒன்று. இரண்டு வருடங்களுக்கு முன்பு, ரவுண்டானா அருகில் 'கிராண்ட்' என பழைய திரையரங்கம் இருந்தது. இறுதியில் மக்கள் ஆதரவு இல்லாததால் அதுவும் மூடப்பட்டு, தற்பொழுது அந்த இடத்தில் புது கார் ஷோரூம் திறக்கப்பட்டுள்ளது. இதனால் அண்ணாநகர் மக்கள் படம் பார்க்க வேண்டுமென்றால், கோயம்பேடில் உள்ள ரோகிணி காம்ப்ளெக்ஸ், கீழ்பாக்கத்திலுள்ள 'சகா', 'சங்கம்' மற்றும் புரசையிலுள்ள அபிராமி காம்ப்ளெக்ஸ், இவற்றைத்தான் நம்பியிருக்கின்றனர். "நல்லவேளை, திரையரங்குகள் இல்லாததால் அண்ணாநகரில் ட்ராபிக் நெருக்கடிகள் அவ்வளவாக ஏற்படுவதில்லை" என்று பெருமூச்சு விடுகிறது அண்ணாநகர் B-2 காவல்நிலையம்.

பிரபலமாக்கிய சினிமா!

அண்ணாநகர் ஒன்றும் சென்னையின் மையப் பகுதியில் அமைந்திருக்கும் பகுதி கிடையாது. இதன் பல வார்டுகள் சென்னை சிட்டி லிமிட்டுக்குள்ளேயே அடங்காது. இந்த நிலையில் அண்ணாநகர் பகுதியை ஆரம்பக் காலங்களில் பிரபலப்படுத்திய விஷயங்களில் ஒன்று - 'அண்ணாநகர் முதல் தெரு' படம்.

ஆர். சுந்தர்ராஜன் இயக்கத்தில் சத்யராஜ் - ராதா - அம்பிகா நடித்து சூப்பர் ஹிட்டான இந்தப்படம் அதன் காதுக்கினிய பாடல்களும், 1988ல் பட்டிதொட்டி முழுக்க அண்ணா நகரின் புகழைப் பரப்பி விட்டது.

(ஆனாலும் இந்தப் படத்தின் ஒரு காட்சி கூட அண்ணாநகரில் எடுக்கப்படவில்லை)


அபிராமி, மும்தாஜ் மற்றும் கேமிராமேன் ஜீவா என கோடம்பாக்கம், தி.நகர், சாலிகிராமம் போலில்லாமல், மிகக் குறைந்த அளவிலேயே தமிழ் சினிமா நட்சத்திரங்கள் இங்கு குடியேறியுள்ளனர்.



சூர்யா ஏன்?

பிரபல சைல்டு ஸ்பெஷலிஸ்டான டாக்டர் ராமலிங்கம், தமது கே.கே.ஆர் கிளினிக்கைத் தற்பொழுது வேளச்சேரியிலும் திறந்து வைத்திருக்கிறார். இதிலுள்ள விசேஷ அம்சம், வேளச்சேரி மருத்துவமனையைத் திறந்து வைத்தது 'பெருமகன்' சூர்யா.

கமர்ஷியல் வணிக வளாகங்களை நடிகர்கள் திறந்து வைப்பது நடைமுறை வழக்கம். "இதென்ன, ஒரு மருத்துவமனையை நடிகரைக் கொண்டு திறந்து வைத்திருக்கிறீர்கள்" என்று டாக்டர் ரவி ராமலிங்கத்திடம் கேட்டோம். "இதில் விசேஷம் ஒன்றுமில்லை. நடிகர் சிவகுமார் அப்பாவுக்கும் (டாக்டர் ராமலிங்கம்) எங்கள் குடும்பத்துக்கும் முப்பது வருடங்களுக்கும் மேலாக பழக்கம். சூர்யாவையும் சிறு வயதிலிருந்தே நாங்கள் அறிவோம். அவர் இன்றைக்கு தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரென்பதால், அனைவரின் சாய்ஸும் சூர்யாவாக இருந்தது. மற்றபடி இதில் எந்த கமர்ஷியல் உள் நோக்கம் இல்லை" என்று பதிலளித்தார்.



பப்பி



ரவுண்டானா அருகிலுள்ள 'காபி டே' தமிழ் சினிமாக்காரர்களுக்கு பிடித்த ஸ்பாட். பணக்கார ஹீரோவும் ஹீரோயினும் கண்களால் காதல் மொழி பேசிக் கொள்ள வேண்டுமென்றால், காமிராவைத் தூக்கிக் கொண்டு நேரே இங்குதான் வருவார்கள். 'ஆய்த எழுத்து' படத்தில் சித்தார்த்தும் த்ரிஷாவும் காபி கப்களை மோதிக் கொண்டே 'சாட்' செய்யும் காட்சி இங்குதான் படமாக்கப்பட்டது.



சுடிதார், ஜீன்ஸ், அமெரிக்கன் இங்லீஷ் என்று தோற்றத்தில், வெளிப் பார்வைக்கு நவநாகரிகமாக வாழும் யுகத்தில் அண்ணாநகர் வள்ளியம்மாள் கல்லூரியில் படிக்கும் மாணவிகள் சேலை மட்டுமே உடுத்துகிறார்கள். நேரடியாக அதன் முதல்வரிடம் இது பற்றிக் கேட்டோம்.

"இதன் நிறுவனர் பரமசிவானந்தன் பச்சையப்பன் கல்லூரியின் தமிழ் துறையில் தலைவராக இருந்தார். அதனால் 87ல் இந்தக் கல்லூரியை நிறுவிய பொழுது, தமிழ் பண்பாட்டைக் கட்டிக் காக்க மாணவிகள் சேலை மட்டும்தான் உடுத்தி வர வேண்டும் என்று கட்டளைப் பிறப்பித்தார். இன்று எங்கள் கல்லூரியில் ஆயிரத்து எழுநூறு பேர் படிக்கின்றனர். அத்தனை பேரும் சேலை உடுத்தியே தினமும் கல்லூரிக்கு வருகின்றனர். முதலில் சேரும்பொழுதே அப்ளிகேஷனில் இந்த விதிமுறையைச் சொல்லி விடுவதால் யாரும் மறுப்போ, எதிர்ப்போ தெரிவிப்பதில்லை. இதனால் வட இந்தியப் பெண்கள் எங்கள் கல்லூரியில் படிப்பதில்லை. 'இதுவரைக்கும் சேலையே கட்டாத எங்க பொண்ணு இப்போ தினமும் சேலை கட்டுவது ஆச்சர்யமாக இருக்கு' என்று எங்களிடம் பகிராத பெற்றோர்களே கிடையாது. மறைந்த எம்.ஜி.ஆர் முதலமைச்சராக இருந்தபொழுது இது தொடர்பாக அனுப்பிய பாராட்டுக் கடிதம் எங்களது பொக்கிஷம்" என்றார் பெருமிதத்தோடு. இங்கு வந்து ஒருமுறை பார்த்திருந்தால் 'செந்தமிழ் நாட்டு தமிழச்சியே, சேலை உடுத்தத் தயங்குறியே' என்கிற பாடலின் வரி தோன்றாமலே இருந்திருக்கும்.

செந்தில்

தங்கா

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் ஆபீசர்கள், ராணுவ வீரர்கள், அரசு உயர் அதிகாரிகள், பிரபல டாக்டர்கள், பிஸினஸ் மேக்னெட்கள், பிரபல இந்நாள், முன்னாள் மந்திரிகள், நடிகர்கள்... என வி.ஐ.பிகளின் சொர்க்கபுரிதான் அண்ணா நகர். சென்னையிலேயே அதிகமாக கார் புழங்குவது இந்த ஏரியாவில்தான். அண்ணா நகரின் பெரும்பாலான தெருக்களில் ஆள் நடமாட்டமே இல்லாததற்கு காரணம், அனைவர் வீடுகளிலும் டிரைவர், கார் இருப்பதுதான்.

அண்ணாநகர் F.I.R.



நாஜு இடமும், நாற்பது ஃபிகர்களும்!

“ஆயிரம் லிட்டர் கச்சா எண்ணெயோட விலை - 49 டாலர். நேத்து பெட்ரோல் வித்திட்டிருந்தது 39ரூபாய்க்கு. ஆனா இன்னைக்கோ ரூ. 42.55. போன வருஷம் நம்ம ஆயில் கம்பெனிகள் கட்டிய லாபம் 23,000 கோடி ரூபாய். ஆனால் மண்ணெண்ணெய் மானியத்தால் ஏற்பட்ட நஷ்டமோ, 4000 கோடி ரூபாய். வோ...”

க்ரீச்... நல்லவேளை! புள்ளி விவரங்களை ஒப்பித்துக் கொண்டிருந்த ராம்குமாரை சடன்பிரேக் அபாயச் சங்கிலி எல்லாம் உபயோகித்து நிறுத்தினர் சரவணன், காயத்ரி மற்றும் ஷோபனா. நால்வரும், அரும்பாக்கம் D.G வைஷ்ணவ் கல்லூரியில் எம்பிஏ படிக்கும் இவர்கள் பெட்ரோல் விலை உயர்வு பற்றி விவாதிக்க ஆரம்பித்தனர். கெட், செட், கோ...

காயத்ரி: யூ ஸீ... ஆக்சுவலி வாட் இஸ் கவர்மெண்ட் திங்கிங் ஸோ...

ராம்குமார்: தமிழ், தமிழ்.

காயத்ரி: யா, ஓகே. வாட்ஸ் கோயிங் ஆன் ஹியர். பெட்ரோல் போடறதவிட நேரா போய் தி.நகர் ஜுவல்லரி ஷாப்ல ரெண்டு பவுன் தங்க நகை வாங்கிடலாம் போலிருக்கே.

சரவணன்: ஹே, இந்த காலேஜ் ஸ்டூடண்ட்ஸ்க்கெல்லாம் எவ்வளவு நஷ்டம் தெரியுமா. பாக்கெட் மணி இடிக்குது. பங்க்ல “தலைவா, அக்கௌண்ட் வைச்சுக்கோ. இந்த மாசம் முடிஞ்சா தரேன்”னா பதில் பேசமாட்டேங்கிறாங்க. போராம சத்தியமங்கலம் காட்டுக்குப் போய் நானும் சந்தன மரம் கடத்துனா தான் சரிவரும் போலிருக்கு.

ஷோபனா: ரைட். ‘காடு இருந்து கெடக்கிறது’ (அழகாகப் பாடுகிறார்) எப்பா, எதுக்கு பைக் ஓட்டுறீங்க? புஜிதி. ஓட்டடை கா இடுக்கிற உங்க தாத்தா சைக்கிளை யூஸ் பண்ணலாமே. இல்லாட்டி இருக்கவே இருக்கு ‘நட’ராஜா சர்வீஸ்.

ராம்: அந்த புன்று! எங்க வீட்ல பைக் வாங்கி கொடுத்த போதே “நாஜு இடம் சுத்தி, நாற்பது விஷயங்களைக் கத்துக்கிட்டு உலகத்தைப் பத்தி நல்லா தெரிஞ்சுக்கடா கண்ணு”ன்னு ஸ்டிரிக்ட்டா சொல்லிட்டாங்க.

ஷோபனா: யாரு, நீங்க! ஆமாமா. நாஜு இடம் சுத்தி நாற்பது ஃபிகரும் கணக்கு பண்றதுக்கு நிச்சயம் வண்டி வேணும்தான்.

காயத்ரி: ப்ளீஸ், டோண்ட் டைவர்ட். நம்ம கவர்மெண்ட் மண்ணெண்ணெய், சிலிண்டருக்கெல்லாம் நிறைய மானியம் கொடுக்குது. ஆனா அதெல்லாம் எப்படி வீணாகுது. அதேமாதிரி கச்சா எண்ணெயை இப்பவே பூமிக்கும் கீழே ஒரு பூமி இருக்கில்லையா? அதுக்கும் பல ஆயிரம் அடி ஆழத்திலிருந்துதான் சுரண்டி சுரண்டி எண்ணெய் எடுத்திட்டிருக்காங்களாம்.

ஷோபனா: இதனால பெட்ரோல் விலை இன்னமும் கூட உயரலாம். நாம அதுக்கும் பதிலா கார், டூவீலர்ல CNG கேஸ் உபயோகப்படுத்தலாம். டெல்லியிலே இது முறையா நடந்திட்டிருக்கு.

சரவணன்: விலை உயர்வே முக்கியமா நான்னு சொல்றாங்க.

பெட்ரோல், மண்ணெண்ணெய், எரிவாயு சிலிண்டருக்குப் பதிலா சாண எரிவாயு, காட்டாமணக்கு மரத்திலிருந்து ... வழிமுறை கண்டுபிடிக்க எல்லோரும் இல்லாட்டி நம்ம இந்தியாவோட எதிர்காலம் ‘புஸ்’ன்னு ஆயிடும்.

ராம்: ஓகே கைஸ். நாளைக்கு நான் மகாபலிபுரம் போறேன். அதனால பெட்ரோல் டாங்க்கை ஃபுல்லாக்கணும். மச்சான் கிளம்பலாம்.

ஷோபனா: ம்... ‘டெல்லி பார்லிமெண்ட்’ லிருந்து ‘சென்னை ஸ்டேட்’ வரைக்கும் பெட்ரோல் உயர்வை எதிர்த்தாலும், நடக்கிறது நடந்துட்டு தான் இருக்கு பார்த்தியா... ஓகே. என் ஸ்கூட்டியும் ரிசர்வ்ல இருக்கு. நானும் பெட்ரோல் போடணும். காயு, வா போலாம்.

(விர்ர்ட்ட்... என விரைகிறார்கள்)

✍ ச.நு.கண்ணன்

📷 முகில்

கால்களின் காதுகளுக்கு!

ரீபோக், உட்லேண்ட், அடிடாஸ், ஆக்ஷன்... இப்படி அனைத்து கம்பெனி ஷூஸ், செருப்புகள் எல்லாம் ஒரே இடத்தில் உங்கள் கால்களுக்குக் கிடைக்க வேண்டுமா? உங்கள் கால்களை அண்ணாநகர் புளுஸ்டார் அருகிலுள்ள Grafts Life Style ஷோ ரூமுக்கு அனுப்புங்கள். (நீங்களும் உடன் வரலாம்) “பிராண்டட் பொருட்கள் எங்கிட்ட ரொம்பவே கம்மியாகக் கிடைக்கும். அது போக லைஃப் ... இருக்கு. இப்ப ஒரு மாடல் ஷூவோட சைஸ் 8, 9 விக்குதுன்னா, 7, 10 சைஸ் தான் இருக்குன்னா, அதை 20% டிஸ்கௌண்ட்ல கொடுப்போம்” என்கிறார் இதன் ஓனர். பெல்ட், ஆண்களுக்கான டீ ஷர்ட், ட்ரௌசரில், ஜீன்ஸ், ஷர்ட்ஸ், பேக், பெர்ஃப்யூம் என சீசாக உள்ள இக்கடை நடுத்தர மக்களுக்கான விலையிலும் பொருட்களைக் கொண்டுள்ளது.



✍ முகில்

அஸ்க் பாதிரி வழுக்கிட்டுப் போற அண்ணா நகர் ரோட்டுல புளூஸ்டார் பக்கத்துல வந்ததும், உங்க வண்டி தானா ப்ரேக் புடிச்சிட்டு நிக்கும். காரணம், 1982 முதல் ஸ்வீட்டா தர்பார் நடத்திக்கிட்டு வர்ற பார்வதி பவனோட டேஸ்ட்தான். முந்திரி, பாதாம், பிஸ்தான்னு உசந்த பொருள்களை வைச்சு இவங்க பண்ற வெரைட்டியான ஐயிட்டங்களுக்கு, அண்ணா நகர் மக்கள் பலர் தங்கள் நாக்கையே எழுதிக் கொடுத்திருக்காங்க. அரும் பருடரை வைச்சு தயாரிக்கிற மில்க் மைசூர்பாகு பதத்தின் அச்சா ஹை! டிஃபரெண்ட்டோட அட்டை அக்ரிட்டே பேல் பூரி, பானி பூரின்னு ‘சாட்’ ஐயிட்டங்களை ருசிக்கவும் வசதியிருக்கு. ஞானப் பழமான முருகனின் பக்தரான வாரியாரால் திறந்து வைக்கப்பட்ட இக்கடையில், பல வகை பழச்சாறுகளும் ‘உள்ளேன் ஐயா’ என்கின்றன. பார்வதி பவன் அண்ணா நகரின் சீனியர் டேஸ்ட் காம்!

✍ ஷிவ்

📷 செந்தில்



வரி விளம்பரம்

DIVINE MUSIC

Free Audio Cassette with purchase of Divine Musical Chanting Box Rs. 270 onwards. Classical / Carnatic MP3 / ACD @ 10% Discount. **Janaki & Co.,** Luz corner. Tel: 2494 0450 / 93806 40450.

SPOKEN ENGLISH

உலகிலேயே முதல்முறையாக WALKIE TALKIE. When doing your morning walk learn Spoken English. S.SIVAKUMAR, **+3, Triple 'E'** Excellent English Education. 98843 62450

ஜோதிடம்

ஜாதகம் கணிக்க, முகூர்த்தம் பார்க்க, கல்யாணப் பொருத்தம் நிர்ணயிக்க, ப்ரச்னம் சொல்ல, பொதுப்பலன் அறிய, யோக காலம் தெரிந்து கொள்ள, வார நாட்களில் மட்டும் பகல் 10 முதல் 1 மணி வரை அணுகவும்.


கோமாண்டூர் ஸ்ரீநிவாசன், அன்ட்ரோ ஸ்கொயர், சாஸ்திரி நகர் முதல் மெயின் ரோடு, (வாட்டர் டேங்க் எதிரில், முதல் மாடி), அடையார், சென்னை - 20. தொலைபேசி : 24469160.

இதழகம்

நூலகம் கேள்விப்பட்டிருப்பீர்கள் - இதழகம் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இல்லாவிட்டால் தெரிந்து கொள்ளுங்கள். சென்னை அண்ணா நகர் மேற்கில் உள்ள உதயம் காலனியில் இருக்கிறது தமிழகத்தின் முதல் இதழகம். சரி, அது என்ன இதழகம் - இலக்கண - இலக்கிய நூல்களைப் போன்றே, தமிழகம் முழுவதிலிருந்தும் வெளியாகின்ற அனைத்து நாளிதழ்கள், வாராந்திரிகள், மாதாந்திரிகள் என்று அனைத்தையும் வரிசைக்கிரமமாக சேமித்து வைக்கும் இடம்தான் இதழகம். இதனை உருவாக்கி, நடத்தி வருகிறார் வெற்றிவேல்.

"என்னுடைய 25 வருட கடுமையான தேடல், உழைப்பு இதன் பலன்தான் இந்த இதழகம். இங்கு அரசியல், சினிமா என பத்தொன்பது பிரிவுகளில் இதழ்கள் இருக்கின்றன. 1980க்குப் பிறகு வெளிவந்த அனைத்து இதழ்களின் முதல் இதழும் என்னிடம் உள்ளன. உலகில் நடந்த அனைத்து அற்புத நிகழ்வுகள், மற்றும் சர்ச்சைக்குரிய செய்திகள் தொடர்பான பேப்பர் கட்டிங்குகள் இங்கு உள்ளன" என்று கூறும் இவரிடம் இதழ்கள் மட்டுமின்றி இலக்கண - இலக்கிய புத்தகங்களும் கொட்டிக் கிடக்கின்றன. சுமார்




• வெற்றிவேல்

பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்களைத் தொகுத்து வைத்துள்ள இவர், தம் வீட்டு இட நெருக்கடி காரணமாக ஏராளமான புத்தகங்களை தம் உறவினர் வீடுகளிலும் வைத்துப் பாதுகாக்கின்றார்.

"நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே, ஒரு பகுதியை நூலகங்களுக்கும், மீதமுள்ளவற்றை கனத்த இதயத்துடன் எடைக்கும் போட்டிருக்கிறேன்" என்று கூறும் இவர் வேறெங்கும் கிடைக்கவே வாய்ப்பில்லாத - சர்ச்சைகள் மிகுந்த புத்தகங்களையும் சேமித்து வைத்துள்ளார். குறிப்பாக சாரு நிவேதிதாவின் ஸீரோ டிகிரி புத்தகம் 100 ரூபாய் காப்பி முதல், 30 ரூபாய், 10 ரூபாய் என்று வந்த காப்பி வரை, அனைத்தையுமே கைவசம் வைத்திருப்பதாகக் கூறுகிறார். இவருக்குள்ள ஒரு குணம் தன்னிடமிருக்கும் புத்தகங்கள், இதழ்கள் என அனைத்தையும் முற்றிலுமாகப் படித்து, அதிலுள்ள வரலாற்று, புள்ளி விவரக் குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றைச் சரிபாதி திருத்தி, அந்த இதழகத்திற்கு வந்து படிக்கும் மாணவர்கள் உள்ளிட்ட எவருக்கும் தவறான தகவல் சேராமல் தடுப்பதுதான். ஆராய்ச்சி மாணவர்கள் யாரேனும் இதனைப் படிச்சிங்கன்னா நோட் பண்ணிக்கோங்க. இவரோட செல் : 98401 31457.

(ஆனா ஸீரோ டிகிரி புத்தகத்தை மட்டும் படிக்கலாம்னு போனா உதைபடுவீங்க!)

📷 + ✍ கலை


ஸ்பாட்

அண்ணாநகர் - பரிதி இளம்வழுதி

அண்ணா நகர் என்றதும் உடனே நினைவுக்கு வருவது பேரறிஞர் அண்ணாவின் பெயரில் இருக்கும் ஆர்ச்சும், ரவுண்டா னாவும்தான்.

எங்க கட்சி தொடர்பான எந்தவொரு விஷயம்னாலும் அதைப் பற்றி தகவல் கொடுக் கவோ, அல்லது விவாதிக்கவோ அண்ணா நகர்ல இருக்கும் பொதுச் செயலாளர், பேராசிரியர் மற்றும் பொருளாளர் ஆற்காட்டார் வீட்டுக்கும் போறதுண்டு. குறிப்பா காலை நேரத்துல. பேராசிரியரை யாவது வீட்லயே பார்த்து பேசிட லாம். ஆனா ஆற்காட்டாரை வீட்ல பிடித்து பேசவே முடியாது. அத னால நேரா ரவுண்டானா போய் அங்க வெயிட் பண்ணினா, அவர் வாக்கிங் போற வழியில பேசறது வழக்கம். இப்படி நிறைய தடவை பல முக்கியமான விஷயங்களை ரவுண்டானால பேசியிருக்கோம். அதனால அண்ணாநகர் ரவுண் டானா எனக்கு மட்டுமில்ல - எங்க கட்சிக்கும் மிகவும் முக்கியமான இடமா இருக்கு" என்று சிரிக்கிறார் துணை பொதுச் செயலாளர் பரிதி இளம்வழுதி.

✍ முத்து



📷 ராஜன், எழில்

அண்ணாநகர் F.I.R.

டாக்டரின் நண்பர் ரமேஷின் தற்கொலை, நடிகை விசித்ரா பாலியல் வழக்கிற்காக கைது செய்யப்பட்டது. இன்டர்நெட் மூலம் பாலியல் குற்றங்கள் புரிந்த டாக்டர் பிரகாஷ்... என இவை யெல்லாம் அண்ணா நகரில் நடைபெற்ற சமீபகால பரபரப்புச் சம்பவங்கள்.

'அண்ணா நகரை அக்கு வேறு ஆணி வேராக அலசிக் கொண்டு வா' என்று ஆசிரியர் உத்தரவிட்டதும், என்னுடைய லேப்டாப், கால்குலேட்டர், செல்போன், ரேஷன் கார்ட் எல்லாவற்றையும் அள்ளிப் போட்டுக் கொண்டு ஜூட் விட்டேன். இதோ நான் கண்ட அண்ணாநகர்.



• தாம்பரத்திலிருந்து அண்ணா நகர் வருவதற்கு 70 எண் கொண்ட பேருந்தில் ஏறலாம். அதற்காக ஒரு 40, ஒரு 20, ஒரு 10 (கால்குலேட்டரில் தட்டிப் பார்த்தேன், கணக்கு சரிதான்) என்று பிய்த்துப் பிய்த்து ஏறக்கூடாது. (அது போல் ஏறி நான் நிறைய சிரமப் பட்டிருக்கிறேன்).

• அண்ணா நகர் முதல் தெரு தெரிந்து போல், அண்ணா நகர் கடைசி தெரு என்று கேட்டால் யாருக்கும் தெரியவில்லை. 'ஒரு மாதிரியாக' பார்க்கிறார்கள்.

• அண்ணாநகரில் உள்ள அண்ணாக்களை அவர்களது தம்பிகள் 'அண்ணா' என்று அழைப்பதில்லை. 'டோய்', 'டேய்', 'டுபுக்கு', 'தோடா' என்றெல்லாம் சொல்கிறார்கள்.

• அண்ணாநகர் டவருக்கு ஒரு நாளைக்கு சராசரியாக 43 காதல் ஜோடிகள் வருகை தருகிறார்கள். யாரும் பேரண்ட்ஸைக் கூட்டி வருவதில்லை.

• எங்கு பார்த்தாலும் ஒரே அபார்ட்மென்டாக இருப்பதால், யாருக்கும் யார் முகவரியும் தெரியவில்லை. சரியாக கவனிக்காமல் நான் W-2339 என் கொண்ட ஒருவருடைய வீட்டுக்குப் போய் கதவைத் தட்டி 'W-2339 எங்கேயிருக்கிறது?' என்று கேட்டால், சிறிது நேரம் யோசித்து விட்டு 'தெரியாது' என்று உதட்டைப் பிதுக்குகிறார் அவர்.

• என்னுடைய இந்த ஆராய்ச்சி பூர்வமான ரிப்போர்ட்டை படித்து விட்டு, பெருமிதத்துடன் என்னைப் பார்த்தார் ஆசிரியர். அடுத்த தடவை அநேகமாக என்னை பாங்காக்கோ சுவிட்சர் லாந்தோ அனுப்பப் போகிறார் என்று நினைக்கிறேன்.

✍ இன்பா

தமிழ் உள்ளது!



"மைல் ஏழைத் தாண்டி நான்கு வருடங்களாகிவிட்ட இச்சங்கம், இன்று வரை தனது தமிழ்ப்பணியை தொய்வின்றிச் செய்து வருகின்றது" என்கிறார் இதன் 'தலைவர் கப்பு ரெட்டியார். அப்படி என்ன தமிழ்ப் பணியைச் செய்கிறீர்கள்?' என்றதற்கு, "முடிஞ்ச வரைக்கும் இளைஞர்களுக்காகவும், இளைஞர்கள் பங்கேற்கும் படியாகவும் தமிழ் தொடர்பான கருத்தரங்கம், பட்டிமன்றம், சொற்பொழிவு நடத்துவது தான் இதன் பணி. இதற்காக ஒவ்வொரு மாதமும் மூன்றாவது ஞாயிறன்று, சுமார் மூன்று மணி நேரம் வரை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது இத்தமிழ்ச் சங்கம்" என்று கூறும் இவர் "புதிய புதிய தமிழ் நூல்களை வெளியிடுவதும் இச்சங்கத்தின் முக்கியப் பணி" என்கிறார். ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப் படும் ஆண்டு மலரில் மிகச்சிறந்த தமிழ்க் கட்டுரைகளை வெளியிடச் செய்து, தமிழ்ப் பணியாற்றி வரும் இச்சங்கத்திற்கு தற்பொழுது கணிசமான அளவில் நிதி கைவசம் இருந்தும், இதுவரை ஏனோ தங்களுக்கென்று ஒரு நிரந்தர இடத்தை வாங்கவில்லை. விரைவில் தமிழ்ச்சங்கத்துக்கென ஓரிடத்தை விலைக்கு வாங்கி உங்கள் தமிழ் பயணத்தைத் தொடருங்கள்!

✍ முராரி
📷 ராஜன்

எல்லாக் குரங்குக்கும் வால் உண்டா?

இலக்கியத்திற்கும் நகைச் சுவைக்கும் தூரம் அதிகம் என்று நினைப்பவர்கள் உண்டு. இது உண்மையல்ல.

"பூனைக் குட்டிகளிடம் இருக்கும் ஒரே கெட்ட பழக்கம் அவை வளர்ந்தவுடன் பெரிய பூனைகளாக மாறி விடுவது தான்" என்று குறைபட்டுக் கொள்கிறார் ஆக்டன் நாஷ். எனக்கு பூனைகள் பிடிக்காது என்று மனிதர் ஒற்றை வரியில் சொல்லியிருக்கலாமல்லவா?

"எல்லாக் குரங்குக்கும் வால் உண்டு என்று என்னால் ஒப்புக் கொள்ள முடியாது" என்றார் ஷா. இவர் ஒரு இமாலய கிண்டல்காரர். இதை கவனியுங்கள். "நாம் அனுபவத்திலிருந்து எதை கற்றுக் கொள்கிறோம் என்றால் அனுபவத்திலிருந்து ஒன்றும் கற்றுக் கொள்ள முடியாது என்பதைத் தான்."



"இதமான வானிலை இருக்கும் பொழுது ஒரு குடையை கொண்டு வந்து தாமாக கொடுப்பார்கள். மழை பெய்யத் தொடங்கியவுடன் அதை திருப்பி கேட்பார்கள். இது தான் வங்கி" என்கிறார் ராபர்ட் ப்ராஸ்ட் எனும் கவிஞர்.

எல்லோருக்கும் கிண்டல் செய்வது பிடித்தே இருக்கிறது. இலக்கியவாதிகள் உட்பட. புத்தகங்களை மட்டும் இவர்கள் விட்டு வைத்தார்களா என்ன?

"உங்கள் புத்தகத்தை கையில் எடுத்ததிலிருந்து தொடர்ந்து சிரித்துக் கொண்டே இருக்கிறேன். எப்படியும் ஒரு நாள் அதைப் படித்து விடுவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது" எனும் க்ருச்சோ மார்க்ஸை என்னவென்று சொல்ல?

✍ மருதன்

அன்புள்ள காதலியே,
ஆசை முத்தம் நீ தந்தால்
இன்ப அதிர்ச்சியில்
ஈரமாகும் என் நெஞ்சம்
உன்னை நினைத்து
ஊரை விட்டு வந்தேன்
எங்கெங்கோ தேடினேன்
ஏமாந்து போனேன்
ஐ லவ் யூ' நீ சொன்னால்
ஒன்றாய் வாழலாம்
ஓர் கோடி இன்பம் பெறலாம்
ஔவையார் பாணியில் சென்று
ஃ(ஆய்த எழுத்து) படம்
பார்க்கலாம்!

- வினோத், வடபழனி

மை டியர் லவ் லெட்டர்



இந்த சீசனில் அண்ணா நகரில் மக்கள் கூட்டம் அதிகமாகக் குவியும் இடம் அங்குள்ள ஐயப்பன் கோவில்தான்!

அண்ணாநகர் F.I.R.

சென்னையின் காஸ்ட்லியான பகுதிகளில் ஒன்று அண்ணாநகர். இங்கு ஒரு கிரவுண்டின் விலை ஜஸ்ட் ஐம்பதே லட்சம். டபுள் பெட்ரூம் கொண்ட ஃப்ளாட் குறைந்தது ஆறாயிரம் ரூபாய்க்கு வாடகைக்கு விடப்படுகிறது.

இங்கு மக்கள் அதிகமாகச் செல்லும் சைவ உணவகம் - சரவண பவன், வசந்தபவன் & ஹாட்சிப்ஸ். அசைவத்தில் ரவுண்டானா அருகிலுள்ள அஞ்சப்பர் ரெஸ்டாரண்ட் மக்களின் அமோக ஆதரவைப் பெற்றுள்ளது.

✍ சநகன்

To அடையாறு. வித் லவ்...

ஹாய் சென்னை, நாங்க ஏற்கெனவே சொன்ன மாதிரி, அடுத்த இதழ் மயிலாப்பூர் ஸ்பெஷலா மலரப்போகுது. அப்பப்பா, நாங்க எதிர்பார்த்த மாதிரியே மயிலாப்பூரிலிருந்து சக்கச்சக்கமான ரெஸ்பான்ஸ். இதோ 26.12.04 இதழ் அடையாறு ஸ்பெஷல். என்ன ரெடியாயிட்டீங்களா? அடையாறு மற்றும் அதை சுற்றியுள்ள ஏரியாவோட பிரச்னைகள், சாதனையாளர்கள், விழாக்கள், டேஸ்ட்டாம். உங்க படைப்புகள் எதையும் டிசம்பர் 15ம் தேதிக்குள் எங்களுக்குத் தட்டி விடுங்க. உங்களை நேரில் பார்க்க நாங்க இதோ வந்துகிட்டே இருக்கோம்.

- லஜ்ஜாவதி

முகவரி: சென்னை ஸ்கேன், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 032. ☎போன்: 22345622, 23, 24.
E-mail:chennaiscan@kalkiweekly.com,
chennaiscan@indiatimes.com

பெரிய புள்ளி

அழகழகாய் புள்ளிகள் வைத்து கோலம் போடும் பழக்கமே மறைந்திருக்கும் அபார்ட்மெண்ட் உலகத்தில், எங்கேயும் கோடு, வளைவுகள் எதுவும் பயன்படுத்தாமல் வெறும் புள்ளிகளால் அதி அற்புத ஓவியங்களை உருவாக்குகிறார் பூர்ணிமா. இவர் தற்பொழுது பெங்களூரில் வசித்தாலும், சிறு வயதில் அண்ணாநகரில் வசித்தவர் என்பது இந்த இதழுக்குரிய ஆச்சர்ய விஷயம்.


"நான் பெங்களூர்ல மாஸ்டர் ஆஃப் ஃபைன் ஆர்ட்ஸ் படிச்சு, கோல்டு மெடல் வாங்கினேன். ஆர்ட்ஸ் படிக்கும்போது புள்ளிகளால படம் வரையற டெக்னிக் கத்துத் தருவாங்க. பட், ஸ்டூடண்ட்ஸ் யாரும் இதை சீரியஸாவே கத்துக்க மாட்டாங்க. நான் அப்படியல்ல" என புன்னகை செய்கிறார்.


பெங்களூரில் பிரிட்டிஷ் காலேஜின் அட்வர்டைஸிங் பிரிவின் 'தல' இவர்தான். (அதாங்க ஹெட் ஆஃப் டிபார்ட்மெண்ட்)

இவர் தற்பொழுது சென்னை மியூசிக் அகாடமியில் வைத்திருக்கும் கண்காட்சியில் கர்நாடக சங்கீதத்தில் சாதித்த கலைஞர்களின் படங்களை புள்ளிகளால் வரைந்து பார்வைக்கு வைத்திருக்கிறார். மியூசிக் அகாடமியில் நுழைபவர்களுக்கு இவரின் கண்காட்சி மிகுந்த ஆச்சர்யத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதுவும் முக பாவத்தோடு மிகத் தெளிவாக படம் பிடித்துக் காட்டும் எம்எஸ்ஸின் வரைபடத்துக்குப் பலத்த வரவேற்பு. (டிசம்பர் 30ம் தேதி வரை கண்காட்சி நடைபெறுகிறது)

"வெள்ளைத் தாளில்தான் வரைவேன். இதனால் தேவையான இடங்களில் அப்படியே விட்டுவிட்டால் அதுவே நமக்கு வேண்டிய வெள்ளை நிறத்தைக் கொடுத்து விடும். (உதாரணமாக பற்கள்) ஆர்கிடெக்சருக்கு உபயோகிக்கும் 0.2 mm அளவுள்ள பேனாவைதான் வரையப் பயன்படுத்துவேன். 90 டிகிரி கோணத்தில் பேனாவை வைத்து இப் படங்களை வரைய, நான்கு நாட்களிலிருந்து ஒரு வாரம் வரை ஆகிவிடும்" என்கிறார்.

"இந்த ஆர்ட்டுக்கு பெயர் ஸ்டிப்ளிங். இது அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டு, இன்றைய கம்ப்யூட்டர் யுகத்தின் வழக்கொழிந்த விஷயம். ஆனால் புள்ளிகளால் கோலம் போடும்போது நமக்குக் கிடைக்கிற மனநிறைவு கம்ப்யூட்டர்ல கிடைக்குமா? டெக்னாலஜி வளர்ச்சியால கைகளில் வரையும் பழக்கமே மறைஞ்சிட்டிருக்கு" எனும் பூர்ணிமா, கல்லூரிப் பணி முடிந்தவுடன் பிரைவேட்டாக டிசைனிங் வேலைகளும் செய்து, தனக்கென்று ஒரு பெயரை நிலை நாட்டியிருக்கிறார்.





"பெங்களூர்ல அடுக்குமாடிக் கட்டடங்கள் நிறைய. அதனால சென்னையில்தான் ஜோராடிங்கல் அதிகமா இருக்கு." என்றவரிடம் "சரி, லைஃப்ல நல்லா செட்டில் ஆயிட்டீங்க எப்போ திருமணம்?" என்றதுதான் தாமதம், காலின் பெருவிரலால் தரையில் புள்ளி இல்லாத கோலம் போடத் துவங்கிவிட்டார்.

✍ ச.ந.கண்ணன்
📷 கங்கா



உச்சாணி

Registered with the Registrar of Newspaper of India under No. 10415/57 * Registered No. TN / PMG (CCR) 579 / 03 - 05* Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 *
Registered as a Newspaper in Sri Lanka Supplement to the Kalki issue Dated 12.12.2004

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG
(CCR) 572 / 03 - 05* Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 *
Registered as a Newspaper in Srilanka

